www.padippakam.com

# புது விசை

கலாச்சாரக் காலாண்டிதழ்








## இகான் செலீ

## சிதைந்த சுயத்தின் நவீன உணர்தல்

படிப்பகம்

www.padippakam.com

வாசக நண்பர்களுக்கு....

பெரிய நிதிப்பின்புலம் ஏதுமின்றி நண்பர்கள் சிலரின் ஆர்வத்தையும் சமூக அக்கறையையும் வாசகர்களின் சந்தாவையும் ஆதரவையும் மட்டுமே நம்பி வெளி வருகிற எல்லா இதழ்களும் சந்திக்கிற நெருக்கடியை புதுவிசையும் சந்திக்கிறது.

7வது இதழ் வந்திருக்கவேண்டும். 6வது இதழைத் தந்திருக்கிறோம். கனவுகளுக்கும் நிஜத்துக்குமான இடைவெளி. எனினும் இனியும் திக்கித் திணறாமல் உரிய காலத்தில் உங்கள் கைகளில் புதுவிசை வந்துசேரும். உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

சந்தாக்களை புதுப்பித்தும் நண்பர்களிடம் சேகரித்தும் அனுப்பி நட்புக்கரம் நீட்டுங்கள்.

அதே நம்பிக்கையுடன்

**'புதுவிசை.'**

**புதுவிசை சிறப்பு வெளியீடுகள்**

**தமிழக சமூகப் பண்பாட்டு வரலாறு**

கால வரிசைப்படி எளிய தமிழில் எல்லோரும் வாசிக்கும்படியான **''தமிழக சமூக பண்பாட்டு வரலாறு''** ஒன்று இல்லையே என்கிற வசை கழியும்படியாக....

சங்ககாலத் தமிழர் வாழ்வு முதல் -இன்றைய சமகாலப் பண்பாட்டு வரலாறு வரையிலும் 32 பக்கங்களில் ஒரு சிறுநூல் என்ற வழக்கமான அளவிலும் வடிவிலும் 30 க்கு மேற்பட்ட புத்தகங்களில் -

ஆ. சிவசுப்பிரமணியன், முனைவர். தொ. பரமசிவன்,முனைவர். கே.ஏ. மணிக் குமார், பேரா. ச. மாடசாமி, ரவிக்குமார்,த.வி. வெங்கடேஸ்வரன், டாக்டர். ராமானுஜம், டாக்டர் தி. சுந்தரராமன் இன்னும்.....என பல்துறை அறிஞர்கள் எழுத எழுத - மாதம் ஒரு சிறுநூல் என்ற கால எல்லையில் 'புதுவிசை'வெளியிடுகிறது.

இச்சிறுநூல்கள் காலவரிசைப்படி வெளிவராது. எழுதி முடிக்கும் வரிசையில் வந்து கொண்டே யிருக்கும். மொத்தமாக தொகுக்கும்போது காலவரிசை கிடைத்து விடும்.

புதுவிசை பத்தாண்டு சந்தாதாரர்களுக்கு இப்பிரசுரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.பிற நண்பர்கள் 10 பிரதிகளுக்குக் குறையாமல் வாங்கினால் தபாலில் அனுப்பப்படும்.

இப்பிரசுரங்களின் வெளியீட்டை வணிகரீதியாகப் பார்க்காமல் பரவலாக மக்களிடம் சென்று சேரவேண்டியவை என்ற உணர்வுடன் நண்பர்கள் சிரமம் பாராது 10 பிரதிகளுக்கு பணம் அனுப்பி பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

இப்பிரசுரத்தில் பின்அட்டை விளம்பரம் ரூ 4000- விளம்பரம் பெற்று அனுப்ப நண்பர்களையும் வாசகர் களையும் உரிமையுடன் கோருகிறோம்.

இவ்வரிசையில் முதல் பிரசுரம்

**''தமிழக நாட்டார் சமயங்கள்''**- **ஆ.சிவசுப்பிரமணியன்** ஏப்ரல் இறுதியில்.

ஒவ்வொரு பிரசுரத்தின் விலை- ரூ **5** (ஒரு பிரதிக்கு)

பணம்/விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி.

புது விசை, அஞ்சல் பெட்டி எண் : 66
டெலிகாம் குடியிருப்பு, பஸ் ஸ்டாண்ட் எதிர்புறம், ஒசூர் - 635 109.

www.padippakam.com





புது

விசை

கலாச்சாரக் காலாண்டிதழ்

ஏப்ரல் 2001

6

அஞ்சல் பெட்டி எண் : 66
டெலிகாம் குடியிருப்பு,
பஸ் ஸ்டாண்ட் எதிர்புறம்,
ஒசூர் - 635 109.
தொலைபேசி : 04344 - 44933
தொலைநகல் : 20500

தனி இதழ் : விலை ரூ. 30
ஆண்டு சந்தா : ரூ.1000
வெளிநாடு : ரூ.350

பதிப்பாசிரியர் : எஸ். மீனாவதி

ஆசிரியர் : ஆதவன்

இயற்கை நினைவூட்டிக் கொண்டேதான் இருக்கிறது. மனிதர்கள்தான் கற்றுக் கொள்ளத் தயங்குகிறார்கள்.

பிரபஞ்சப்பாதையில் பூமியின் வரலாற்றில் மனிதர்கள் நேற்றையக் குழந்தைகள்.

உருகும் பாறைக்குழம்பில் மிதக்கும் தட்டுக்களின் மேல் கட்டுகிறோம் நாம் உறுதியான வீடுகளை. நட்டுகிறோம் படபடக்கும் பல கொடிகளை.

வடதிசைப்பயணம் செய்யும் இந்தியத்தட்டின் ஓரத்தில் சிறுஅசைவு. லட்சம் பேருக்கு மேல் மரணம். லட்சாதிபதிகளும், அரசாங்க லாரிகளுக்காக வரிசையில் கை ஏந்தி நின்றனர்.

எப்போதும் உறங்கும் அரசு யந்திரம் இதுபோன்ற நாட்களில் லேசாய் அசையும். அது பழைய வழக்கம். இன்று குஜராத் எந்திரம் முதல் இரு நாட்களுக்கு முடங்கி நின்றது. சங்பரிவாரங்கள் பாய்ந்து சென்று 'சேவை செய்ய வந்த ஒரே படை இதுதான்' என்று பேரெடுத்தது. அதன் பிறகே அரசு எந்திரம் இயங்கத் துவங்கியது. இது அந்த அரசின் திறமைக்குறைவு அல்ல. திட்டமிட்ட ஏற்பாடு என்று அறியும்போது இந்துத்வ அரசியலின் வன்முறை நம் முகத்தில் அறைகிறது.

தேசமே ஒரு மனிதனைப் போல எழுந்து நின்று வாரி வழங்கியது. நம் சிவில் சமுதாயத்தின் உன்னதமுகம். ஆனால் அந்தப் பணத்தில் ஒரு சோற்றுப் பொட்டலமே போய்ச் சேராத இஸ்லாமிய கிராமங்கள் இன்றும் உண்டு என்பது பற்றி நம்சிவில் சமுதாயம் அக்கறை கொள்ளவில்லை. கேள்வி கேட்கவில்லை.

''எங்கள் லட்சியம் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதில்லை. ஆட்சியைப் பயன்படுத்தி சிவில் சமுதாயத்தைக் கைப்பற்றுவதே.'' சங்பரிவாரின் இந்த பிரகடனந்தான் உண்மையான பூகம்பத்தின் எச்சரிகை மணி.

**நாம் என்ன செய்யப் போகிறோம்?**

On behalf of Visai Publications, published by **S.Meenavathi**, Post Box No.:50, Telecom Quarters, Near Bus Stand, Hosur. Printed by A.M. Suundramoorthy at Printtech Printers, Hosur. Editor : **AADHAVAN**

படிப்பகம்

www.padippakam.com



மலையாளச் சிறுகதை

# தேவி மகாத்மியம்

**கிரேஸி**

தமிழில் : **உதயசங்கர்**

**வாசலில் தோன்றிய நீலியைப் பார்த்து பத்துவருஷம் கழிந்த** பிறகும் உன்னிடம் எந்த மாற்றமுமில்லையே,என்று தேவி வியந்து போனாள். அப்படியா? ஆனால் நீ ரொம்பவும் மாறிவிட்டாய் என்று வைரத்தின் உறுதியும் ஒளியுமிக்க ஒரு புன்சிரிப்பை நீலி கண்களில் நிறைத்தாள். சிநேகிதிகள் ஒருவருக்கொருவர் பேசி அளந்து கொண்டிருப்பதற்கிடையில் எங்களை உள்ளே கூப்பிடமாட்டீர்களா என்று ஒரு தெளிவான சப்தம் கேட்டது. அப்போதுதான் தேவியின் பின்னால் நின்று கொண்டிருந்த இளைஞனை நீலி பார்த்தாள். தலையை மெதுவாக இடதுபக்கம் சாய்த்து முகத்தைத் தீவிரமாக்கிக்கொண்டு நீலி அவனை உற்று நோக்கினாள். பின்பு வலதுகையை விரித்து வைத்துக் கொண்டு வெற்றுவெளியில் அன்பின் அடையாளத்தை வரைந்து கொண்டே ஒரு பேய்ச்சிரிப்பு சிரித்தாள். கள்ளியங் காடு உங்களை வரவேற்கிறது!

உள்ளே நுழைந்த தேவி உண்மையில் அதிர்ச்சியடைந்தாள். கள்ளியங்காடு என்று ப்ளாட்டுக்கு பெயர் வைத்தது போதாதென்று சட்டிகளிலெல்லாம் சிறிய பனைகளை வைத்திருந்தாள்.

பனைகள் இல்லையென்றால் யட்சியின் நிலைமை என்னவாகும் தேவி? நான் தினமும் சுண்ணாம்பு கேட்டு மயக்கி ஒவ்வொரு ஆணையும் இங்கே கூட்டிக்கொண்டு வருவேன். ஊளையிடும் ஒவ்வொரு பனையின் உச்சியில் தான் மாயமாளிகை கட்டுவேன். பொழுது விடியும்போது பனைமட்டையில் அவர்களுடைய எலும்பையும்,நகத்தை யும்,முடியையும் மட்டுமே பார்க்கமுடியும். நம்பிக்கை இல்லையென்றால்,நீ இந்த பனைமட்டைகளில் தேடிப்பார்! என்ற நீலியின் சிரிப்பு தேவியினுடைய கண்களில் வெளிச்ச த்தை ஊதி அணைத்தது. நான் இங்கே இருப்பதில் பிரச்னை ஒன்றும் இல்லையே என்ற பிசிறில்லாத ஒரு சப்தம் நீலியை மீண்டும் கவர்ந்தது. உரல் வடிவத்திலான ஒரு இருக்கையில் அமர்ந்திருந்த இளைஞனின் ஒளிவீசும் கண்களிலே நீலி ஒரு மோகனச்சிரிப்பைப் பாய்ச்சினாள். பின்பு மூங்கில் நாற்காலியைச் சுட்டிக்காட்டி தேவியை உட்காரும்படிக் கேட்டுக் கொண்டாள்.

பனைகளுக்கிடையில் கட்டிய ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த நீலி மரியாதையுடன் சொல்லு. குடிப்பதற்கு என்ன வேண்டும். காப்பி? தேநீர்? அல்லது குளிர்பானம் ஏதாவது?

சூடாக எதுவும் இல்லையா என்ற கேள்வியை முன் கூட்டியே கண்டுணர்ந்து,தேநீர்தானே பிரகாஷ்? என்று தேவி அவனைச் சக்தியில்லாதவனாக்கினாள். பெரிய வெண்ணையுருண்டை போன்ற முகத்தை சோர்வுடன் திருப்பி,கணவனை ரகசியமாக எச்சரிக்கவும் செய்தாள். ஊஞ்சலிலிருந்து எழுந்த நீலி அழகிய சிரிப்பின் சிலந்தி யிழையில் அவர்களைக் சிக்க வைத்துவிட்டு அடுக்களைக் குள் போனாள். மிதந்து செல்கிற கட்டுடல் சரீரத்தையும், விரித்துக்கிடந்த நீளமான முடியையும்,அதிசயத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிற கணவனைக் கண்டு தேவி சிந்தனையிலாழ்ந்தாள். நான் இந்தா வரேன் என்று நீலியைப் பின்தொடர்ந்து சென்ற தேவியின் தடித்த இடை மறித்ததில் பிரகாஷின் அதிசயம் உடைந்தது.

அடுப்பிலுள்ள பாத்திரத்தை ஒரே சிந்தனையுடன் உற்றுப்பார்த்தவாறே நின்று கொண்டிருந்த நீலி,பட்டுச் சேலையின் சரசரப்பைக் கேட்டு மானைப் போன்ற கழுத்தைத் திருப்பிப் பார்த்தாள். பெரிய மண் சட்டியில் தேயிலை போட்டு கொதிநீர் விட்டு மூடிவைத்துவிட்டு தேவி யை நோக்கி திரும்பினாள். நீ ஏன் இதுவரையிலும் கலியாணம் முடிக்கவில்லை என்று தேவி நீலியைக் கேட்டாள்.

நான் அதைக்குறித்து எதையும் யோசிக்கவில்லை. எனக்கு என்னுடைய வேலை பிடித்திருக்கிறது. போரடிக்கும் போது,அந்த பனைமரக்

www.padippakam.com



கூட்டத்தில் ஊஞ்சலாடிக் கொண்டி ருப்பேன். நான் உண்மையில் கள்ளியங்காடு நீலியேதான். வழிப்போக்கர்களை விரட்டியடித்தும்,ஆண்களை சவைத்துத் துப்பியும்,களைத்து விடும்போது நான் நகரத்தி லிருந்து பாய்ந்தோடி ஒளிந்து கொள்வேன். நீலி வந்தாள் பாலை பூத்தது என்று ஒண்ணாம் பாடத்தில் மனப்பாடம் செய்யச் சொன்ன அப்பா என்னை ஏற்றுக்கொள்வார். சித்திக்கு குழந்தைகள் இல்லாததால் என் மீது வெறுப்பும் கிடையாது என்ற நீலி தேநீர் கலக்கத் தொடங்கினாள்.

அதாவது நீ இன்னும் என்னை மன்னிக்கவில்லை இல்லையா? என்ற தேவியின் மூச்சு கனத்தது. தேநீரை மூன்று கோப்பைகளில் ஊற்றும்போது நீலியின் குரல் இளகி முருகியது. மோகனின் அன்பில் உண்மை இருந்ததென்றால் அவன் உன்னுடைய வலையில் விழுந்திருக்க மாட்டான். உனக்குப் போரடித்தபோது அவன் திரும்பி வந்ததும் அதனால்தானே. ஆனால்,அப்போது நான் கள்ளியங்காடு நீலியாகிவிட்டேன் என்ற நீலிக்கு,அப்பாவினுடைய சரித்திரப் பாடங்கள் நீலியின் வெப்பமூச்சில் புகைந்து போயின. ஆண்களுக்கு சுதந்திரமான பெண்ணைக் கண்டால் பயம்தான் குழந்தை! அதனால் ஆண்களைப் பச்சையாகத் தின்கிற பேயாக மாற்றிவிட்டார். பில்லி சூனிய மந்திரங்களினால் இழுத்துவந்து காஞ்சிமரத்தில் ஆணி யடித்து அடக்கி வைத்தார்.

தேவியின் நெஞ்சிலிருந்து,ஒரு முணுமுணுப்பு வெளியேறி வந்தது. எப்படியிருந்தாலும் அதற்கான தண்டனையை இப்போது அனுபவித்து வருகிறேன். குழந்தையின் சின்ன விரல் தடங்கள் பதியாத தேவியினுடைய உடம்பில் நீலியின்கண்கள் ஒரு தடவை சுற்றி வந்தது. நீ உன் தனிமையை முடிவுக்குக் கொண்டு வந்தாலே என் மனசுக்கு ஆறுதல் கிடைக்கும். என்று தேவி புலம்பினாள்.

தேநீர் தட்டையெடுத்துக்கொண்டு பொங்குகிற சிரிப்போடு நீலி வரவேற்பறைக்குப் போனாள். தேநீர்க் கோப்பையைக் கொடுத்தபோது பிரகாஷின் குறுகுறுப்பு நீலியின் விரல் நுனியைத் தொட்டது. பேய்க்கு உஷ்ண ரத்தமா? குளிர் ரத்தமா?

அதை அநுபவித்துத் தான் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற நீலி தேவியைப் பார்க்காமலேயே ஒரு விநோதச் சிரிப்பைத் தொடுத்தாள்.

காலியான கோப்பையைத் திரும்பக் கொடுத்து விட்டு பிரகாஷ் எழுந்தான். 'சரி பிறகு பார்க்கலாம் என்று அலட்சிய மாக பதில் சிரிப்பை உதிர்த்தான்.

ஒரு பயங்கரச் சிரிப்பில் நீலியின் கோரசொரூபமும் ரத்தம் சொட்டுகிற நாவும் வெளியில் தெரிந்தன. ஆனால் அதுவும் தேவி மகாத்மியம் என்று நினைப்பதுதானே நல்லது.

---

நன்றி : மாத்ருபூமி ஆழ்ச்ச பதிப்பு
மார்ச் 19,2000.

குட்டிஅணில் வீட்டுக்குள் வந்திருப்பதைப்
பாத்திரம் துலக்குகிற லட்சுமிதான் பார்த்தாள்
வாரஇறுதிப் பிற்பகலின்அமைதியை
வாலுடன் இழுத்துக்கொண்டு வந்திருந்தது.
தென்னங்கீற்று,முருங்கைப்பூ,
சீத்தாப்பழ நிழல் எல்லாம் அதன் கண்களில்.
'ராஜு இருந்தால் வளர்ப்பான்'
மகன் ஞாபகத்தை
வருடிக்கொடுத்துக் கொண்டே
வள்ளி சொன்னாள்.
கைப்பிள்ளைக்கு பாலூட்டுகிற சங்கரி
'உனக்கும் வேணுமா'என்று
அணில்குட்டி முகம்தடவி
பாவனை முத்தம் கொடுத்தாள்
புத்தகவரிகள் எல்லாவற்றையயும்விட
அர்த்தம் நிறைந்ததாய்த்
தெரிந்தது எனக்கு.
சற்றுநேரம்
அணில்குட்டி எங்கள் வீட்டில் இருந்தது
நாங்கள்
அணில்குட்டியின் கிளையில் இருந்தோம்.

***கல்யாண்ஜி***

www.padippakam.com



# பஞ்சத்தை நோக்கிப் பயணம் செய்யும் இந்தியப் பொருளாதாரம்

**தாராளமயம் - தனியார்மயம் - உலகமயம் என்ற குதிரைகள் பூட்டிய** வண்டியில் இந்தியப் பொருளாதாரத்தை நம் ஆட்சியாளர்கள் ஏற்றிவிட்ட பின்னணியில்தான் விவசாயிகள் கூட்டமாக தற்கொலை செய்துகொண்ட (Mass Suicide) கொடுமை நிகழ்ந்துள்ளது.

இந்தக் கொள்கைகளின் விளைவாக மக்கள் உயிர் வாழ்வதற்கு மிக அவசியமான உணவு தானிய உற்பத்தி வளர்ச்சியிலும் சரிவு ஏற்பட்டுள்ளது. இதன் விவரங்கள் அட்டவணைகள் 1லும்,2லும் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1:**
**உணவுதானியஉற்பத்தியின் ஆண்டு வளர்ச்சி விகிதம் ரு**

| காலகட்டம் | அரிசி | கோதுமை | பருப்பு வகைகள் | மொத்த உணவு உற்பத்தி |
|---|---|---|---|---|
| 1967-68 to 1995 - 96 | 2.90 | 3.35 | 1.52 | 2.67 |
| 1980-81 to 1995 - 96 | 4.72 | 3.62 | 2.62 | 2.88 |
| 1990-90 to 1995-96 | 0.93 | 1.21 | 1.07 | 1.70 |

**அட்டவணை 2 : 1991க்கு முன்பும் பின்பும்**
**வேளாண் உற்பத்தியின் ஆண்டுவளர்ச்சி விகிதங்கள் ரு**

| காலகட்டம் | உணவு தானிய உற்பத்தி வளர்ச்சி விகிதம் ரு | உணவு அல்லா பயிர்கள் உற்பத்திவளர்ச்சி விகிதம் ரு |
|---|---|---|
| 1949 -50 to 1964 -65 | 2.93 | 3.54 |
| 1967-68 to 1989 -90 | 2.74 | 2.72 |
| 1980-81 to 1989 -90 | 3.54 | 4.84 |
| 1990 -91 to 1997-98 | 1.66 | 2.36 |

ஆதாரம் :பி. பாலகிருஷ்ணன் கட்டுரை ''எகனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி''(EPW) மார்ச் 18-24,2000.

இவ்விரு அட்டவணைகளில் காணப்படும் புள்ளி விவரங்கள் ஒரு தெளிவான செய்தியைத் தெரிவிக்கின்றன. 1990களில் இக்கொள்கைகளின் அமலாக்கல் உணவு தானிய வளர்ச்சியைக் கடுமையாகப் பாதித்துள்ளது. நாடு விடுதலை பெற்ற பின்பு முதல் முறையாக உணவு தானிய உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தைவிடக் குறைந்துள்ளது. அதாவது,தலா உற்பத்தி குறைந்து வருகிறது. இந்தச் செய்தியை இன்னொரு செய்தியுடன் சேர்த்துப் பார்க்கவேண்டும். 1990 களில் இந்திய மக்களில் மேல்தட்டில் உள்ள 10 சதவிகிதத்தினருக்கு வருமானம் உயர்ந்துள்ளது. அவர்கள் உணவில் தரமான இறைச்சியின் பங்கு அதிகரித்துள்ளது. இவர்களுக்கு இறைச்சி

படிப்பகம்


www.padippakam.com



கிடைப்பதற்கு,நாட்டில் உற்பத்தியாகும் தானியத்தில் முன்பைவிடக் கூடுதலான விகிதம் ஆடுகளுக்கும்,மாடுகளுக்கும்,கோழிகளுக்கும் தீனியாகச் செல்கிறது. ஆக. ஏழை மக்களுக்குக் கிடைக்கக்கூடிய தானிய அளவு மேலும் சரிந்துள்ளது. இத்தகைய பின்னணியை நன்கு அறிந்திருந்தும் அதைப்பற்றித் துளியும் கவலை கொள்ளாமல்,ஏழை மக்களின் உணவு பாதுகாப்புக்கு ஓரளவு வழி செய்யும் பொது விநியோக முறையை இந்திய அரசாங்கம் இன்று அழித்துவருகிறது.

இந்திய நாட்டில் ஒட்டு மொத்தமாக வேளாண் உற்பத்தி வளர்ச்சியும்,குறிப்பாக உணவு தானிய உற்பத்தி வள்ர்ச்சியும் குன்றி வருவது ஒருபுறம் இருக்க,1990- களில் இந்திய வேளாண்துறைக்கு,அளிக்கப்பட்டு வந்த பாதுகாப்பு நீக்கப்பட்டு, அயல்நாடுகளிலிருந்து வேளாண் பொருட்களை தங்குதடையின்றி இறக்குமதி செய்யலாம் என்ற நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இது கிராமப்புற சிறு உற்பத்தியாளர்களை - குறிப்பாக கால்நடைகளை பராமரித்து வளர்த்து தொழில் செய்வோரை - கடுமையாகப் பாதிக்க உள்ளது. மறுபுறம்,வேளாண் நிலங்கள்,பூக்கள்,பழங்கள், சோயாபீன்ஸ் உள்ளிட்ட ஏற்றுமதிக்கான வேளாண் உற்பத்திக்கு மாற்றப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் சிறு உற்பத்தியாளர்களின் வருமானங்கள் சரிவதோடு உணவு தானிய உற்பத்தியும் அளிப்பும் கடும் பாதிப்புக்கு உள்ளாவதால் மக்களின் உணவு பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாகி வருகிறது. ''உலகவங்கி - ஐஎம்எப்-உட்டோ (WTO)'' அமைப்புகள் நிர்ப்பந்திக்கும் தாராளமய - தனியார்மய - உலகமயக் கொள்கைகள் உலகில் பல வளரும் நாடுகளில் இத்தகைய பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் நாம் பிரிட்டனின் காலனியாக இருந்தபொழுது நமது பொருளாதாரம் பாதுகாப்பின்றி திறந்து வைக்கப்பட்டு இதே விளைவுகளைச் சந்தித்தது என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். மொத்தத்தில் இக்கொள்கைகள் தொடர்ந்தால் நமது வேளாண்துறை மீண்டும் காலனி ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டு,மக்களுக்கு உணவு பாதுகாப்பு மறுக்கப்பட்டு, நாட்டில் பெருமளவிற்கு பஞ்சமும்,பட்டினிச் சாவுகளும் ஏற்படும் அபாயம் நம்மை எதிர்காலத்தில் அச்சுறுத்தும் என்று உறுதிபடக் கூறலாம்.

- டாக்டர் வெங்கடேஷ் பாலு ஆத்ரேயா
(பொருளாதார நிபுணர்) எழுதிய
இந்தியப் பொருளாதாரம் என்ற
கட்டுரையிலிருந்து.



மோகனன் எழுதிய

## சின்னச் சின்ன முற்றங்கள்

நாவலிலிருந்து....

தாது வருஷப் பஞ்சம் வரும்வரை எல்லாம் நல்லபடியாகத்தானிருந்தது. பஞ்சம் வந்தபின் உண்ண உணவில்லை; குடிக்க நல்ல தண்ணியில்லை. அரிசிச்சோறு தின்ற மக்கள் தவுட்டைத் தின்றார்கள். கோரைக்கிழங்கை,தாமரைக் கிழங்கைத் தோண்டி தின்றார்கள். இலைகளைப் பறித்து அவித்துத் தின்றார்கள். பனைமரத்தை,தென்னைமரத்தை வெட்டி குருத்தைத் தின்றார்கள். பசியின் கொடுமையால் கண்டதையும் தின்று வாந்தி பேதி வந்து செத்தார்கள். பிள்ளைகளுக்கும் கொடுக்காமல் தாய் மறைத்து வைத்துத் தின்னும் காலம் வந்தது. பசி,பாசத்தைக் கொன்று கோரத் தாண்டவமாடிற்று. மக்களும் கன்றுகாலிகளும் அங்கங்கே செத்து விழுந்தார்கள். செத்துக் கிடப்பவர்களை,கிடப்பவைகளைப் புதைக்க நாதியில்லை. காட்டிலும், மேட்டிலும், ஊருக்குள்ளும் வெளியிலும் எலும்புக் கூடுகள் பயமுறுத்திக் கொண்டு கிடந்தன.

தெம்பும் மனத்தைரியமும் கொண்டவர்கள் வீடு வாசலைப் போட்டுவிட்டு வெளியேறினார்கள். இப்படிப் பஞ்சத்தில் அடிபட்டு கன்று காலிகளை சாவக்கொடுத்து உடன் பிறந்தவர்களை,பெற்ற பிள்ளைகளைப் பறிகொடுத்து வாழ வழியின்றி வாத்தியார் வம்சம் வீடு வாசலைப் போட்டது

www.padippakam.com



# தாது வருடப் பஞ்சம்

ஆ.சிவசுப்பிரமணியன்.

ஆங்கில ஆட்சியால் இந்திய சமூகத்திற்கு நேர்ந்த கொடிய விளைவுகளுள் ஒன்று இங்கு அடிக்கடி நிகழ்ந்த கடும் பஞ்சங்கள். ''இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி'' என்ற தலைப்பில் 10-6-1855 ல் மார்க்ஸ் எழுதிய கட்டுரை ஒன்றில் இடம் பெறும் பின் வரும் செய்திகள் பஞ்சத்திற்கான அடிப்படைக் காரணத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.

''பொதுவாக ஆசியாவில் அனாதி காலந்தொட்டு மூன்று அரசாங்கத்துறைகள் இருந்து வந்திருக்கின்றன.

1. நிதித்துறை அதாவது உள்நாட்டைக் கொள்ளையடிக்கும் துறை

2. போர்த்துறை அதாவது வெளிநாடுகளை கொள்ளையடிக்கும் துறை.

3. இறுதியாக பொதுமராமத்துத்துறை. இயற்கை அமைப்பாலும் தட்பவெப்ப நிலையாலும் - குறிப்பாக சஹாராவிலிருந்து அரேபியா பாரசீகம், இந்தியா, தார்த்தாரி வழியாக ஆசியாவின் மிக உயரமான மேட்டுநிலம் வரையில் அகன்ற பாலைநிலப்பிரதேசங்கள் படர்ந்திருப்பதாலும் கீழ்நாட்டு விவசாயத்திற்குச் செயற்கைப் பாசனம் அடிப்படையாக இருக்கிறது. நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருளாதாரப்பணி ஆசிய சர்க்கார் களுக்கு அனைத்துக்கும் ஏற்பட்டது.

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் அதன் பூர்வாதிகாரிகளிடமிருந்து நிதித்துறையினையும் போர்த்துறையினையும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் நீர்ப்பாசன நிர்வாகத் துறையினை அறவே புறக்கணித்து விட்டார்கள்.

இவ்வாறு வேளாண்மையின் அடிப்படைத் தேவையான நீர்ப்பாசனத் திட்டங்களைப் புறக்கணித்தது மட்டுமின்றி உணவு தானியங்களுக்கு பதிலாக இங்கிலாந்தின் நெசவாலைகளுக்கு மூலப்பொருளான பருத்தி, அவரி போன்ற பயிர்களின் சாகுபடி பரப்பை விரிவுபடுத்தினர். இதனால் உணவு



தாது வருட பஞ்சத்தின்போது
தமிழகத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம்.

நன்றி : Sharrock,J.A.1910,
South Indian Mission, London.

www.padippakam.com



தானியங்களின் உற்பத்திக் குறைந்தது. அத்துடன் உணவு தானியங்களை ஏற்றுமதியும் செய்தனர். இதன் விளைவாகக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் அன்றைய சென்னை மாகாணத்தில் மட்டும் ஆறுமுறை (1783, 1792, 1807, 1823,1833, 1854) கொடிய பஞ்சம் நிகழ்ந்தது. மேலும் நிலவரி உயர்த்தப்பட்டிருந்ததால் சேமிப்பு என்பது தானியவடிவிலோ பணவடிவிலோ இல்லாதிருந்தது. இதனால் ஒரு தடவை விளைச்சல் பொய்த்துப் போனாலும் அதை எதிர்கொள்ளும் ஆற்றல் பெரும்பாலான மக்களுக்கு இல்லாதிருந்தது.

1858ல் விக்டோரியா மகாராணியின் நேரடி ஆட்சி ஏற்பட்டபின் 1866 - 1867 ஆண்டுகளில் ஏழாவது பஞ்சத்தை சென்னை மாகாணம் சந்தித்தது. இதிலிருந்து பத்தாண்டுகள் கழித்துக் கொடிய பஞ்சம் 1876ல் தொடங்கியது. 1876 ஏப்ரல் தொடங்கி 1877 மார்ச் வரையிலான காலத்தைய தமிழ்வருடம் ''தாது வருடம்'' ஆகும். பஞ்சம் தொடங்கிய ஆண்டு தாது வருடம் என்பதால் பொது மக்கள் இப்பஞ்சத்தை 'தாதுவருஷ பஞ்சம்' என்று குறிப்பிட்டனர். ஆனால் உண்மையில் பஞ்சத்தின் பாதிப்பு தாதுவருடம் முடிந்த பின்னரும் 1890 வரை நீடித்தது.

**பஞ்சத்தின் கொடுமை :**

தாது வருஷப் பஞ்சத்தின் கொடிய விளைவுகளை வாய்மொழிப் பாடல்களும் சிற்றிலக்கியங்கள் சிலவும் பதிவு செய்துள்ளன. கு. சின்னப்ப பாரதி சேலம் மாவட்டத்தில் சேகரித்த 'கும்மிப் பாடல்'' ஒன்று பஞ்சம் தொடங்கியதை

பூரணமாகவே தாது வருஷமும் பிறந்ததுவே
பஞ்சமும் அப்போதே காரணமாகத் தொடர்ந்ததுவே

..............................

கன்னி மாதத்தில் ஓர் மழை பெய்யவும்
கண்டுடெடுத்த ஒரு புதையலைப் போலவே
தானியம் விதைத்தார்கள் தாது வருஷத்தில்
சீமையில் மழைமாரி பூச்சியமாகவே
தீய்ந்து பயிரெல்லாம் காய்ந்ததையா

என்று குறிப்பிட்டு விட்டு பஞ்சத்தின் கொடுமை யையும் இவ்வாறு வெளிப்படுத்துகிறது.

பூமியைக் கொதவு வைத்தாலும் ஆங்கே
பூரண காசுகள் தந்தாரில்லை
காப்புக் கடகமும் தோள் வெண்டயமும்
காதுக் கொப்பு சில்லரை தாலியெல்லாம் விற்றாலும்
கட்டாது அந்த ரூபாயெல்லாம் உமக்கு
புழுத்த சோளம் கம்பு புளிச்சகீரை தின்ன
புடிச்சுமே காலரா போகும் எட்டுப் பேரில்

**தொடர்ச்சி**

## சின்னச் சின்ன முற்றங்கள்

**நாவலிலிருந்து....**



போட்டபடி விட்டுவிட்டுக் கிளம்பியது. வேலாண்டி நாடான்தான் அவர்களை முன்னடத்திக் கூட்டிச் சென்றார். கந்தல் பொட்டலங்களை கக்கத்தில் இடுக்கிக் கொண்டு,பரட்டைத் தலையுடன், அழுக்கேறிய உடல் மெலிந்து,கணகள் குழி விழுந்த அவர்கள் நடக்கச் சக்தியற்று மெல்ல மெல்ல நடந்து போனார்கள். சாவு அவர்களை இடை மறித்தது. நடந்துவந்த பாதையோரமெல்லாம் எலும்புக்கூடு கள்,அழுகிக்கொண்டிருக்கும் ஆடு,மாடு,கழுதை, மனிதப்பிணங்கள்,எங்கும் நாற்றமடித்தது. உக்கிர மான வெயிலுக்கும்,அனல் காத்துக்கும் நடுவே சிக்கித் தவித்த அவர்களுக்கு ஒண்ட நிழலில்லை. மரங்கள் பட்டுப் போயிருந்த பச்சை மரங்களின் இலைகளைப் பாவி மனிதர்கள் பறித்துத் தின்று விட்டார்கள். நாவை நனைக்க சொட்டுத் தண்ணி யில்லை. எங்கே போனால் பிழைக்கலாம் என்ற வகையறியாமல் ஜனங்கள் எண்திசையும் சிதறி யோடி அலைந்து சலித்துப் பசியில் செத்தார்கள். பாதையெங்கும் உயிர்ப்பிணங்களின் உடமை களைப் பறித்து, அடித்து இம்சிக்கும் கயவர் கூட்டம் தடியுடன் திரிந்தது.

இத்தனையும் சகித்து,மீறி நடந்து போன வர்கள் எங்காவது ஒரு ஊரில் பாதையோரம் திறந்துவைத்த கஞ்சித் தொட்டியில் ஈக்களைப் போல மொய்த்தார்கள். மனித குணங்களை மறந்து ஒருவர் மேல் ஒருவர் விழுந்து மிருகங்கள் போல் சண்டையிட்டு,இடித்து,நெருக்கி,நலிந்து கீழே விழுந்தவர்களை மிதித்துக் கொன்று,அழுது,அலறி, இரந்து ஒரு வாய்க்கஞ்சியில் நாவை- உயிரை- நனைத்தார்கள். உண்ட கஞ்சியிலும் சிந்திப்போன கஞ்சியே ஏராளம். வலிமை மிக்கோரே கஞ்சியைப் பெற்றனர். பசி மனிதனை இழிந்தவனாக்கிற்று.

படிப்பகம்

மூன்றுபேர் இரண்டு பேர் மூச்சுப் பிழைப்பார்கள்
எல்லாம் சிவன் செயல் என்றிடுவாரெல்லாம்
தினுசு வேலைகள் எட்டுமே செய்குவோர்
சீமைகள் எங்கும் சுற்றித் திரிகுவார்
சோளச்சோறு வாய்க்கு சேராதென்று சொன்ன
சொகுசான மகராச மக்களுகளெல்லாம்
மமுங்கலாய் துட்டுக்குப் புண்ணாக்கு வாங்கியே
மறைவுக்கும் போவராம் உண்பதற்கே
புழுங்கலரிசிச் சாதம் சேராதுன்னு சொன்ன
புண்ணிய மகராச மக்களுக்கெல்லாம்
மலைக் கத்தாழைக் குருத்தினைப் பிடுங்கியே
மண்திட்டு மறைவிலே மடுக்கிண்ணு கடிப்பாராம்.

**பெர்சிமாகுவின்** என்ற ஆங்கில ஐ.சி.எஸ். அதிகாரி தொகுத்த பாடல் ஒன்றில் பஞ்சத்தில் மக்கள் மடிந்த அவலம் இவ்வாறு கூறப்படுகின்றது.

தாது வருஷப் பஞ்சத்திலே - ஓ சாமியே
தாய்வேறே பிள்ளை வேறே - ஓ சாமியே

மாசி மாதத்துவக்கத்திலே - ஓ சாமியே
மாடுகளும் பட்டினியே - ஓ சாமியே
பங்குனிக் கடைசிலே - ஓ சாமியே
பால் மாடெல்லாம் செத்துப் போச்சே - ஓ சாமியே

காட்டுப்பக்கம் நூறு பிணம் - ஓ சாமியே
வீட்டுப்பக்கம் நூறு பிணம் - ஓ சாமியே
ரோட்டுப் பக்கம் நூறு பிணம் - ஓ சாமியே
மேட்டுப் பக்கம் நூறு பிணம் - ஓ சாமியே
ஆற்றிலேயும் தண்ணியில்லை - ஓ சாமியே
குளத்திலேயும் தண்ணியில்லை - ஓ சாமியே
கிணற்றில் பார்த்தால் உப்புத்தண்ணி - ஓ சாமியே
கிழடுகட்டை குடிக்குந் தண்ணி - ஓ சாமியே
தண்ணித் தாகத்தால் வறண்டு - ஓ சாமியே
தவறினது கோடிசனம் - ஓ சாமியே
கஞ்சில்லா மேதவித்து - ஓ சாமியே
காட்டினிலே மாண்டதுகோடி - ஓ சாமியே

மலை மருந்தன் என்னும் புலவர் 'தாது வருஷத்துக் கரிப்புக்கும்மி' என்ற நூலை 18.05.1877ல் தாது வருஷப் பஞ்சகாலத்திலேயே எழுதியுள்ளார். பஞ்சநிகழ்வுகளை இவர் நன்றாகத் தன் நூலில் பதிவு செய்துள்ளார்.

கொட்டிக் கிழங்கை வெட்டி சிலபேர்
கொண்டு போய் நன்றாக வேக வைத்து
இட்டமதாகவே தின்று பொழுதை
இவ்விதம் போக்குறார் பாருங்கடி

எறும்பு வளைகளை வெட்டியதனில்
இருக்குந்தானியந்தானெடுத்து
முறத்தால் கொழித்துக் குத்திச் சமைத்து
உண்ணுகிறார் சிலர் பாருங்கடி

குழந்தைக்கு வைக்கின்ற கூழுகொடுவென்று
கூறியே யந்தந்த வீடுகளில்
அளித்த கூழை அவர்க்குத் தெரியாமல்
அங்கங்கே தின்னுறார் பாருங்கடி

உண்ணுங் கலங்களை விற்பாரும்
உடைமைகளையெல்லாம் விற்பாரும்
பெண்ணுபிள்ளைகளை விற்பாரும் வீட்டை
பிரித்து *வைக்கலை விற்பாரும் (*வைக்கோல்)
கலப்பை களைக்கொண்டு விற்பவரும்
காரையெடுத்துப் போய் விற்பவரும்
உலக்கை யுரலை விற்பவருங் கையி
லொன்றும் இல்லாமல் நிற்பவரும்
வெள்ளிப் பொன்னுகளைப் பாதிவிலைக்கே
வேண்டி வேண்டி விற்கிறார்கள் -தான்
இருக்கும் வீட்டைப் பிரித்துத் தலைமே
லெடுத்துத் தெருவினில் விற்கிறார்

தாலையை யுறுவி விற்பவரும்
தவிட்டைத் தெள்ளி விற்பவரும்
காலி லிட்ட வுருட்டு முதலாய்
கழட்டிக் கடையில் விற்பவரும்...

அரசர்குளம் சாமிநாதன் எழுதிய தாதுவருஷத்துப் பஞ்சக்கும்மி என்ற நூலில் மலைக்கத்தாழைக் குருத்து, ஆலம்பழம், மாங்கொட்டையிலிருக்கும் பருப்பு, ஈச்சங் குருத்து, பனைமரத்து குருத்து ஆகியனவற்றை மக்கள் உண்டனர் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது.

பெண்ஒருத்தி தன் கணவனுடனும் மூன்று வயது பிள்ளையுடனும் பஞ்சம் பிழைக்கச் செல்கிறாள். வழியில் அவளைக் கைவிட்டு விட்டு கணவன் ஓடிப் போய் விடுகிறான். அப்பெண் பிச்சை வாங்கி உண்டும் பசி தீராமல் ''மூணு வருடத்திப் பிள்ளையல்லோ மூணுரூபாய் கூறி வந்தேன்'' கூவி விற்ற அப்பிள்ளையை முக்குறுணி நெல் கொடுத்து ஒருவன் விலைக்கு வாங்கினான். அந்நெல்லைத் தலையில் சுமந்து வரும்போது ஒருவன் ''ஓசைப்படாதவள் பின்புறத்தில் வந்து உகந்த நெல்மூட்டையைதான் பறித்து ஓடினான்'' என்ற செய்தியும் இந்நூலில் உள்ளது.

இவ்வாறு நாட்டார் பாடல்களும் சிற்றிலக்கியங் களும் பஞ்சம் குறித்துக் கூறும் செய்திகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் பின்வரும்

www.padippakam.com



ஆவணச் சான்றுகள் அமைந்துள்ளன. சேலம் மாவட்ட விவரச்சுவடி ஒன்றில் தாது வருடப் பஞ்சம் குறித்து இடம் பெற்றுள்ள செய்தி வருமாறு : சோதனை மிகுந்த அந்தப் பஞ்சக்காலத்தில் காலரா பட்டினி, அம்மை, வாந்திபேதி, வயிற்றுப்போக்கு, மகோதரம், காய்ச்சல் முதலிய கொடிய நோய்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகி வந்தனர். கூடார மருத்துவமனைகளில் இறந்தோரும் இறந்து கொண்டிருப் போரும் அருகருகே கிடந்தனர். உயிருள்ள உடலையும் உயிரற்ற உடலையும் பிரித்தறிந்து கொள்வது கடினமாக இருந்தது. இறந்து போனவர்களின் உடல்கள் கூடார மருத்துமனைகளுக்கு அருகிலேயே மொத்தமாக எரிக்கப்பட்டன. ஒருகூடாரத்தின் அருகில் சிலசமயம் ஒரே நேரத்தில் 24 சடலங்கள் ஒன்றாக எரிக்கப்பட்டன. மனிதர்களின் நிலையே இவ்வாறென்றால் கால்நடைகளின் பரிதாபத்தைச் சொல்லவே வேண்டாம். அவை உணவின்றித் தவித்தன. உணவென்று கருதி புழுதியை நக்கித் தின்று ஏமாந்தன. குடிக்க நீரின்றி வாடின. எலும்பும் தோலுமாக மூச்சுவிடவே திணறின. பல மைல்தூரம் வரை ஒரு சொட்டு நீரைக்கூடக் காண்பது அரிதாக இருந்தது. கௌவரமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் கூட உணவுக்காகத் தங்கள் மானத்தை விலைகூற வேண்டிய இழிநிலை ஏற்பட்டது. (சதாசிவம் 183; 138, 139)

வில்லியம் திக்பி என்பவர் இப்பஞ்சகாலத்தில் சென்னை மக்களின் நிலையை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

''இளைத்து மெலிந்து எலும்பும் தோலுமாய்க் காட்சியளிக்கும் ஏராளமான மக்கள் கடற்கரையில் கூடியிருக்கிறார்கள். அவ்வழியே செல்லும் அரிசி வண்டிகளிலிருந்து மிக அரிதாகச் சிந்திச் சிதறும் அரிசி மணிகளைச் சேகரித்து அவற்றைச் சோறாக்கி உண்டு உயிர் வாழ்கின்றார்கள். சென்னை நகரத் தெருக்களில் அந்தச் சமயத்தில் (நவம்பர் 1876) அதற்கு ஏழெட்டு மாதங்கள் வரையிலும் காணப்பட்ட காட்சிகள் இரத்தக் கண்ணீரை வரவழைக்கக் கூடிய அவலம் நிறைந்தவை. நகரின் சந்தடி மிகுந்த தெரு ஒன்றில் நடந்த பட்டினிச்சாவு குறித்து பத்திரிக்கையில் செய்தி வந்ததும் நகரெங்கும் பெரும் பரபரப்பு உண்டாயிற்று. ஒரு கிராமவாசி தன் ஊரில் உணவின்றிப் பல நாட்கள் உழன்ற பின் தன் குடும்பத்தினருடன் நகருக்கு வந்தார். இங்கும் அவர்கள் உணவின்றி பல நாட்கள் பட்டினி கிடந்தனர். அவருடைய இரண்டு குழந்தைகள் பசி தாங்காமல் இறந்து விட்டன. அவற்றைப் புதைத்த சில நாட்களிலேயே அந்த கிராமவாசியும் பட்டினியால் மாண்டு விட்டார். இந்த உள்ளம் உருக்கும் செய்தியை வெளியிட்ட ஒரு பத்திரிகை இத்தகைய

தொடர்ச்சி

## சின்னச் சின்ன முற்றங்கள்

நாவலிலிருந்து....

பகலும்,இரவும் அனல்காத்து அடித்தது. பூமி தனலாய்ச் சுட்டது. பசுமை நிறம் சாபத்தால் பூமியை விட்டு மறைந்து போனது போல் போயிற்று. கிணறுகள் நீரின்றி மணல் காய்ந்து கிடந்தன. தண்ணீர் காணக்கிடைக்காத பொருள் போலாயிற்று. ஒரு வாய்த் தண்ணீருக்கு மூணு மைல் அலைந்து, காத்துக் கிடந்து தவிக்க வேண்டியதாயிற்று. பொன்னுக்கு மாற்றாய் அரிசியும் குருணையும் விற்றது. அரிசித் தவிடு கூடக் காணக்கிடையா பொருளாயிற்று.

இத்தனையும் அனுபவித்துக் கொண்டு வாத்தியார் வம்சம் வேலாண்டி நாடார் தலைமையில் வடக்கே போனால் வாழ்வென்று போனது. நடந்துவந்த பாதையெங்கும் வாத்தி யார் வம்சத்து ஆட்களின் கல்லறைகள். செத்தவர்களைப் புதைத்து விட்டு கூடிப்போன சோகத்துடன் பாரம் பெருக்க நடந்தார்கள். தெம்பு உள்ளவர்கள் தெம்பற்றவர்களைத் தாங்கி வந்தார்கள். தோளில் சுமந்தார்கள். சீக்கிரம் சாவு வராதா என்று ஏங்கினார்கள். பின் முழங்காலில் கையூன்றி மெல்ல மெல்ல நடந்தார்கள். இருக்கவும்,எந்திரிக்கவும் சக்தி யற்றுப் போனார்கள். அவர்களுக்கு எப்பவும் பசியால் காதடைத்துப் போயிற்று. கண்கள் இருண்டு போயிற்று. தோல் சுருங்கி எரிச்சலெடுத்தது. புத்திகூடப் பேதலித்து விட்டது.

சரி இதுகளுக்குப் புத்தி பேதலிச்சிட்டு,ஒரு இடத்தில இருந்து வயித்துக்குச் சோறு தின்னு நிம்மதியா நாலுநாள் தூங்கினாத்தான் இனும இதுக பொழக்கும்ன்னு அவருக்கு அடைபட்டுது.

தூரத்தில முதலூர் வேதக் கோயிலை சிலுவை தெரிஞ்சதாம். நேரே அதப்பாக்கப் போனாராம். அங்க யிருந்த சாமியார்கிட்ட விஷயத்தச் சொல்லி அவங்கள கொஞ்சநாள் அங்க தங்க வச்சிட்டா, பெறவு பஞ்சம் தெளிஞ்சதும் கூட்டிட்டுப் போறேன்னாராம். அவங்கள வேதத்துக்கு மாத்தினா வச்சிக்கறேன்னாராம் சாமியார். அந்தபடிக்கே அவங்கள வேதக்காரங்களாக்கி சாமியார் கிட்ட ஒப்படைச்சிட்டு வந்தாராம். அப்பிடி முதலூர்ல தங்கினவங்கதான் ஈசாப்,அந்தோனி,சிலுவை குடும்பம்.

www.padippakam.com



மனிதப்படுகொலைக்கு அதிகாரிகளே காரணம் எனக் குற்றஞ்சாட்டியது. (மேலது 139)

ஆங்கில அரசின் ஆவணங்கள் மட்டுமின்றி கத்தோலிக்க சமய ஆவணங்களும் தாதுவருஷப் பஞ்சம் குறித்த செய்திகளைக் கூறுகின்றன. டிரிங்கால் என்ற சேசுசபைத் துறவி தமது சகோதரர்களுக்கு 1877 ஆகஸ்ட் 4ல் எழுதிய கடிதத்தில் 'எந்த நாட்டு வரலாற்றிலும் இந்தப் பஞ்சத்தை ஒப்பிடக்கூடிய அளவில் நான் படிக்கவில்லை. 22 மாதங்களாகப் பம்பாய் சென்னை மாநிலங்களில் இரண்டு அங்குல நிலத்தை மூழ்கடிக்கக்கூடிய அளவு கூட மழை பெய்யவில்லை. ஆகவே போன வருடத்தில் விதை விதைக்கின்ற பருவத்தில் 4ல் 3 பங்கு விவசாயிகள் விதை விதைக்கவில்லை. விதைத்தவர்கள் விதையையும், உழைப்பையும் இழந்தார்கள். அரசாங்கம் கடல் கடந்து சென்று ஏராளமான கோதுமையை அவசரம் அவசரமாகக் கொண்டு வந்தது. ஆனால் விலையோ அதிகம். நகர்வாழ் மக்களும் பணக்காரர்களுமே இதனால் பயனடைந் தனர். கிராம மக்களோ பணமும் வேலையும் இல்லாமல் பசிக் கொடுமைக்கு ஆளானார்கள்.

...........கூர்மையான குச்சிகளைக் கொண்டு காட்டு கிழங்குகளையும் காட்டுவெங்காயத்தையும் எடுத்துப் பசியைப் போக்கிக் கொண்டார்கள். மார்ச் 1877க்குப் பின் இவையும் கிட்டவில்லை. பஞ்சத்தின் துணைவர்களான காலரா - வயிற்றுப்போக்கு - காய்ச்சல் - திருட்டு - கொலை ஆகியன பரவி எங்கும் அச்சமும் திகலுமாயிருந்தது.' என்று குறிப்பிட்டுள்ளார்.

## பஞ்சத்தின் விளைவு :

ஒரு நாட்டில் நிகழும் பஞ்சமானது தொற்றுநோய் - குடிபெயர்வு - மதமாற்றம் - குற்றச்செயல் அதிகரிப்பு ஆகியனவற்றுக்குக் காரணமாக அமைகின்றது. தாது வருஷப் பஞ்சமும் இதற்கு விதிவிலக்கல்ல.

பஞ்சம் பிழைப்பதற்காக இலங்கையின் மலைத் தோட்டங்களில் பணிபுரிய ஆயிரக்கணக்கானோர் குடிபெயர்ந்தனர். தனுஷ்கோடி வழியாகச் செல்பவர்கள் தலைமன்னாரிலிருந்து இரயில் ஏறி கண்டி சென்று அங்கிருந்து பலமைல் தூரம் கால்நடையாக அழைத்துச் செல்லப்பட்டனர். பழக்கமில்லாத மலைப்பகுதிக் குளிரி னாலும் பயணக் களைப்பாலும் இவர்களில் பலர் நோய்வாய்ப்பட்டு வழியிலேயே இறந்து போயினர்.

''இவ்வாறு குடிபெயர்ந்து செல்பவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருப்பதால் இலங்கை அரசு விழிப்படைந்து குடிபெயர்ந்து செல்பவர்கள் கப்பல் ஏறுவதை தடை செய்துள்ளது'' என்று சேசு சபைத்துறவி டிரிங்கால் ஏப்ரல் 1877 இல் எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கிறித்துவ மறைப்பணியாளர்கள் பஞ்ச நிவாரண வேலையில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். இவர்களது பணியினால் ஈர்க்கப்பட்ட அடித்தள மக்கள் கிறித்துவர் களாக மதம் மாறினர். சேசு சபைத்துறவி டிரிங்கால் இம் மக்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது **"For them at least - famines not a calamity; it opened heaven to them"** என்று குறிப்பிட் டுள்ளார். மேலும் ஃபிரான்சில் இருந்த தம் சகோதரருக்கு எழுதிய கடிதத்தில் இவர் குறிப்பிடும் பின்வரும் செய்தி பஞ்சக்காலத்தில் நிகழ்ந்த மதமாற்றத்தை வெளிப்படுத்துகின்றது.

''பணக்காரனாக நான் எப்போதும் ஆசைப் பட்டதேயில்லை. இப்போது பணக்காரனாக விரும்பு கிறேன். நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் பிராங்ஸ்* (பிரெஞ்சு நாட்டு நாணயம்) என்னிடமிருந்தால் பாதிநாடு திருமுழுக்கு கேட்டு என்னிடம் வந்து விடும்.''

அடிப்படைத் தேவையான உணவுக்கு வழியில்லாத நிலையில் மக்களில் ஒரு பகுதியினர் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் வழிமுறையாகத் திருட்டு வழிப்பறி ஆகியனவற்றில் ஈடுபட்டனர். கொள்ளை - உணவு வேண்டி நிகழும் கலகங்கள் - சந்தைகளைச் சூறையாடல் - வீடுகளை உடைத்துத் திருடுதல் - கால்நடைகளைத் திருடுதல் ஆகியன பரந்தளவில் நிகழ்ந்ததாக வெள்ளை அரசின் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. சென்னை மாநிலத்தின் 1877 ஆம் ஆண்டுக்கான காவல்துறை நிர்வாக அறிக்கையில் 'கொள்ளையானது பஞ்சத்தால் உருவான குற்றம்.' என்றும் இது சாதாரண குற்றவாளிகளால் அல்லாமல் பசித்த மக்களால் நிகழ்த்தப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. டேவிட் அர்னால்ட் என்பவர் பஞ்சத்தில் நிகழ்ந்த தானியச் சூறையாடல்களை வெள்ளை அரசின் ஆவணங்களின் துணையோடு வெளிப்படுத்தியுள்ளார். இக்கலவரங்களில் ஆங்கில அரசின் இராணுவத்தில் பணி புரியும் இந்தியப் போர் வீரர்களும் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

முன்னர் குறிப்பிட்ட **''தாது வருஷத்துக் கரிப்புக் கும்மி''** பஞ்சத்தின் காரணமாக நிகழ்ந்த கால்நடைத் திருட்டுகளை இவ்வாறு குறிப்பிடுகிறது.

கட்டியிருக்கின்ற மாடுகள் முதலாய்
காணாமற் கொண்டு போய் சங்கிலிகள்

www.padippakam.com



இட்டமாய்க் கட்டித் தோலை யுரித்து
எடுத்து விற்குறார் பாருங்கடி!

இன்னஞ் சிலபேர் மாடு குதிரைக
ளெல்லாம்வற்றையுந் திருடிப் போய்
அன்னிய வூரில் விற்றுவிட்டேயவர்
அரிசி வாங்குறார் பாருங்கடி!

**பஞ்ச நிவாரணம் :**

பட்டினியால் வாடிய மக்களுக்கு ஆங்கில அரசு கஞ்சித்தொட்டிகளை அமைத்து கஞ்சி வழங்கியது. இதன் காரணமாகவே தாது வருஷப் பஞ்சத்தை ''கஞ்சித் தொட்டிப் பஞ்சம்'' என்று குறிப்பிடும் வழக்கமிருந்தது.

கஞ்சித் தொட்டி போட்டார்களே - ஓ சாமியே
அன்புடனே சலுக்காரர்தானே -ஓ சாமியே
காலம்பர கோடி சனம் -ஓ சாமியே
கஞ்சி குடித்துக் களையாத்துச்சே - ஓ சாமியே
பொழுது சாயக் கோடிச் சனம் - ஓ சாமியே
பொழைச்சுதே உசிர் தப்பித்து - ஓ சாமியே
கஞ்சிக்கு கடிக்கிற - ஓ சாமியே
காணத் துவையல் கொடுத்தாங்களே - ஓ சாமியே

முன்னர் குறிப்பிட்ட 'தாது வருஷப் பஞ்சக்கும்மி' என்ற நூல் இச்செய்தியை குறிப்பிடுகின்றது. பழைய நினைவில் கிழக்கிந்திய கம்பெனியர்தான் ஆட்சி புரிகிறார் என்று இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

தீயக் கொடும் பஞ்சம் வந்து தென்றேயிந்தத்
தேசத்தை யாள்கின்ற கம்பெனியார்
செகமெங்கினும் மிகவும் பசியகலும்படி
தகை கொண்டு சிந்தையில்
தர்மம் நினைவையுற்றே
மங்கையரே யெங்குந் தர்மம் கஞ்சித் தொட்டி
வைத்துக் கறி புளியோடும் அன்னம்
வளமாகவும் விளைவாகிய களை தீரவும் எளிவாகவே
வந்தவர்க்கெல்லாம் அமுதளித்தார்.

இவ்வுணவை உண்டவர்கள் அடைந்த இன்னல்களையும் இவ்வாறு பட்டியலிடுகிறார்.

காய்ந்திடு மாடு கம்பில் விழுந்த
கதையென்ன கம்பெனி அன்னமதை
கண்டேதுயர் விண்டோடிட உண்டாரது கண்டேண்டி
கன்னியரே இன்னஞ் சொல்லுவனங் கேள்

அன்னஞ் சிலநாள ரிந்திராமல் வேர்
ஆசை கொண்ட மட்டும் உண்டளவில்
அரிதாய கறிசோறுகள் செரியாமலே
மெய்யுஞ் சுழன்று நெளிந்தனர் காண்.

மெத்த வயறு பொருமில்லோ வலி
மென் மேலுங் கண்டு தவிதவித்து
விழுவாருயிர் பழுதாமென
அழுவார்மிகு களையோடவர்
மெய்யுஞ் சுழன்று நெளிந்தனர் காண்.

தாழ் வெண்ணா தென்று நைவாரும் விரல்
தன்னை விட்டு வாந்தி செய்வாரும்
சரியாச்சுதோ அரனார்க்கிது முறையாச்சென
அரைஞாண் கொடிதன்னை வெடுக்கென்றறுப் பாரும்.

கஞ்சித் தொட்டியுடன் மட்டுமின்றி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலையும் வழங்கினர். உணவுக்கு வழியின்றி மக்களை அல்லல் படவைத்துவிட்டு பின் வேலைவாய்ப்பு என்ற பெயரில் அம்மக்களின் உழைப்பை சுரண்டியது வெள்ளை அரசு. இத்தகைய பஞ்சக்கால வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வெட்டப் பட்டதுதான் சென்னையிலுள்ள பக்கிம்ஹாம் கால் வாயாகும்.

வெள்ளை அரசும், கிறித்தவ மறைப் பணியாளர் களும் மட்டுமின்றி குறைந்த அளவில் வேறு சிலரும் பஞ்ச நிவாராணப் பணிகளில் ஈடுபட்டனர். திருவாவடுதுறை ஆதினத் தலைவராகயிருந்த சுப்பிரமணிய தேசிகர் என்பவர் தம் மட்டத்திற்குச் சொந்தமான புன்செய் நிலங்களை நன்செய் நிலமாக்கும் பணியைக் கொடுத்தார். பல இடங்களில் கஞ்சித் தொட்டியும் அமைத்தார். ஏனைய சைவ- வைணவ மடத் தலைவர்கள் இப்பஞ்சத்தின் போது மேற்கொண்ட நிவாரணப்பணிகள் குறித்து எதுவும் தெரியவில்லை.

ஏறத்தாழ 40 லட்சம் மக்களின் உயிரைப் பறித்த தாது வருஷப் பஞ்சம் பல கொடூர நிகழ்வுகளைத் தன்னுள் அடக்கியுள்ளது. ஆங்கில ஆட்சியில் இரயில் பாதைகள் அமைக்கப்பட்டன, கல்விக் கூடங்கள் நிறுவப்பட்டன, தபால் தந்தி தொடர்புகள் உருவாயின, என்று இந்திய வரலாற்றைக் கற்றுக் கொடுப்பதால் மட்டும் பயனில்லை. ஆங்கில ஆட்சியால் நிகழ்ந்த தாது வருடப் பஞ்சம் போன்ற கொடிய சமூக நிகழ்வுகளையும் விரிவாகக்கற்றுக் கொடுக்கும் போது தான் காலனியத்தின் கொடுமை முழுமையாகப் புரியும்.

www.padippakam.com



# கல்யாண்ஜி கவிதை

பித்தன்புழங்கிய
இடம் என்பதால் அதிகாலையில்
பேராச்சி அம்மன் படித்துறைக்குப்
போனேன்,
யாரும் வராத நேரத்தில்
அவன் மட்டும் மனக்குகையில்
இருப்பான் என்றெண்ணி,
அவனும் இல்லை.
வேறொருவரும் கூட இல்லை.
படித்துறையில்
ஒரே ஒரு
காலி மதுக்குப்பி இருந்தது
உதிரிக்கடலைகளும்
பிரிக்காத ஒரு பொட்டலமும்
முதல் காகம் கொத்தக் காத்திருந்தன.
மேல்படியில் இருந்து
யார் சட்டைப்பைக்குள்ளோ
கிடந்து மடங்கிய ஒரு முழுசிகரெட்.
தண்ணீருக்குள் முகம் குனிந்து
நீர் குடிக்கும் புலியைப்போல்
கல்மண்டபம் ஆற்றுக்குள் கவிழ்ந்து
காலம் உறிஞ்ச,
குடித்துவிட்டுக்
குப்பியை வைத்துச் சென்றவனின்
அடையாளம் சொல்லாமல்
தனியாக ஓடிக் கொண்டிருந்தது
தண் பொருநை.

உருண்டு கிடக்கிற
ஒரு பாறையின் முன்பக்கத்தை
எப்படித் தீர்மானிப்பது?

கம்பிக்கூடையில்
கடைக்காரர் வைத்திருக்கிற
முட்டைகளில் ஒன்றுக்கு
முன்பக்கம் எதுவென்று
சொல்கிறீர்களா யாராவது.

நாலாபக்கமும் பூத்திருக்கிற
நந்தியாவட்டைக்கு
எது முன்பக்கம்
சூரியனுக்குப் பின்பக்கம்
என்று சொன்னவன்
சொல்லியிருக்கிறானா
முன்பக்கத்தைப் பற்றி.

கரையில் நிற்கிற நாம்
கடலின் எந்தப்பக்கம் பார்த்துக்
கால்களை நனைக்கிறோம்.

பூவரசம்பூவின் பம்பரக்காய்
எந்தப்பக்கத்துத் தரையில்
விழுகிறது.
காற்றின் முன்பக்கம் எது.
இந்தக் கவிதைக்கு உண்டா
முன்பக்கம் பின்பக்கம்?

www.padippakam.com



# தமிழகத்தில் கல்வி

பேரா. மணிக்குமார்

எழுத்தாளர் சுந்தர ராமசாமி கல்வியாளர் வசந்திதேவி நடத்திய கலந்துரையாடல் தமிழகத்தில் கல்வி என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது.

'கல்வி மாணவ - மாணவியரின் ஆளுமையை வளர்க்க வேண்டும்; அவர்களது இனந்தெரியாத பயங்களை அகற்ற வேண்டும்; நெருக்கடிகளை எதிர்கொள்ள அவர்களைத் தயார் செய்ய வேண்டும்.' என்ற தனது கல்வி பற்றிய சிந்தனையை விளக்கி இத்தகையதொரு நோக்கம் கொண்ட சமுதாயத்திற்குப் பலன் உள்ள கல்வியைத் தர தமிழகத்தில் கடந்த 50 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முயற்சிகளைப் பற்றி கூறுமாறு வசந்திதேவியை வேண்டி உரையாடலைத் துவக்குகிறார் சுந்தர ராமசாமி.




ஒட்டு மொத்த சமூகமும் சீரழிவுக்குள்ளான பின்பு என்னதான் செய்ய முடியும், எதைத்தான் தடுக்க முடியும் என்று ஒதுங்கி விடாமல் இருக்கின்ற சமூக அமைப்பிற் குள்ளிருந்தே செய்ய வேண்டிய தன்னால் செய்ய முடிந்த பணிகளை விவரித்து கல்வித்துறையின் சீரழிவிற்கு காரணமான தீய சக்திகளை ஒளிவுமறைவின்றி துணிச்சலாகச் சுட்டிக் காட்டுகிறார் வசந்திதேவி.

தாழ்ந்து வரும் கல்வியின் தரம், பெருகி வரும் சுயநிதிக் கல்லூரிகள், கரைந்து வரும் கல்விக்கான செலவினம், கட்டாயக் கல்வி, தாய்மொழிக் கல்வி வழங்குவதில் அரசின் அக்கறையின்மை, ஆசிரியர்கள் பலரின் பொறுப்பற்ற நடத்தையால் கல்வியில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள், ஆராய்ச்சிப் பட்டங்கள்பெறுவதில் ஊழல்கள், ஆசிரியர் - மாணவரிடையே குறைந்து வரும் வாசிக்கும் பழக்கம், வசதியின்மையால் பள்ளிக்குச் செல்லாது பின்னர் படிக்க முனைவோர்க்கான அஞ்சல்கல்வி மற்றும் சமுதாயக் கல்லூரிப் படிப்புகளை விரிவுபடுத்தல், மாணவியர்க்கான பிரத்யேக கவனம், கவுன்சிலிங் முறை போன்ற அனைத்து கல்வி சார்ந்த பிரச்சனைகளும் இவ்விருவரின் உரை யாடலில் அலசி ஆராயப்படுகின்றன.

கல்வி நிறுவனங்களில், ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை இன்று ஏற்பட்டுள்ள சீரழிவைத் தடுத்து நிறுத்த ஆசிரியர்களால் மட்டுமே முடியும் என சுந்தர ராமசாமியும், வசந்திதேவியும் உறுதியாக நம்புவதால் இருவரும் ஆசிரியர்களைக் கடுமையாக விமரிசித்திருக்கின்றனர். ஆசிரியர்கள் மீது வசந்திதேவி சுமத்திய குற்றச்சாட்டுகளைக் கேட்டு விட்டு அதன் சாரம்சத்தை தொகுத்துக் கூறும் சுந்தர ராமசாமியின் வார்த்தைகள் இவை:

'ஆசிரியர்களுக்குப் பொறுப்புணர்வு இல்லை; மேலே இருப்பவர்கள் யாரும் அவர்களுக்கு வழிகாட்டும் நிலையில் இல்லை; தொழிற்சங்கம் வழியாக அவர்களுடைய போராட்டம் அவர்களுடைய நலன்கள் சார்ந்தாக மட்டுமே இருக்கிறது. சம்பளம், பணி போன்ற விசயங்களில் மட்டுமே சங்கம்

பேரா. மணிக்குமார் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் (AUT) முன்னாள் பொதுச்செயலாளர்.

ம.சு.பல்கலைக்கழக ஆசிரியர் மன்றத்தின் செயலர்.

தமிழகப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் இன்றைய செயலாளர்.

www.padippakam.com



அக்கறை கொண்டிருக்கிறது. வெறும் பணியாளர்களாக மட்டுமே இயங்கும் ஆசிரியர்களைச் சமூகச் சக்திகளாக மாற்ற இன்று எந்த வழிமுறைகளும் இல்லை.' (பக்.59)

பொதுவாக பெரும்பாலான ஆசிரியர்களின் போக்கு விமரிசிக்கத்தக்கதாக இன்றிருந்தாலும் தமிழகத்தில் சமூக அக்கறை கொண்ட ஆசிரியர்களும் ஆசிரியர் இயக்கங்களும் இல்லாமல் இல்லை. உரையாடலின் ஆரம்பத்தில் ஆசிரியர்களைக் குறை கூறும் வசந்திதேவி பின்னால் ம.சு.பல்கலைக்கழகத்தில் தான் துணை வேந்தராகப் பணியாற்றியபோது பட்டப்படிப்பு பாடத்தில் மாற்றம், விடைத்தாள் திருத்துவதில் வெளிப்படையான அணுகுமுறை, தவறு செய்யும் கல்லூரி நிர்வாகங்கள் மீதான நடவடிக்கை போன்ற முயற்சிகளை எல்லாம் ஆசிரியர் களது ஒத்துழைப்பின் மூலம் வெற்றிகரமாகச் செயல் படுத்தியதாகத் தெரிவிக்கிறார். சுந்தர ராமசாமி விரும்புவது போல் சில கல்லூரி ஆசிரியர்கள் மூட்டாவில் சமூக சக்திகளாக உருவாகியிருக்கிறார்கள். எழுத்தறிவு அறிவியல் இயக்கங்களில் அவர்கள் பாராட்டக்கூடிய அளவிற்கு பணி செய்திருக்கிறார்கள். அத்தகைய நபர்களின் ஆதரவின் மூலமே வசந்திதேவி சில மாற்றங்களை பல்கலைக்கழக கல்வியில் கொண்டுவர முடிந்தது.

ஆனால் ஆரம்பக் கல்வியில் விரும்பிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அதிகமாகப் பங்களிக்க வேண்டிய ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் போக்கு இன்று பெருத்த ஏமாற்றத்தைத் தருவதாக உள்ளது. ஒரு காலத்தில் ஓர் அமைப்பின் கீழ் இருந்து செயல்பட்ட அவர்கள் இன்று ஐந்து அமைப்புகளாக பிளவுபட்டு செயல்பட்டு வரு கிறார்கள். பொருளாதாரக் கோரிக்கைகளை வென்றெடுப் பதற்கு இவர்களுடைய ஒற்றுமை பயன்படுகிறது. ஆனால் கல்வியை ஜனநாயகப்படுத்தவோ அல்லது கல்வி நிறுவனங்களில் உள்ள ஊழலை எதிர்த்தோ இவர்கள் கூட்டமைப்பு போராடாது. பெரும்பாலான கிராமப் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர் மீதான குற்றச்சாட்டுகளை இவ்வியக்கங்கள் கண்டுகொள்ளாது.

ஆசிரியர்கள் பற்றி விமரிசிக்கும்போது ஆசிரியர் நியமனத்தில் நடைபெறும் முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் பற்றி வசந்திதேவி தனது உரையாடலில் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஏனெனில் இது ஒரு அடிப்படை யான பிரச்சினை. தகுதி-திறமை தவிர இதர அடிப்படை களிலேயே ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக் கிறார்கள். இரு ஆண்டுகளுக்கு முன் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரு அரசுஉதவி பெறும் கல்லூரி உடற்கல்வி இயக்குநர் நியமனத்திற்கான நேர்முகத்தேர்வு நடந்தது. "Hat Trick' என்றால் என்ன என்று தெரியாத, தேர்வில் கலந்து கொண்ட அனைவரையும்விட மிக மோசமாக பதில் அளித்த ஒரு நபரை, பல்கலைக்கழக பிரதிநிதியான என்னுடைய எதிர்ப்பை நிர்வாகக்குழுவினர் பெரும் பான்மையை வைத்து உதாசீனப்படுத்திவிட்டு நியமனம் செய்தனர். மத்திய அமைச்சர் ஒருவர் சிபாரிசு என்று என்னிடம் கூறினர். ஆனால் ஒருபெரிய தொகையை நிர்வாகம் பெற்றுக் கொண்டே பதவி வழங்கியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நபரின் மைத்துனர் (ஒரு போலீஸ் அதிகாரி)பின்னர் என்னிடம் தெரிவித்தார். இதுபோன்ற படிப்பில் அக்கறை இல்லாது எப்படியோ பட்டம் பெற்று, பின் பணத்தைக் கொடுத்து ஆசிரியர்களாக வருபவர்களை சமூக சக்தியாக யாரால் மாற்ற முடியும்? (தொடக்கப்பள்ளி ஆசிரியர் நியமனத்துக்கு தமிழகத்தில் இன்றைய விலை ஒருலட்சம் -ஒன்றரைலட்சம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட யதார்த்தம்)

ஆசிரியர் சமூகம் இன்றையகல்விக்கு எதிர்வினை தரவேண்டும்; மனப்பாடத்தகுதி, குறுக்குவழியில் வெற்றி பெறும் முறைகள், கல்வி சார்ந்த குறைகள் -இவற்றுக் கெதிராக போராடவேண்டும் என சுந்தரராமசாமி தனது விருப்பத்தை எடுத்துரைக்கிறார். ஆனால் இன்றைய சீரழிவுச்சூழலில் ஆசிரியர்கள் தங்களுக்குரிய கடமை களைச் செய்தாலே போதும் என பாதிக்கப்பட்ட மாணவர் களின் பெற்றோர்கள் கருதுகிறார்கள்.

ஆசிரியர் விடைத்தாள் திருத்துவதில் காட்டும் அலட்சியம் பற்றி வசந்திதேவி சுட்டிக் காட்டி யுள்ளார்(ப.117). சமீபத்தில் ஒரு பல்கலைக் கழகத்தில் நூற்றுக்கு பூஜ்யம் போட்டிருந்த விடைத்தாளுக்கு இரண்டாவது தேர்வாளர் 65 மார்க்குகள் வழங்கியிருந்தார். தேர்வாளர் குழுத்தலைவர் (CHAIRMAN BOARD OF EXAMINERS) மதிப்பீட்டுப் பட்டியலை காட்டியபோது மூன்றாவது மதிப்பீட்டிற்கு ஏற்பாடு செய்யுமாறு வற்புறுத்தினேன். 65 மார்க்குகள் போட்டிருந்தவர் படிக்காமல் பக்கங்களை வைத்து மார்க் போட்டிருந்ததாக மூன்றாவது தேர்வாளர் கூறினார்.

பக்கம்பக்கமாக கிறுக்கித்தள்ளிவிட்டால் கலைப் பாடங்களில் இன்று பாஸ் செய்துவிடலாம் என பல மாணவர்கள் நம்புகிறார்கள். அவர்கள் நம்பிக்கையும் வீண் போகாதவாறு பல ஆசிரியர்கள் படிக்காமல் மார்க்போட்டு வருகின்றனர். அதே சமயம், சரியானவிடையை, குறிப்பாக ஆங்கிலத்தில் எழுதும் மாணவ-மாணவியர்கள் பாதிக்கப் படுகின்றனர். வசந்திதேவி அறிமுகப்படுத்திய விடைத்தாள் திருத்துதலில் வெளிப்படை அணுகுமுறை இத்தகைய மாணவ-மாணவியர்களுக்கு நியாயம் கிடைக்க நிச்சயம் உதவும்.

ஒரு காலத்தில் தான்கற்ற, கற்றுக்கொடுக்கின்ற பாடங்கள் சம்பந்தப்பட்ட விடைத்தாள்கள் மட்டுமே ஆசிரியர்கள் திருத்தினர். சில ஆண்டுகளுக்கு முன் ஓர் தமிழாசிரியர் தமிழ் விடைத்தாள்களுடன் கலந்திருந்த வணிகவியல் விடைத்தாளை திருத்தி பின்னால் கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார். அஞ்சல்கல்வி முறையில்

படிப்பகம்

www.padippakam.com



தேர்வு எழுதுபவர்கள் எண்ணிக்கை பெருகிவரும் இக்காலத்தில் எப்படியாவது விடைத்தாள்களைத் திருத்தி வாங்கி தேர்வின் முடிவை வெளியிட்டால் போதும் என மனநிலையில் செயல்படும் தேர்வுக்கட்டுப்பாட்டு அதிகாரி பொறுப்பற்ற ஆசிரியர்கள் விடைத்தாளைப் படிக்காமல் திருத்த வழிவகுக்கிறார்.

கல்வித்துறையில் தவறுகள் நடைபெறும்போது அவற்றை யாரிடம் எடுத்துச்சொல்வது, தவறு செய்பவர்களை தண்டிக்கக்கூடியவர்கள் அதற்கான தகுதி படைத்தவர்களா என்ற பிரச்னைகள் எல்லாம் எழுகின்றன. கல்வி நிறுவனங்களில் நடைபெறும் முறைகேடுகளைக் கண்டு கொள்ளாமல் இருப்பதே சிறந்த நிர்வாக நடைமுறையாக பெரும்பாலான துணைவேந்தர்கள் பின்பற்றியபோது; வசந்திதேவி அரசு விதிகளை மீறிய மாணவர்களின் சேர்க்கைக்கு கட்டாய நன்கொடை வசூலித்து ஊழல் செய்த கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுத்தார். ஆயினும் ஆறுகல்லூரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததால் அதற்கான பரிந்துரையை பல்கலைக்கழக ஆட்சிக்குழுவின் மூலம் பரிந்துரைத்தபோது ஊழல்புரிந்த கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இல்லை (ப.169).

இன்றைய நம் அமைப்பிற்குள் தனிநபர் முயற்சியின் மூலம் உருவாக்கப்படும் உயரிய மதிப்பீடுகளும் பாரம்பரியங்களும் நிரந்தரமற்றது; பின்னொருவர் பதவிக்கு வரும்போது அவை எவ்வளவு எளிதாக நொறுங்கி அடையாளம் தெரியாமல் போய்விடுகிறது என்பதை வசந்திதேவி பதவி விலகியபின் ம.சு.பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன. அடிப்படை வசதிகள் இல்லாத கல்லூரிகளில் மாணவர் அல்லது மாணவியர் எண்ணிக்கையை அதிகரிக்க வசந்திதேவி பிடிவாதமாக மறுத்துவந்தார். அவருடைய காலத்தில் எம்.சி.ஏ.வகுப்புக்கு 5 சீட்டுகள் அதிகமாகக் கேட்டுக் கிடைக்காத ஒரு கல்லூரிமுதல்வர் அவர் பதவியிலிருந்து விடைபெற்றுச்சென்ற சில வாரங்களில் 15 சீட்டுகள் அதிகமாக எளிதில் பெற்றதாக என்னிடம் தெரிவித்தார். அன்று ஆசிரியர்களுக்கு யு.ஜி.சி.சம்பளம் கொடுக்காத கல்லூரிகளுக்கு புதிய வகுப்புகள் துவங்க அனுமதி இல்லை. ஆனால் இன்று அத்தகைய தடை ஏதும் கிடையாது. வசந்திதேவிக்குப்பின் பல்கலைக்கழக நிர்வாகம் கூட்டிய முதல்வர்கள் கூட்டத்தில் சில சுயநிதிக்கல்லூரி முதல்வர்கள் அவர் பதவியில் இருந்த ஆறுஆண்டுகள் இருண்டகாலம் என்றும், மாறியிருக்கும் நிர்வாக அணுகுமுறையால் தனியார் கல்லூரி நிர்வாகத்தினருக்கு புதியதோர் பொற்காலம் துவங்கியிருப்பதாகக் கூறி மகிழ்ந்ததாக என் (கல்லூரிமுதல்வர்) நண்பர் ஒருவர் சொன்னார்.

ஒரு வசந்திதேவியால் மாற்றத்தைக் கொண்டுவர முடியும். ஆனால் அதை நிரந்தரப்படுத்துவதற்கு பல வசந்திதேவிகள் தேவை. பலரும் புரியாமல் கேலி பேசுகிற ''சம்பளத்துக்கான போராட்ட''த்திற்கு ஆசிரியர்களை அணிதிரட்டி சிறைக்குள் அழைத்துச்சென்று சமூகம் பற்றிய பாடம்புகட்டி விழிப்புணர்வு கொண்ட ஆசிரியர்களை உருவாக்கும் மிகக் கடுமையான பணியை மேற்கொண்டுள்ள மூட்டா போன்ற தொழிற்சங்கங்களின் அங்கமாக இருந்து இயங்கிபின் பொறுப்புக்கு வருகிற வசந்திதேவிகளால் மட்டுமே இத்தகைய மாற்றங்களை துணிச்சலாகக் கொண்டுவரமுடியும். எனவே மதிப்பீடுகள் சார்ந்த அக்கறையும் எதிர்காலம் பற்றிய சிந்தனையும் உடையவர்களாக ஆசிரியர்கள் உருவாகவேண்டும். அத்தகைய ஆசிரியர்கள் சுதந்திரமாக செயல்பட கல்வித்துறை நிர்வாகம் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும். இவற்றிற்கெல்லாம் தேவையான கருத்துக்கள், சிந்தனைகள் **தமிழகத்தில் கல்வி** புத்தகத்தில் நிறைய இருக்கிறது. படிப்பார்களா சம்பந்தப்பட்டவர்கள்?

---

***தமிழகத்தில்கல்வி***

***கே. வசந்திதேவியுடன் உரையாடல் - சுந்தர ராமசாமி***

வெளியீடு : ***காலச்சுவடு பதிப்பகம்***

669,கே.பி.சாலை, நாகர்கோவில் - 629001

**VISIONTEK**

**SRE SRINIVASA TRADER**
**S.V.T. LINK**

**PCO Monitors, PCO Call Conference**

No. 5/1-G, P.V. Complex, Bagalur Road, Circle,
Hosur - 635 109.    Ph : 41993, 43359 .

www.padippakam.com



# வரப்பெற்றோம்

**நுகம்**
சிறுகதைகள்
**எக்பாட் சச்சிதானந்தம்**
விலை : ரூ.**60**

◆

**தீட்டு**
சிறுகதைகள்
**அழகியபெரியவன்**
விலை : ரூ.**60**
***தமிழினி வெளியீடு***

◆

**ஞானம்**
கலை இலக்கிய சஞ்சிகை
தொடர்புகளுக்கு :
தி. ஞானசேகரன்
19/7, பேராதனை வீதி, கண்டி
ஸ்ரீலங்கா.

**பூனையைப்போல அலையும் வெளிச்சம்**
குட்டி ரேவதியின் கவிதைகள்
விலை ரூ. **15**
***தமிழினி வெளியீடு***
342 டிடிகே சாலை, ராயப்பேட்டை,
சென்னை - 600014

◆

**ரகசிய வேட்கை**
**சி.மோகனின் சிறுகதைகள்**
விலை ரூ. **35**
***அகரம்***
15-B-1, சரவணா காம்ப்ளெக்ஸ்
வெள்ளப்பண்டாரத் தெரு
கும்பகோணம் - 612 001.

◆

**மார்க்ஸீயம் மார்க்ஸியமும்**
**பீட்டர் வோர்ஸ்லி**
**தமிழில் : பிரமிள்**
விலை ரூ. **55**
***லயம் வெளியீடு***
2, கமுலாலயம் லைன்
148, கோத்தகிரி ரோடு
ஊட்டி - 643002

◆

**கலகக்காரனின் திரைக்கதை**
ஜான் ஆபிரஹாம் பற்றியும்
அவரது படைப்புகளும்
தொகுப்பு : **ஆர்.ஆர்.சீனிவாசன்**
விலை ரூ. **80**
***தாமரைச்செல்வி பதிப்பகம்***
31/48, புதிய எண் 1280 ராணி
அண்ணாநகர், கே.கே.நகர்,
சென்னை - 600078

◆

**சறுக்கல்** - சிறுகதைகள்
**ஆர்.எட்வின் சாமுவேல்**
விலை ரூ. **35**
***மக்கள் வெளியீடு***
49, உனிசு அலி சாகிப்தெரு
எல்லிசு சாலை. சென்னை - 600002

◆

**ஆரியப்பாதையில் பசுவதை....**
**செ. திவான்**
***சுஹைனா பதிப்பகம்***
106 F,4A, திருவனந்தபுரம் சாலை
பாளையங்கோட்டை - 627002.

◆

**நடைவழிக் குறிப்புகள்**
**சி. மோகன்**
சில லட்சிய மனங்களைப்
பற்றிய பதிவுகள்
விலை ரூ. **50**
***அகரம் வெளியீடு***

◆

**நவீன உலகச் சிறுகதைகள்**
**தமிழில் - சி.மோகன்**
விலை ரூ. **70**
***அகரம் வெளியீடு***

◆

**ஒரு கதை சொல்லியின் கதை**
**-கழனியூரன்**
விலை ரூ. **40**
தாமரைச்செல்வி பதிப்பகம்

◆

**அந்தக்காலத்தில் காப்பி இல்லை**
**ஆ.இரா. வேங்கடாசலபதியின்**
**ஆய்வுக் கட்டுரைகள்**
விலை ரூ. **100**
***காலச்சுவடு பதிப்பகம்***
669, கே.பி.சாலை,
நாகர்கோவில் - 629001

◆

**இரவு மழை**
சிறுகதைகள்
**பா.செயப்பிரகாசம்**
***புதுமலர் படைப்பகம்***
வெண்முகில் வளாகம்
33, திருவள்ளுவர் நகர் (கிழக்கு)
கோவை - 641045

www.padippakam.com



# நிஜம் / மாயை

## சந்திரனில் கால் பதித்தது கட்டுக்கதையா?

B.S. வாரியர்

தமிழில் : ஜெயஸ்ரீ



1969 இல் மனிதன் நிலவில் கால்பதித்தது,

இருபதாம் நூற்றாண்டின் மகத்தான அறிவியல் சாதனை

என்று மதிப்பிடப்படுகிறது.

அன்று நிலவில் பதிந்த ஆம்ஸ்ட்ராங்கின் காலடித்தடங்கள்

'கடந்த நூற்றாண்டின் கையெழுத்து' என்று

கௌரவிக்கப்படுகிறது.

ஆனால் அந்த மகோன்னதமான சம்பவம்

இப்போது அமெரிக்காவிலேயே

கேள்விக்குறியாகியுள்ளது. நம்ப முடிகிறதா?

ஒரு விசாரணை.

நன்றி: கலா கௌமுதி (2000 அக்டோபர்8)

இருபதாம் நூற்றாண்டின் மிகவும் விசேஷமான அறிவியல் மாயாஜாலம் என்று கொண்டாடப்படுவது மனிதன் நிலவில் முதல்முதலாகக் கால்பதித்த அந்த நிகழ்ச்சிதான். 1969 ஜூலை 21-இல் நிலவில் இறங்கிய நீல் ஆம்ஸ்ட்ராங்கின் பெயர் பூமியின் மனிதன் இருக்கும் காலம் வரை உச்சரிக்கப்படும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. சோவியத்யூனியன், அமெரிக்கா என்ற இரு வல்லரசு களுக்கிடையே பனிப்போர் மிகக்கடுமையாக நடந்து கொண்டிருந்த காலத்தில்,இந்த உலகம் முழுவதையும் நடுக்கிக் கொண்டு ஸ்புட்நிக்1 என்ற சோவியத் செயற்கைக் கோள் பூமியைச்சுற்றி வலம் வந்தது. வல்லரசுகள் தமக்குள் நடந்த போரில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும்,தன் முகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் அற்புதமான ஏதாவதொரு செயலைச் செய்தே ஆகவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது அமெரிக்கா. விண்வெளி ஆராய்ச்சிகளில் சோவியத்யூனியன் நீண்ட அனுபவம் பெற்று முன்னணியில் இருந்தது. அமெரிக்க விண்வெளி அறிஞர் களுக்கு விடுக்கப்பட்ட சவாலை எதிர்கொள்ளத் தீர்மானித்த ரோஷக்காரரான அதிபர் கென்னடி 1961 மே 25 ஆம் தேதி நாட்டு மக்களிடம், ''இந்தப் பத்தாண்டுகளின் இறுதிக்குள் மனிதனை சந்திரனில் இறக்கி,பத்திரமாக பூமிக்குத் திருப்ப வேண்டியது நம் உடனடித்தேவை'' என்று தெரிவித்தார். இதற்காகப் பெரியதொரு தொகையை அதிபர் ஒதுக்கவும் செய்தார்.

ஆறு வாரங்கள் முன்பு யூரிக்ககாரின் என்ற ரஷ்ய விண்வெளிவீரர் பூமியை வலம்வந்து அமெரிக்காவை வெட்கமுறச்செய்த வேதனை,கென்னடி மட்டுமல்லாது அமெரிக்க மக்கள் அனைவரின் மனதிலும் நிறைந்திருந்தது.

1958 அக்டோபர் ஒன்றில் தொடங்கப்பட்ட ''நாசா'' (NASA: National Aeronautic and Administration) என்ன முட்டி மோதியும் விண்வெளிப் போராட்டத்தில் சோவியத்தைப் பின்னடையச் செய்ய முடியவில்லை.

வேறு ஒருவழியும் இல்லாதநிலையில்,நாசா அரங்கேற்றிய கபட நாடகம்தான் 1969 ஜூலையில் நடத்திய இந்தப்பயணம்.

மனிதகுலம் முழுவதையும் ''நாசா'' ஏமாற்றியிருக்கிறது என்ற கடுமையான குற்றச்சாட்டும், அதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்ற எதிர்வாதமும் கிளம்பியுள்ளது. எப்படியிருந்தாலும்,ஒன்று மட்டும் நிச்சயம். நீல் ஆம்ஸ்ட்ராங்கும் ஆல்ட்ரினும் சந்திரனில் இறங்கிய கதையின்மேல் கருப்பு நிழல் விழுந்திருக்கிறது. மேலும் இன்றுவரை ஒரு மனிதனும் நிலவில் இறங்கவேயில்லை என்பதே குற்றச்சாட்டுகளை உயர்த்துபவர்களின் வாதம். சரியான தீர்மானம் எடுக்க முடியாத நிலையிலேயே பலரும் இருக்கிறார்கள். எது சரியோ வாதங்கள் ரசமானவை. அவை என்னென்னவென்று பார்க்கலாம்.

### குற்றம் சாட்டுவோரின் பட்டியல்

டேவிட்பெர்ஸி, காட்டிடீன், ரால்ப்ரினெ, பில் கெய்ஸிங், ஜேம்ஸ்கொளியர், டேவிட்மில்னெ என்பவர்களே,

www.padippakam.com



சந்திரப் பயணம் வெறும் கட்டுகதை தான் என்று சால்பவர்களில் முக்கியமானவர்கள்.

**வான் ஆலன் பெல்ட்**

அப்பல்லோ பரம்பரை முழுவதையும் விசாரணைக் குட்படுத்திய ரால்ப் ரினெ சூரியனிலிருந்து வரும் கதிர்வீச்சு காரணமாக நிலவிற்குச் செல்லும் எந்த மனிதனும் எரிந்து போவான் என்று கூறுகிறார். '' வான்ஆலன் பெல்ட்டைக் கடந்து போனோம் என்று சொல்வது மிகப் பெரிய பொய்''.

விண்வெளிக் கலத்திலிருப்பது இரண்டு அலுமனியத் தகடுகளும் அவற்றிற்கிடையில் மிருதுவான வஸ்துவும் மட்டுமே. கதிர்வீச்சை அவற்றால் தடுக்க முடியாது.. பாதி வழியிலேயே அவர்கள் கருகிச் சாம்பலாவார்கள். கதிர்வீச்சைக் குறைக்கும் சக்தி அவர்களின் கவசத்திற்கும் (Suit) இல்லை.

நிலவில் Atmosphere இல்லை. சூன்யம்தான் நிலவுகிறது. அப்படி இருக்க அங்கே பறக்கவிடப்பட்ட அமெரிக்க தேசியக்கொடி மட்டும் மிக அழகாகப் பறப்பதெப்படி? இந்தச் சந்தேகம் 1999ல் ரால்ப்பிற்கு உண்டானது. ஆம்ஸ்ட்ராங்கும், ஆல்ட்ரினும் சந்திரனில் நடத்திய ஆராய்ச்சிகளைப் பற்றிய வீடியோ படத்தை அப்போது அவர் பார்த்துக் கொண்டிருந்தார். அன்று முதல் மனதில் குத்திய முள்போல ஒரு சந்தேகம். இது ஒரு மிகப் பெரிய சதிவேலையா? மனிதகுலம் முழுவதையும் ஏமாற்றிய தந்திரவேலையா? தொடர்ந்து விசாரணை நடத்திய ரால்ப் கடைசியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தார். இல்லை இன்று வரை ஒருவரும் சந்திரனில் இறங்கவில்லை. NASA Mooned America என்ற புத்தகம்எழுதி வெளியிடவும் செய்தார்.

சந்திரனில் மனிதனை இறக்குவதற்காக அமெரிக்க அதிபர் ஒதுக்கிய தொகை 4000 கோடி டாலர்களாம். இவ்வளவு தொகையை பெற்ற பிறகும் லட்சியத்தை அடைய முடியாத 'நாசா' கடைசியில் ஒரு நாடகத்தை அரங்கேற்றியது. பயணிகளையனுப்பி அவர்களுக்கு ஏதேனும் சம்பவித்து விட்டால் நாசா பிரச்சனைக்குள்ளாகும் என்ற பயம் நாடகம் நடத்தத் தூண்டுகோலானது.

சந்திரனிலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் கொஞ்சம் பாறைகளும், பிலிம்களும் மட்டுமே நாசா வெளியிடும் சாட்சிகள். அறிவியல் உண்மைகளும் ஆராய்ச்சி முடிவுகளும் யுக்தியும் நாசாவின் வாதத்திற்கு எதிரானவையே.

ஆம்ஸ்ட்ராங் சந்திரனில் இறங்கியதன் பிறகான சம்பவங்கள் தொலைக்காட்சியில் மிகவும் மோசமாக ஒளிபரப்பப்பட்டன. மங்கலான இரண்டு உருவங்கள் கல், மண் இவற்றில் குதித்து விளையாடிய காட்சிகள். நாசா வேண்டுமென்றே Uplink செய்யாமல் விட்டுவிட்டது. தகவல் தொடர்பாளர்கள் (MediaPersons) தொலைக்காட்சிப் படங்களை போட்டோ எடுத்து பின்னர் வெளியிட்டனர். திருட்டுத்தனம் வெளிப்படாமலிருக்க நாசா செய்த திரைமறைவு வேலை. ஆனால் Shake ஆகாத அதிமனோகரமான ஒரு குறையுமற்ற ஆயிரக்கணக்கான படங்களை விண்வெளி வீரர்கள் எடுத்திருந்தனர். போ..கஸ், எக்ஸ்போஷன் எதிலும் ஒரு குறையுமில்லை. அதிகப்படியான வசதிகளற்ற காமிரா வினாலேயே அவர்கள் முதல்தரமான படங்களை எடுத்திருந்தனர். சந்திர மண்டலத்தில் உண்டாகும் அபாயகரமான அதிர்வுகள் பிலிமிற்கு ஒரு கேடும் உண்டாக்கவில்லையாம்.

இந்த புகைப்படங்கள் முழுவதும் மிகத் துல்லியமாக வந்துள்ளதாகப் பிரபல புகைப்படக்காரர் டேவிட் பாஸர் சொல்கிறார். புகைப்படங்களில் நிழல் வரவேண்டுமெனில் சிறந்த ஒளி உமிழும் சாதனங்கள் வேண்டும். Spotlights. ஆனால் சூரியனிலிருந்து மட்டுமே ஒளி கிடைத்துக் கொண்டிருந்தது. இருப்பினும் மற்றதெல்லாம் நிழலிலிருக்க அமெரிக்கக் கொடியும் ''United States'' என்ற எழுத்தும் எல்லா புகைப்படத்திலும் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. மிகக்குறைந்த நேரத்தில் அதிகபட்ச புகைப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றதெனில் அவர்களுக்கு அற்புத சக்தி வாய்ந்த கை விரல்கள் இருந்திருக்க வேண்டும். Filter சரி செய்யவும், பிலிம் மாற்றம் செய்யவும் அவசியமல்லவா!

விளம்பரதாரர்கள் பலமணிநேரம் செலவழித்து எடுக்கும் புகைப்படங்களில் காணப்படும் பூரணத்துவம் ஒவ்வொரு படத்திலும் காணப்பட்டது சந்தேகங்களை பலப்படுத்தியது.

தேசியக்கொடியின் நிழல் காணப்படும் படத்தில் பக்கத்தில் நிற்கும் பயணியின் நிழல் இல்லை. இதெப்படி நிகழும்.

சந்திரமண்டலத்தில் பயணிகளின் பாதமுத்திரை, அழுத்தமாகவும் தெளிவாகவும் தெரிகிறது. ஆனால் 17டன் எடையுள்ள லாண்டிங் இயந்திரம், அப்படிப்பட்ட அழுத்தமான அடையாளங்களை உருவாக்கவில்லை. தரையை நோக்கி இறங்கும் இயந்திரத்தின் வேகத்தைக் குறைக்க, சக்தி வாய்ந்த ராக்கெட், கீழ்நோக்கி ஆவியைப் பெருக்கி வெளியேற்றும். அப்படித் தூசியைப் பரவச் செய்தமைக்கான அடையாளம் எதுவும் தரையிலோ ராக்கெட்டிலோ காணப்படவில்லை.

டேவிட் பெர்ஸி வேறொரு தவறைச் சுட்டிக் காட்டுகிறார். சந்திரனிலிருந்து திரும்பி வரும்போது, லூனார் கலத்தில் உள்ள இயந்திரங்களிலிருந்து அதிக அளவில் புகை வெளியேற வேண்டும். ஆனால் நாசாவின் டி.வி. படங்களில் இது கொஞ்சமும் காணப்படவில்லை.

**ஜேம்ஸின் கேள்விகள்**

ரால்ப்ரினெயின் புத்தகத்தை Edit செய்ய நியமிக்கப்பட்ட ஜேம்ஸ்கொளியர், இந்த விஷயத்தால் ஈர்க்கப்பட்டு, உண்மையைத் தேடுபவராக மாறினார். நீண்ட 1 1/2மணிநேர வீடியோ டேப் (Was it only a paper moon?) ஒன்றை வெளியிடவும் செய்தார். அரசாங்கம் பதிலளிக்க வேண்டிய பல கேள்விகளும் ஜேம்ஸின் டேப்பில் உள்ளது.

---

வான் ஆலன் பெல்ட்

பூமியைச்சுற்றி வளைத்திருக்கும் இரண்டு பிரதேசங்கள் அதிகபட்ச ஈர்ப்பு சக்தி உள்ள கணங்கள் நிறைந்திருக்கின்றன. இந்தப் பகுதியைக் கடந்துசெல்லும் விண்வெளிப் பயணிகளுக்கும், மின்னணுப் பொருட் களுக்கும் கதிர்வீச்சு மூலம் பிரச்னைகள் வரலாம். உள்ளிருக்கும் பெல்ட் பூமியிலிருந்து 1000-5000 கிலோ மீட்டர் அகலத்திலும், வெளியிலிருக்கும் பெல்ட் 15,000-25,000 கிலோமீட்டருமாக உள்ளது. ஜேம்ஸ் வான் ஆலன் என்ற அமெரிக்க இயற்பியல் அறிஞர் 1958-இல் இதனைக் கண்டுபிடித்தார்.

www.padippakam.com



1.விண்வெளிப்பயணி எவ்வளவுதான் தன்னைச் சுருக்கிக் கொண்டாலும் Space Suit அணிந்து உள்ளே நுழைய முடியாதபடியான சிறிய வாயில்தானே முக்கியக் கலத்திற்கும் லூனார் கலத்திற்கும் இடையில் இருந்தது?

2.அப்படியே உள்ளே நுழைந்தாலும் அவரால் வெளியே வரமுடியாத விதத்தில் லூனார் கலத்தின் நுழைவாயில் கதவுகள் உட்புறம் திறக்கக் கூடியவையாக இருந்ததே?

3.லூனார் கலத்திலிருந்து வீரர்கள் தங்கள் மனம் விரும்பியபடி,சோதனை செய்த விதத்தில் வெளியேறட்டும் என்று தீர்மானித்தார்களா? இந்த விஷயத்தில் நாசா எந்த நிபந்தனையும் நல்கவில்லையா?

4.ஐந்தடிநீளம் மட்டுமேயிருந்த லூனார் கலத்தில் பத்தடி நீளமுள்ள ரோவரை எப்படி வைத்தார்கள்?

இந்தக் கேள்விகளுக்கான பதிலை அமெரிக்கக் குடிமக்களின் முன்னர் விளக்கிச் சொல்லும்படி நாசாவை அறைகூவி அழைக்கிறார் ஜேம்ஸ்.

**சந்திரமண்டலப்பயணம் நிஜம்தான்.**

அப்பல்லோ விண்கலம் மூலமாக மனிதன் நிலவில் கால் பதித்தான் என்பதை நம்புவதோடு மட்டுமின்றி அதைத் தெளிவுபடுத்த முயற்சி செய்து கொண்டிருப்போரின் சில எதிர்வாதங்கள் இதோ.

**வாதங்கள்**

1.30வருடங்களாக உலக மக்களை ஏமாற்றியிருக்கிறது நாசா.

2.சந்திரனில் ஆளை இறக்குவதற்குத் தேவையான கணிப்பொறி தொழில் நுட்பம் 1969இல் இல்லை.

3. அப்பல்லோ கலங்களின் நீளமும், எரிபொருள் திறனும் தேவையான அளவு இல்லை.

4.ஆம்ஸ்ட்ராங் முதல் முதலாக நிலவில் கால்வைக்கும் புகைப்படம் எடுக்க வேறு ஆள் அங்கே இருந்தார்களா ?

5. பயணியின் பாத அடையாளங்களிள்படிந்த தரையில் கட்டிகள் உருவானது?

6. சந்திரனில் காணப்படும் வெயிலின் கொடுமையைப் பயணிகள் எப்படி தாங்கினார்கள்?

7.விண்கலம் கீழே இறங்குவதற்கு உதவும் பொருட்டு ராக்கெட் மூலம் ஆவியைக் கீழே செலுத்தியபோது தூசி ராக்கெட்டில், அங்கே பள்ளம் எதுவும் உருவானதாகவோ காணப்படாதது ஏன்?

8. அப்பல்லோ கலத்தில் பயணிகள் ஏறவேயில்லை என்கிறார் பில் கெய்ஸிங்.

9. நாசாவின் ஏமாற்றுவேலைக்குத் துணை போக மறுத்தஒரே பெண் பயணி christa makolif ஐ கொல்வதற்காக, சேலஜ்சர் விண்கலத்தில் உடனிருந்த 6 பேரும் கொல்லப்பட்டார்கள்.

10. வான் ஆலன் பெல்ட்டைக் கடந்து போகிறவர்கள் எரிந்து சாம்பலாவர்.

11. 5அடி நீளம் மட்டுமே உள்ள அப்பல்லோ கலத்தில் பத்தடிநீளரோவரை எப்படி வைத்தார்கள்?

12. சந்திரனிலிருந்து பாறைகளெல்லாம் கொண்டு வரப்படவில்லை. நாசா Special factory யில் மிகக் கவனமாகத் தயாரிக்கப்பட்ட கற்களைத்தான் மக்கள் பார்த்தார்கள்.

**எதிர்வாதங்கள்**

நீல்ஆம்ஸ்ட்ராங் சந்திரனில் இறங்கி 30 வருடங்கள் முடிந்துவிட்டது. இவ்வளவு நீண்டகாலம் இவ்வளவு பேரால் பெரியபொய்யை ரகசியமாகப் பாதுகாப்பது என்பது இயலாது. சந்திரப்பயணத்தில் அப்பல்லோ 17ஏற்படுத்திய வெற்றியோடு 1972 டிசம்பர் 19இல் அப்பல்லோ யுகம் முடிவடைந்துவிட்டது.

வேறுஇடங்களில் உள்ளதைவிடவும் கணிப்பொறி தொழில்நுட்பம் நாசாவில் மேன்மையடைந்திருந்தது. அன்றைய தொழில்நுட்ப அறிவைக்கொண்டு நடத்தக்கூடிய தாகவே சந்திரப்பயணம் அமைந்திருந்தது.

இன்றைய விண்கலத்தின் ராட்சத அளவிலுள்ள fuel tanleer உடன் ஒப்பிடுபவர்களே இந்த வாதத்தை உயர்த்து கின்றனர். (20லட்சம்லிட்டர்திரவ எரிபொருளினை வினாடிக்கு 6000லிட்டர் என்ற கணக்கில் கிட்டதட்ட எட்டு நிமிடத்தில் எரித்துத்தீர்க்கும் திறன்கொண்டது விண்கலம்) பூமியிலிருந்து நீங்கும்போதே கனமானவற்றையெல்லாம் ஒவ்வொன்றாகத் தூக்கியெறிந்துவிடும் அப்பல்லோ கலத்திற்கு அவ்வளவு அதிகமான எரிபொருள் தேவையில்லை.

யாரும் இல்லை. ஆனால் லூனார் கலத்திலிருந்து நீளும் கையில் படமெடுப்பதற்காக காமிரா இணைக்கப் பட்டிருந்தது.

ஈரமில்லாமலும் கட்டிகள் உருவாகும்.

Spacesuit,நீர்த்துளிகளைக் கொண்டு சுழன்று குளிர்விக்கும்படி அமைக்கப்பட்டிருந்தது.

பூமியை ஒப்பிடும்போது சந்திரனின் ஈர்ப்புவிசை குறைவு. எனவே குறைந்தஅளவு ஆவியைச் செலுத்தினால் போதும். காற்று இல்லையென்பதால் தூசி மிக உயரத்தில் பரவாது. உயரும் தூசியும் உடனே கீழே விழுந்துவிடும்.

மேலெழும்பும் விண்கலத்தை மறைத்தல், பயணிகளை மறைத்துவைத்தல்,பின்னர் அவர்களை விண்வெளிப் பயணத்தை முடித்துவிட்டு வந்ததாக வெளிப்படுத்தி ஆடம்பரமாக வரவேற்றல்,இப்படியெல்லாம் நடத்த அமெரிக்கா என்ன வெள்ளரிக்கா பட்டணமா?

விவாதத்திற்காக எதுவும் செய்ய முயலுபவர்கள் சாட்சிக்கு வரஇயலாதவர்களைத் தங்கள் பக்கம் சேர்ப்பது என்பது மிகச்சாதாரண விஷயம்.

பூமியைச் சூரியனின் கதிர்வீச்சிலிருந்து பாது காப்பவைதான் வான்ஆலன் பெல்ட்டுகள். வெகுவேகமாக அவற்றைக் கடந்துவிட்டால் பயணிகளுக்கு எந்தப் பிரச்னையும் வராது.செவ்வாய் கிரகத்திற்கு 2வருட Space travel செய்பவர்களுக்கு CosmicRadiation மூலம் பிரச்னை வரக்கூடும் என்பது வேறுவிஷயம்.

குடையும்,சைக்கிளும் மடித்து எடுத்துபோக முடிவது போலத்தான் பெரிய ரோவரையும் சிறியதாக்கி லூனார் கலத்தில் வைத்திருந்தனர்.

ஆக்ஸிஜன் இல்லாத சூழ்நிலையில் எண்ணிலடங்காத வருடங்கள் இருந்த பாறைகள்தான் அவை என்பதை Geologirts ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com



# இரவின் நினைவில்....

செல்லா



... உன்னை புண்படுத்தி விடுமோ என்று பயந்து பயந்துதான் சின்ன சின்ன வார்த்தைகளாய் தேடுவேன். நீ திணற வேண்டும் என திட்டமிட்டே என்னுள்ளிருந்து பூதமாக கிளம்பும் சில. எது என் விருப்பம் என்று என்னால் எப்பவுமே கண்டுபிடிக்க முடிவதில்லை. என் கடிதத்தை முடித்த வுடனேயே, சில நேரங்களில் எழுதிக் கொண்டிருக்கும் பொழுதே அதைப் படிக்கும் உன் உருவம், உன் மனநிலை என் நினைவைத் தொட்டுப் பார்க்கும். அதற்கான உன் பதில் நீ சொல்லாமலே எனக்கு தெரிந்திருந் தாலும் உன் வெளிப்பாடுதானே அதை அழகுபடுத்தும். நீ இதைதானே இதற்கு சொல்லப் போகிறாய் என்று உன் பதிலையும் கடிதத்தில் பலமுறை சேர்த்து விடுவேன். அதற்கு இல்லை என்ற உன் மறுப்பொலியையும் அடுத்த விளக்கத்தையும் கூட யூகிக்க முற்படுவேன்.

பதில் வராத உன் கடிதத்திற்கான காரணம் என் முந்தைய கடிதத்தில் ஒளிந்திருப்பதை கண்டுபிடித்து சமாதானமாய் இன்னொரு கடிதம், உன்னிடம் விளையாடவே அப்படிச் செய்தேன். உன்னை சோதிக்கத்தான் நீ நிஜம் என்று நம்பி விட்டாயா? உனக்கு என்னை முழுமையாய் தெரியுமென்றால் இதுகூடவா உனக்கு தெரியாது? என்பது போலிருக்கும்.

நான் எதையும் சொல்வதில்லை செய்துதான் பழக்கம் என்றபடி நீ உள்வருவது போல் உன் குரல் கேட்டு, திடுக்கிட்டு உடல் வியர்த்து எழுந்து நின்று கடிதத்தைப் போலவே ஏமாறுவேன்.

என்னை பார்க்காமல் இத்தனை நாள் உன்னால் முடியாதே என்று பதறிப் பையைத் தூக்கிக் கொண்டு புறப்படுவேன் நீ மேற்கு நோக்கிப் புறப்பட்ட தகவலுடன்திரும்பி வந்து அதே இடத்தில் உட்கார்ந்த பிறகு நீ நாடோடி என்பதை உணர்வேன், அன்பு, ஆத்திரம், கோபம், இன்பம், வெறுப்பு, துயரம் எல்லாவற்றையும் சேர்த்து எது அடுத்து என்பது தெரியாமல் எழுதுவேன், என் எல்லா வரிகளிலும் அக்கா குருவியைப் போல் ஒரே விஷயம் ஒலிக்கும், நீ வா என்பதுவாய் மட்டுமே அது இருக்கும்,

என் கடிதம் உனக்கு கிடைத்திருக்காது, நான் தேடுவது உனக்கு தெரிந்திருக்காது என பொய்யாய் நம்பி உன்னைப் பார்த்த நிலாவிடம் சொல்லி அனுப்புவேன். ஒளி எப்போதும் தன் கடமையை தவறாது என்றாலும் எனக்கு ஒலி அதுவும் வார்த்தை பிடிக்குமென்பதால் உன்னை பார்த்தவர்களிடம் சொல்லி அனுப்புவேன்.

நான் உன்னை எதிர்பார்ப்பது என்னை கொடுமைப் படுத்துவது என்றுணர்ந்து அமைதி கொள்ள முயற்சிப்பேன்.

உனக்கு நான் ஏன் வேண்டாம் என்று நீ கூறுவதாய் நான் தொகுத்தப் பொழுது அதில் நீ இப்படித்தான் கூறியிருந்தாய், என் அளவில்லா காதலை கண்ணை மூடிக்கொண்டே உன் மேல் கொட்டித் தேய்த்தேன், என்

www.padippakam.com



அன்பான உன் மீது படிந்திருந்த துயரங்களையெல்லாம் அகற்ற அரும்பாடுபட்டது உனக்கே தெரியும், கருங்கல் பாறையான உன்னை பெண்ணாக்கினேன் நான், என் முத்தத்தை உன் மேல் ஒவ்வொன்றாய் பதித்து நீ மென்மையடைவதைப் பார்த்து நான் மகிழ்ந்தேன், உனக்காக எத்தனை ஆண்டுகள்....எவ்வளவு..... ஆனால்.... ஆனால்....ஆனால்.... ஆனால்..... ஆனால் அடுத்து என்ன சொல்ல போகிறாய் என்பதை தெரிந்திருக்க வேண்டும் என்பது நியதிதான், ஆனால் அதற்குமேல் சத்தியமாய் எனக்குத் தெரியவில்லை, ஆனால் உனக்கும் கூட தெரிவதாய் எனக்குத் தெரியவில்லை.

ஆனால்..ஒன்றல்ல, ஆயிரம்,எத்தனை முறை மன்னிப்பது என்பது போல் அதன் சப்தம் ஒலிக்கிறது. ஏதோ ஒன்று உன்னுள்ளிருந்து என்னை தூக்கி எறிந்துவிட்டது என்பதை உணர மறுக்கிறது மனம்.

காதலில் சரி, தவறென்றொன்று உன்டா என்றவாறு உன் வாசனை என்னைக் கட்டித் தழுவும், அதில் முழுமையாய் புரண்டெழுந்து உட்கார்ந்து உனக்கெழுதுவது, என் கற்பனையை மீறி என்னை திகிலூட்டுபவனாகவே எப்பொழுதும் நீ என்னை வந்தடைகிறாய். நீ எனக்களிப்பதெல்லாம் நீ தான். நீ எனக்களிப்பதெல்லாம் நான், என் அலமாரியில் உள்ள சின்ன ஓலைப்பெட்டியில் நீ பத்திரமாய் வைத்துச் சென்ற முத்தத்தை எடுத்து என் உடலுக்கு ஒத்தடம் கொடுக்கிறேன். எனக்கதையளித்த இன்பத்தில் நீதிளைத்துக் கொண்டிருப்பது எனக்கு தெளிவாய் தெரிகிறது.

உனக்குக் கொடுக்கும் எதுவும் வார்த்தையில் அடங்கக் கூடாதென்பதற்காக எதுவுமில்லாமலிருக்கும் என் வெறுங்கையை கண்டுபிடித்து விட்டது போல் தடவுகிறது எதையும் எதிர்பார்க்காத உன் ஸ்பரிசம்.

எட்டிப்பார்த்து குரலொலித்து விட்டு பறக்கும் மைனாவாக இல்லாமல் நீயாக நீ வேண்டும் எனக்கு என்பதால்.........

**பிறழ்**

எதிரெதிரான வற்றுடனே ஒத்திசையும்படியான
காலமொன்று வந்துள்ளது
பெரும்பாலும் ஒத்திசையும்படியாக
இருப்பவை
எதிரெதிராகவே இருந்துவிடுகிறது
நாம் விழிகளை திறக்கும்போதுதான்
பெருங்கனவொன்று பிறக்கின்றது
இரு தாழிட்டடைக்கும்படி கட்டளையிட்ட
தார்வைக்குரல்கள்
தனியறையில் தவிப்பதை நம்மிலொருவர்
பார்த்த பின்பு வாழவேண்டுமென்ற
அம்மணக்குரல் தொடங்குகின்றது
ஒரே தலையிலமைந்த சமயோசித
காதுகள் இருவேறு குரல்களை
உள்வாங்கத் தொடங்கிவிட்டன
இப்படியாகவே இருந்துவிடுமென
நம்மில் சிலர் முடிவு செய்திருப்பதாக
அறிகின்றேன்
மேற்கூரை தாங்கியபடி கிடந்த
கற்றூண் கிளைவிடுவதை மட்டும்
பார்த்துக் கொண்டிருக்கிறேன் இப்போதைக்கு

*கண்டராதித்தன்*

www.padippakam.com



# தமிழ் அடையாளம்

## ஒரு கலந்துரையாடல்

பாண்டிச்சேரியில் நண்பர் ரவிக்குமார் முன் முயற்சியில் 'புதுவிசை'க்காக தமிழ் அடையாளம் குறித்த ஒரு கலந்துரையாடலுக்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

திருவாளர்கள்

**கண்ணன்** (பிரஞ்சு இன்ஸ்டிடியூட், பாண்டிச்சேரி)

**டாக்டர். சுப்பராயலு** (கல்வெட்டியல் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை)

**ராஜ் கௌதமன்** (எழுத்தாளர்)

**அ. ராமசாமி** (ம. சு. பல்கலைக்கழகம், நெல்லை)

**திலீப்குமார்** (எழுத்தாளர்)

**பாலாஜி** (சவுத்விஷன் பப்ளிஷர்ஸ், சென்னை)

**செந்தில்பாபு** (வரலாற்று ஆய்வாளர் JNU, டெல்லி)

**மதுசூதனன்** (புலம் பெயர்ந்த எழுத்தாளர், சென்னை)

**ரவீந்திரன்** (தேசிய கலை இலக்கியப் பேரவை, வவுனியா)

**ரவிக்குமார்** (பியுசிஎல், பாண்டிச்சேரி)

ஆகியோர் பங்கேற்ற இந்த முக்கியமான கலந்துரையாடலின் துவக்கப்பகுதிகள் இங்கே....

எழுத்துவடிவம் : **ச. தமிழ்ச்செல்வன்**

**கண்ணன்:**

தமிழ் அடையாளம் குறித்த இந்தக் கலந்துரையாடலின் துவக்கத்தில் சில கேள்விகளை நாம் கேட்டுக் கொள்வது அவசியம் என்று நினைக்கிறேன்.

முதல்ல தமிழ் அடையாளம் என்பதை நாம் எப்படி உள்வாங்குகிறோம். தமிழன் என்று நம்மைச் சொல்லிக் கொள்ள நமக்குள்ளே ஒரு போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறதா? ஒருவருக்கு நடைமுறையில் இது ஒன்றும் பிரச்னையில்லை. தமிழ் பேசுகிறார், தமிழ்நாட்டில் வாழ்கிறார் - எனவே எந்தப்பிரச்னையும் இல்லை. ஆனால் தன்னை ஒரு தமிழன் என்று அறிவின் மூலமாக ஆதாரங்களின் மூலமாக நிலைநிறுத்திக்கொள்ள ஒரு தனிமனிதன் எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சிகள் என்ன?

இப்போ இலங்கையிலிருந்து வரும் தமிழ்ப்படைப்புகளில் காணப்படும் 'சோளகக்காற்று' என்ற சொல் இங்கே புரிந்து கொள்ளப்பட என்ன முயற்சிகள்? அல்லது தென் பாண்டி நாட்டைச்சேர்ந்த ஒரு வேல.ராமமூர்த்தியின் படைப்புகளில் காணப்படும் கலாச்சாரக்கூறுகளை நகர்ப் புறத்தில் வாழும் தமிழ் பேசும் ஒருவரால் புரிந்துகொள்ள முடிகிறதா? அப்படிப் புரிந்துகொள்ள அவர் எடுக்கும் முயற்சிகள் என்ன?

அடுத்து உங்கள் மீது 'தமிழன்' என்று பிறர் முத்திரை குத்துவது. அல்லது நீங்களே மற்றவர்களை மலையாளி தெலுங்கன் என்று முத்திரை குத்துவதன் மூலம் உங்களைத் தமிழன் என்று அடையாளப்படுத்திக்கொள்வது. அதாவது ஒரு சமூகம் அல்லது ஒரு கலாச்சாரம் ஒரு குறிப்பிட்ட பகுதியை தன்னிடமிருந்து வேறாகப் பிரித்து அந்நியனாக அடையாளப் படுத்துவது. சிறீலங்காவில் தமிழர்கள் அந்நியர்களாக நிறுத்தப்படுகிறார்கள். கர்நாடகாவில் தமிழர்கள் அந்நியர் களாகிறார்கள். பிரான்சில் யூதர்கள் அந்நியர்களாகிறார்கள். அமெரிக்காவில் ஆப்பிரிக்க கறுப்பர்கள் அந்நியராக முத்திரை குத்தப்படுகிறார்கள். இந்த அடையாளப்படுத்துதல் என்ற செயல்பாடு எப்படி நடக்கிறது?

அடுத்ததாக வட்டார அடையாளங்கள் மற்றும் சாதிய அடையாளங்களுக்கு இடையே தமிழ் அடையாளம் எங்கே வருகிறது? கரிசல் கதைகள் நெல்லைச் சிறுகதைகள் தஞ்சைச் சிறுகதைகள் நாஞ்சில்நாட்டுப்படைப்புகள் என்று வரும் போது தமிழ் அடையாளம் எங்கே வருகிறது?

அப்புறம் இந்தியா - இலங்கை போன்ற நாடுகளில் பல்கலாச்சார ஊடுபாவுதல் (Inter-cultural relations) நிகழ்கிறது. இலங்கையில் சிங்கள - பௌத்த - இந்து சமூகம் ஏற்படுத்தியிருக்கும் ஒருவிதமான Fusion- தாக்கங்கள் இந்தியாவில் இந்து என்கிற ஒருமதம் ஏற்படுத்தியிருக்கும் கலாச்சாரத் தாக்கங்கள் - இப்போ ராமாயணத்தையும் மகாபாரதத்தையும் நீங்கள் எவ்வாறு உள்வாங்குகிறீர்கள்? ஒரு அந்நியனாக இருந்தா அல்லது அந்தக் கலாசாரத்துக்குள்ளேயே பங்கெடுத்துக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டா? இன்று எந்த ஒரு இளைஞனும் கர்ணன் அல்லது அர்ஜுனன் போன்ற கதாபாத்திரங்களை அந்நியமாக உள்வாங்கியுள்ளானா? சமஸ்கிருதத்துக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்புகள் இதெல்லாம் வேரோடிப் போயிருக்கிறதா? இல்லையா? இதையெல்லாம் தனித்தமிழ் அடையாளம் என்று சுலபமாக கடந்து போய்விடமுடியுமா?

வெளியிலிருப்பவர்கள் -உலகஅளவில் - இந்தியத் துணைக்கண்டம் என்று நம்மை அடையாளப்படுத்துகிறார்கள். வரலாற்று ரீதியாகவும் சரி புவியியல் ரீதியாகவும் சரி Ecological ஆகவும் சரி Indian sub continent என்றுதான் வெளியிலிருப் பவர்கள் நம்மை அடையாளப்படுத்துகிறார்கள்.

இது அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கூட முக்கியமாகத்தான் கருதப்படுகிறது. ஒரு பிரஞ்சுக்காரன் தன்னை ஒரு ஐரோப்பியனாகவும் அடையாளப்படுத்திக் கொள்கிறான். இன்று உருவாகிவரும் ஐரோப்பிய யூனியன் (European Union) என்கிற வடிவம் - இந்த Inter cultural identy ஐ தமிழ் அடையாளம் என்பதை முன்வைத்து எப்படிப் புரிந்து கொள்வது?

இன்னொரு முக்கியமான கேள்வி - பொதுப்புத்தி சார்ந்து இன்று பேசப்படும் தமிழ் அடையாளத்தை ஏறக் குறைய நொறுக்கக்கூடிய அளவில் உருவாகிவரும் தலித் அடையாளம் இந்தத்தமிழ் அடையாளத்தை எப்படி உள் வாங்கும்? தலித் மட்டுமல்ல. ஒரு மதரீதியான சிறுபான்மை யினரான ஒரு முஸ்லீமும் கூட.

இன்று சிறிலங்காவில் வாழும் தமிழ் முஸ்லீமின் நிலை என்ன? அல்லது தமிழ் கிறிஸ்தவரின் நிலை என்ன? ஒருவர் தன்னை 'தமிழ்'முஸ்லீம் என்று உணர்வதற்கான அடிப்படை என்ன?

ஒரு தலித் இன்று தமிழுக்காக தமிழ்வழிக் கல்விக்காக நடக்கும் போராட்டத்தை தன்னுடைய போராட்டமாக வரித்துக்கொள்ளமுடியுமா? தலித் அடையாளமும் தமிழ் அடையாளமும் ஒன்றுக்குள் ஒன்று ஒத்துப்போகிற நிலை யில் உள்ளனவா அல்லது எதிரெதிர்நிலையில் உள்ளனவா அல்லது இரண்டும் சேர்ந்ததா?

அடுத்து நான் சொல்வது கொஞ்சம் வித்தியாசமாகப் படலாம். தமிழை ஒரு வர்த்தகப் பெயராக - அதாவது ஒரு Cultural Brand ஆகப்பார்ப்பது. தமிழ் என்பது எழுதினாலும் சரி அரசியலில் செயல்பட்டாலும் சரி அது ஒரு Cultural Brand ஆகப் பயன்படுகிறது. அதாவது நீங்க ஆஸ்திரேலியாவுக் கோ பிரான்சுக்கோ குடிபோகணும் என்றால் தமிழன் என்கிற அடையாளத்தைப் பயன்படுத்தி ஆகணும். அல்லது அங்கே தாக்கப்படுகிறோம் என்றால் தமிழன் என்ற அடையாளத் தைப் பயன்படுத்தித்தான் தஞ்சம் கேட்கிறோம். இங்கேகூட தமிழ் என்கிற அடையாளம் பயன்படுத்தப்படுகிறது. இந்த வரலாற்றினுடைய கூறுகள் எல்லாமே தமிழை ஒரு கலாச்சார வர்த்தகப்பெயராக ஆக்கியுள்ளன. இன்று இண்டர்நெட்டில் எத்தனையோ தமிழ் வலைத்தளங்கள் வந்திருக்கின்றன.

ஒரு விபத்தின் மூலமாக தமிழ் என்பதை உங்களிட மிருந்து பிடுங்கிட்டா என்ன ஆகும்? இன்று உலகம் முழுவதும் வியாபாரமயமாகி வரும் சூழலில் 'தமிழ்'என்கிற இந்த கலாச்சார அடையாளத்தை ஒரு கலாச்சார வர்த்தகப் பெயராக (Cultural Brand) பார்க்கமுடியுமா? இப்படி சொல் வது உங்களுக்கு கோபத்தை ஊட்டலாம். ஆனா இது உங்களுக்கு வர்த்தக ரீதியாக demand பண்ணுவதற்கும் பயன்படுகிறது. அதனால் தான் இந்த அடையாளத்தை போஷிக்கிறீங்க. வளர்க்கிறீங்க. அந்த value வுக்காகவே அதை வளர்க்கிறீங்க.

கடைசியாக இந்தத் தமிழ் அடையாளம் என்பதை நாம் எப்படி உள்வாங்குகிறோம்? சங்கத்தமிழில் இருந்து ராஜராஜசோழனிலிருந்து எல்லாத்தையும் அப்படியே உள் எடுத்துக்கொண்டு ஒரு blind inheritance ஆகவா? அல்லது ஒரு critical inheritance ஆகவா?

இதுவரை நான் முன்வைத்தது இந்த discussion க்கான ஒரு கட்டமைப்பு அல்ல. அவரவர் அனுபவம் சார்ந்த பின்புலத்தோடு பேசவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

**டாக்டர் A. சுப்பராயலு :**

கண்ணன் குறிப்பிட்டது போல இது ஒரு சிக்கலான தலைப்பு. தமிழ் அடையாளம் என்பதை எந்தெந்த வகையில் உணர்வது? அனுபவத்தில் மட்டுமல்ல. நடைமுறையில் அது எப்படி உள்வாங்கப்படுகிறது என்று விரிவாகப் பேசுவது கடினமான பணி.

எனக்குத் தெரிந்த வரலாற்று அறிவின் அடிப்படை யில் - அது முழுமையான அறிவு என்று சொல்லமுடியாது - சில விஷயங்களைச் சொல்லலாம்.

பொதுவாக இந்தத் தமிழ்மொழி வழியான அடையாளம் என்பது கடந்த 30 ஆண்டுகளுக்குள்ளாக ரொம்ப வளர்ந்த ஒன்றுதான். அதற்கு முன்னால் மொழிவாரி மாநிலங்கள் என்ற பிரிவினை இல்லாததால் அவ்வளவாக இந்த உணர்ச்சி இல்லை. 1956 க்குப் பின்னாடிதான் இது அதிகமாக வளர்ந்துள்ளது. அதற்கு முன்னாடி தமிழ்நாட்டு க்கு உள்ளே மட்டுமல்ல வெளியேயும் தமிழர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் எந்த வகையில் ஒரு மக்கள் அதாவது ஒரு வகையான பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் என்ற உணர்வு இருந்ததா?- மொழிவாரியாக அது இருந்ததா என்று எடுத்த எடுப்பில் நாம் சொல்லமுடியாது என்றே நினைக்கிறேன்.

இப்படியே பின்னாடி போகப்போக மொழிவழியாக இந்த உணர்ச்சி என்பது இருந்திருக்கிறது. ஆனால் அது வந்து முதன்மையாக இருந்ததா? என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டியிருக்கிறது. ஏறக்குறைய நமக்குத் தெரிந்து தமிழ்மொழி - அதாவது அதனுடைய இலக்கியங்கள் 2500 ஆண்டுகளாக கிடைக்கிறது. அதற்குமுன் தமிழ் பேசப்பட்டி ருந்தாலும் அதுபற்றி அதிகமாக சான்றுகளோடு சொல்ல முடியாது. ஏன்னா அது வரலாற்றுக்கு முந்திய காலமாக போய்விடுவதால் அதைப்பற்றி அதிகமாக சொல்ல முடியாது.

இந்த 2500 ஆண்டுகளுக்குள்ளாக தமிழ்மொழி பெரும்பாலும் இன்றைக்கு இருக்கக்கூடிய தமிழ்நாட்டு எல்லைக்குள் மட்டுமல்ல கேரளாவும் சேர்ந்த ஒரு நிலப்

படிப்பகம்

www.padippakam.com



பகுதிக்குள்ளும் வழங்கப்பட்டது என்ற அளவுக்கு சொல்லலாம். அதாவது அதை தமிழகம் என்று சொல்லியிருக்கிறார்கள் அதாவது தமிழகம் என்று தமிழர்களும் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். தமிழர்களைப் பார்த்த வெளிநாட்டவர்களும் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக வெளிநாட்டு யாத்திரீகர்களாக வந்த கிரேக்க,ரோமானிய, எழுத்தாளர்கள் தமிழகத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அண்டையிலே இருக்கக்கூடிய இலங்கை நாட்டில் இருக்கக் கூடிய பாலி இலக்கியங்களிலேயும் தமிழ்நாட்டைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே அவர்கள் எல்லோருமே தமிழகம் என்று குறிப்பிடவில்லை,'Dha'என்ற உச்சரிப்புடன் 'தம்ம'தமிழகம் என்று சொல்கிறார்கள் அது ஏன் என்று சொல்லமுடியவில்லை.

பாலி மொழியிலேயும் சரி கிரேக்க அல்லது லத்தீன் மொழியிலேயும் சரி ''தமிரிக''என்று சொல்லியிருக்கிறார்கள். அப்பவந்து ''தமிழகம்''ஏதோ ஒருவகையில் உச்சரிக்கப் பட்டது என்று தெரிகிறது. அப்படி ஒருசொல் அவர்களுடைய வாயில் அப்படி வந்ததா? அல்லது ஏதோ ஒரு வட்டார அல்லது தமிழின் ஏதோ ஒரு கிளைமொழியில் (Dha) தமிழகம் என்று வழங்கப்பட்டதா என்று தெரியவில்லை. எப்படியோ அப்படி ஒரு சொல் இருந்திருக்கவேண்டும்.

**வெளியிலிருப்பவர்கள்-**
**உலகஅளவில்**
**இந்தியத் துணைக்கண்டம் என்று**
**நம்மை அடையாளப்படுத்துகிறார்கள்.**
**வரலாற்று ரீதியாகவும் சரி**
**புவியியல் ரீதியாகவும் சரி**
**Ecological ஆகவும் சரி**
**Indian sub continent என்றுதான்**
**வெளியிலிருப்பவர்கள்**
**நம்மை அடையாளப்படுத்துகிறார்கள்.**

அதற்குப்பின்னாடி தமிழகம் அல்லது 'தமிழக' என்று ஒரு இடம் இருந்தது பற்றி சங்கஇலக்கியப் பாடல்களில் இதைப்பற்றி வருகிறது. அங்கே பல அரசுகள் இருந்துள்ளன. ஒரே அரசின் கீழ் தமிழகம் சங்ககாலத்தில் (2000 ஆண்டுகளுக்கு முன்) இருந்ததில்லை. ஒவ்வொரு பகுதியிலும் சின்னச்சின்ன அரசுகள் இருந்திருக்கின்றன. பல குறுநில அரசுகள் இருந்துள்ளன. மூன்று அரசர்கள் பெரிய அரசுகள் மூவேந்தர்கள் என்று சொல்லக்கூடிய பெரிய அரசுகள் இருந்துள்ளன. இவர்களுக்குள்ளாக தமிழ் என்ற உணர்வை விட அவரவர்களுடைய அவர்கள் காலத்ததிய இனம் - இனக்குழு Tribe அல்லது clan - என்கிற அந்த அடையாளம் தான் அதிகமாக இருந்ததாக கருத வேண்டியுள்ளது. சேரன் என்றும் சோழன் என்றும் அவர்களுக்குள் ஒரு குழுவில் சொல்லிக் கொள்கிறார்கள். ஒரு சில இடங்களில் 'தமிழ்'முன் வைக்கப்படுகிறது. மதுரையைப் பற்றிச் சொல்லும்போது ''தமிழ் கெழு ''என்று தமிழை ஒரு அடையாளமாக சொல்கிறார்கள். அதுகூட அந்த இடத்தில் சங்கம் இருந்து வளர்ந்த ஊர் என்பதால் கூறப்பட்டிருக்கலாம். ஆனால் தமிழ்நாடு முழுவதும் ஒரு நாடு - இணைந்த ஒருநாடு என்ற எண்ணம் அந்தக்காலத்தில் இருந்ததா என்று உறுதியாகக்கூற முடியாது. ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகக் கூறமுடியும். வடக்கே போகப்போக தமிழ் மறைந்து வேறு ஒரு (வடுகு மொழி) பேசப்படும் நிலப்பகுதி இருக்கிறது என்கிற உணர்வு அவர்களிடத்து இருந்துள்ளது. ஆனால் உள்ளே எல்லோரும் ஒரு மொழி பேசுபவர்களாக இருக்கிறார்கள் என்ற உணர்வு மட்டும் இருந்ததாக நினைக்கவேண்டியிருக்கிறது. தெளிவாக இதெல்லாம் ஒரு வகையான மொழியால் இணைந்த நாடு என்று சிலப்பதி காரத்தில்தான் வெளிப் படையாக முதன்முதலாக வருகிறது.

''வடவேங்கடம் தென்குமரி ஆயிடை''என்று அதாவது இந்த எல்லைகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பு ஒரே நிலம் என்று இளங்கோவடிகளால் கூறப்படுகிறது. இளங்கோ வடிகளின் காலம் தெளிவாக கூறமுடியாவிட்டாலும் கி.பி.6 முதல் 8 ஆம் நூற்றாண்டு வரைக்கும் என்று கூறுகிறார்கள். இன்னும் சிலர் 2 - 3 ஆம் நூற்றாண்டு என்று கூறுகிறார்கள். ஆனால் 5-6 என்று (வரலாற்றுப்பூர்வமாக) அந்த நேரத்தில் இப்படி ஒரு எண்ணம் பரவலாக இதெல்லாம் ஒரு நிலப்பரப்பு-என்று இருந்ததாக கருதஇடமுண்டு. அப்போதும் கூட உள்ளே சேரநாடு வேறே-சோழன் வேறே- பாண்டியன் வேறு என்று ஆட்சியினால் நாம் வேறு வேறு என்ற கருத்தும் இருந்திருக்கிறது. அதாவது ஒரு அரசியலால் தமிழ்நாடு ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு பெரிய அரசு உருவாக வில்லை. அரசுகள் கொஞ்சம் கொஞ்ச மாக உருவாகிக் கொண்டிருந்தன. ஆனால் முதல்நிலை (Early states) அரசுகள் ஏறக்குறைய சங்க காலத்திலேயே உருவாகத் தொடங்கி விட்டன. சிலப்பதிகாரத்தில் அந்த அரசுகள் இன்னும் கொஞ்சம் பெரிய அரசுகளாகக் காணப்படு கின்றன. தெளிவாக ஒரு பெரிய அரசு உருவாவது பல்லவர்கள்/பாண்டியர்கள் காலத்தில்தான். அதாவது கி.பி.6-9 ஆம் நூற்றாண்டு வரைதான் கொஞ்சம் பெரிய அரசுகள் வடக்குத் தமிழ்நாடு-அதாவது தொண்டை மண்டலம். வடமாவட்டங்கள் எல்லாம் இணைந்து ஒரு ஆட்சிப் பகுதியாகவும் - தென் மாவட்டங்கள் எல்லாம் இணைந்து (பாண்டிநாடு) ஒரு ஆட்சிப்பகுதியாகவும் இணைக்கப் படக்கூடிய நிலையை -கி.பி.6-9 வரை பார்க்கலாம்.

இந்த நேரத்தில் சேரநாடு-தமிழகத்தில் ஒருபகுதியாக இருந்த சேரநாடு -தனியாக ஒரு நாடாக ஆகிவிட்டது. அதாவது அதன் மொழியான மலையாளம்-தமிழ்மொழியின் கிளை மொழியாக இருந்தது. பின் ஓரளவுக்கு முழுமையடைந்த ஒரு தனிமொழியாக உருப்பெற்று விட்டதால்கூடஇருந்த தனித்துவம்- தனியாகிவிட்டது என்று கூறலாம்.

கி.பி.9 வரை இந்த நிலை இருந்துள்ளது. அரசு என்பதை

www.padippakam.com



மட்டும் நாம் முதன்மையாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அரசியல் சாராத வேறுசில கூறுகளும் - அதாவது சமுதாய-சமய-கலாச்சாரம்-போன்ற பிற கூறுகளும் இந்த இணைப்பை 'ஒரு நாட்டு' இணைப்பு ஏற்படுவதற்குத் தூண்டுகோலாக இருந்துள்ளன.

சங்க காலத்தில் இருந்த சமயம் மிக எளிமையான சமயம். பெரிய Established Religion என்று ஒன்றும் இல்லாமல் இயற்கையோடு தோன்றிய பழைய காலத்து வழிபாட்டு முறைகளுடன் வணங்குவது இருந்திருக்கின்றன. அந்த நேரத்தில் வடக்கே இருந்து வந்த 3 சமய சார்புகள் இங்கே தமிழ்ப்பண்பாட்டில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

1. வைதீகம் சார்ந்த பார்ப்பன மதம்

2. பௌத்தம் 3. சமணம்

அதாவது மேல்நிலையில் இருந்தவர்களிடம் ஆள்கிற நிலையில் இருந்தவர்களுக்கிடையே இந்த மூன்றின் தாக்கம் அதிகமாக இருந்திருக்கிறது. இந்த வைதீகம் சார்ந்த பிராமண குடியேற்றங்கள் சங்க இலக்கியத்தில் அதிகமாக பேசப்படுகிறது. இதனாலே இவர்களுக்குள்ளாக - ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களிடம் ஒரு ஒற்றுமை ஏற்படுவதாக சொல்லலாம். ஏன்னா எல்லோருமே - வைதீகம் சார்ந்து பிராமணிய கருத்துக்கள் சார்ந்து இருந்ததாலே ஒரு ஒற்றுமை ஏற்படுகிறது என்று சொல்லலாம். அவரவர் அவரவருடைய ஆட்சிப்பகுதிக்குள்ளே இருந்தாலும்கூட வர்ணக் கோட்பாட்டு அடிப்படையில் தாங்கள் க்ஷத்திரியர் கள் என்ற எண்ணத்தை வைதீகம் சார்ந்து ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அதேபோல சமண/பௌத்த தாக்கங்களும் இருந்திருக்கின்றன. எல்லோருமே மற்றவர்களிடமிருந்து தங்களை பிரித்துப் பார்க்கிற போக்கும் இருந்திருக்கிறது. மற்றவர்களோடு தங்களை இணைத்துப் பார்க்கிற இடமும் இருந்திருக்கிறது.

அதாவது அவர்களுடைய (வடக்கிலிருந்து வந்தவர்களுடைய) புராணங்கள் சார்ந்து இதிகாசங்கள் சார்ந்து (மகாபாரதம் போன்று) அதில் வரும் வீரர்களோடு குடும்பங்களோடு இங்கிருந்த ஆள்பவர்களின் குடும்பங்களை (அந்த வம்சாவழி அவர்களுடைய வம்சங்களிலிருந்து இணைந்து வந்தவர் என்று சொல்லி) இணைப்பது என்கிற போக்கும் இருந்தது. மகாபாரதத்தில் பங்கேற்ற வீரபுருசர் தாம் என்று தம்மை இணைத்துக் கொள்வதன் மூலம் தம்மை உயர்த்திக் கொள்ளும் போக்கும் நடந்தது. இந்த நிலையிலேயே ஒரு பண்பாட்டு இணைப்பு சமயம் சார்ந்து ஏற்பட்டிருக்கிறது எனலாம். இதற்குப் பின்னாடி இதனுடைய எதிர்விளைவாக (Reaction) ஆக பக்திஇயக்கம் ஏற்படுகிறது. கி.பி.6 ஆம் நூற்றாண்டு முதல் ஏற்பட்டது பக்திஇயக்கம். இது ஒரு எதிர்ப்பு இயக்கமாக வளர்ந்தது. ஏனெனில் சமண/பௌத்த தாக்கங்கள் அதிகமாக ஆனநிலையில் வைதீக சார்பானவர் கள் அதை எதிர்கொள்ள முடியாமல் எப்படி எதிர்ப்பது என்ற நிலையில் தங்களுடைய நடைமுறையை மாற்றிக் கொள்கிறார்கள். இதுவரைக்கும் தனியாக யாகங்கள் போன்ற சடங்குகளைச் செய்து அதன்


ஒருவனை
மூட்டை தூக்குபவனாக ஆக்க வேண்டுமா
வெகுஎளிது
முதலில் அவனை குனியவைக்க வேண்டும்
லேசாக மறுப்பான்அவன்
'கொஞ்சதூரம் தானப்பா'என்று
சொல்லிச் சமாளித்து
மூட்டையை அவன் முதுகில் ஏற்றிவிட
வேண்டும்
'சரி ப்ரதர் புறப்படலாமா'என்று
நாம்கேட்கும்போது
'நீங்கள் ஏற்றிவிட்ட மூட்டையின் கனத்தால்
பாதையைச் சரியாகப் பார்க்க
முடியவில்லையே' என்பான் அவன்
'அதற்குத்தான் நான் இருக்கிறேனே
நான் காட்டுகிறேன் வழி'என்று சொல்லி
வழி காட்ட வேண்டும்
அனைவருமே சுமந்து கொண்டிருக்கும்
பிரபஞ்சசுமை பற்றி நாம் தீவிரமாக
யோசித்தபடியே
அவனுடன் நடந்து கொண்டிருக்கும்போது
'ஐயா எங்கே இறக்கி வைக்க
ஐயா எங்கே இறக்கி வைக்க'
என்பான் அவன் திரும்பத் திரும்ப
'இன்னும் கொஞ்சதூரம் தான்
இன்னும் கொஞ்சதூரம் தான்'
என்று நாமும் சொல்லவேண்டும் திரும்பத்
திரும்ப
சுமைகளின் தன்மை பற்றி
சுமக்கும்போது வியர்க்கும் உடல் பற்றி
குளிர்ந்த காற்று உடலில் படும்போது ஏற்படும்
சிலிர்ப்பு பற்றி
சொல்ல மறந்துவிட்டேனே
சுமக்க வேண்டியிருப்பதன் அவசியம் பற்றி
நாம் உற்சாகத்துடன் விவரித்துக் கொண்டே
வரும்போது
சோர்வுடன்
'இன்னும் எவ்வளவு தூரம்'என்று அவன்
கேட்கக்கூடும்
இப்போது நாம் அவனை
அதட்டக் கூடச் செய்யலாம்
'சொன்னதைச்செய்
இந்தப்பக்கம் திரும்பு
அந்தப்பக்கம் திரும்பாதே'
அப்புறம் அது அவனுக்குப் பழகிப் போய்விடும்

*பி.ஆர். மகாதேவன்*

www.padippakam.com



மூலம் ஆளும் வர்க்கங்களை கவர்ந்தவர்கள் இனிமேல் மக்களை கவர்வதற்கு இந்த யாகங்கள் சடங்குகள் செய்வதன் மூலம் முடியாது என்று நினைத்து-மக்களை சென்றடைய வேண்டுமென்றால் சமணர்களைப்போல தாங்களும் மக்களோடு மக்களாக இருந்து அவர்களைக் கவரவேண்டும் என்று எண்ணம் ஏற்பட்டது. அதனுடைய விளைவாகத்தான் பக்திஇயக்கம் ஏற்பட்டது என்று கூறவேண்டும். வைதீகத்தைப் பற்றி அவர்கள் பேசுகிறார்கள். வேத சார்புடையது என்றுதான் பேசுகிறார்கள். ஆனால் வேதமொழியில் பேசவில்லை. தமிழ்மொழியில்தான் பாடுகிறார்கள். தமிழ்மொழியில்தான் பேசுகிறார்கள். இதன்மூலம் வைதீகக் கருத்துக்கள் மக்களிடம் சென்று சேர்கின்றன. இதன் காரணமாக சமண பௌத்த கருத்துக்களின் ஆதிக்கம் சற்று குறைகிறது. இவர்களுடைய



மொழியிலேயே பேசுவதாலே உள்ளூர் கடவுள்களை (சிறு தெய்வங்கள்) யெல்லாம் தங்களுடைய சைவ-வைணவ மதத்தில் சேர்த்துக் கொண்டு அங்கீகரித்ததாலே ஒரு - இந்த பக்தி இயக்கத்தினாலே - ஒரு சமயரீதியான இணைப்பு ஏற்படுகிறது.

அதாவது ஒரு நாடு தழுவிய - சமயம் சார்ந்த இணைப்பு ஏற்படுகிறது. அதில் முன்வைக்கப்படுவது தமிழ். அதாவது ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழை ஒரு குறியீடாக முன்வைக்கிறார்கள். சம்பந்தரும் சரி மற்றவர்களும் சரி பாட்டுக்களை சைவம் என்று முதலில் சொல்வ தில்லை. தமிழ் என்றுதான் பேசுகிறார்கள். அது ரொம்ப முக்கியமான ஒன்று. ஆனால் அதே அவர்கள் வைதீக எண்ணங்கள் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் அதுவந்து-போர்வை தமிழ்ப்போர்வையாக மாறுகின்றது. எனவே பக்திஇயக்க காலத்தில் தமிழ் இணைப்பு அதிகமாக இருந்தது எனலாம். அதே சமயம் இதனுடைய Parallal ஆக இணைவாக பெரிய அரசுகள் உருவாவதும் நடந்தது. ஏனெனில் இவை இரண்டும் ஒன்றுக் கொன்று சார்பானவை. அரசுகள் மதங்களை ஆதரித்தன. சில நேரங்களில் இவர்களும் அரசர்களை மதம் மாற்ற முயற்சித்துள்ளனர். சமண - சைவ சண்டைகள் உருவாகி யுள்ளன. இந்தவகையில் சமயப் போராட்டங்களுக்கு அரசியலும் ஆதரவாக இருந்தது. இந்த வகையில் இரண்டும் மாறிமாறி ஒன்றுக்கொன்று உதவிக்கொண்டு - ஒரு Cultural Integration on the basis of language ஏற்பட்டது என்று கூறலாம்.

இதற்குப் பின்னர் - கி.பி. 9க்குப் பின்னால்தான் உண்மையிலேயே தமிழ்நாட்டில் அரசுகள் தோன்றின. இதற்கு முன்பு இருந்த பல்லவர் அரசும் பாண்டியர் அரசும் சிறு சிறு அரசுகள்தான். மூன்று மாவட்டங்கள் அல்லது நாலு மாவட்டங்களுக்கு மேல் அரசாட்சி செய்ததில்லை. வெளியே படையெடுத்துப் போனது உண்மைதான். அவை படையோடு போய் மிரட்டி ஏதாவது திரை வாங்கிக் கொண்டு வந்து விடுவார்கள். அதோடு சரி. வெளியே எல்லாம் நிலையான ஆட்சி என்று எதுவும் கிடையாது. நேரடியான நிர்வாகம் எதுவும் கிடையாது.

கி.பி.9 க்குப் பிறகு தஞ்சையை மையமாகக் கொண்டு ஆட்சிசெய்யத் துவங்கிய சோழர்கள் (சங்க காலத்தில் ஆண்ட மன்னர்களின் வாரிசுகள் என்று தங்களைக் கூறிக்கொண்ட இவர்களின்) ஆட்சிக்காலத்தில்தான் தமிழ்நாடு முழுவதையும் உள்ளடக்கிய (ஆட்சி துவங்கி ஒரு நூற்றாண்டுக்குள்ளாகவே) ஒரு பெரிய அரசு ஏற்படுகிறது.

ராஜராஜசோழன் ஒருபெரிய ராஜதந்திரி. தமிழ்நாடு முழுவதையும் தன் ஆட்சிக்குள் கொண்டுவர முயன்றான். Political Geography ஐ மாற்றினான். அதற்கு முன்போல அன்றி பிறருடைய ஆட்சிப்பகுதிகளையும் தன் கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தான். எல்லாமே ராஜராஜசோழனுடைய நாடு என்று ஆகவேண்டும் என விரும்பினான். மதுரையையே சோழர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதி என்று அழைக்கப்பட வேண்டும் என்று நினைத்தார்கள். இதெல்லாம் கி.பி. 1000- ல் பேரரசனாக உருவான ராஜராஜ சோழன் காலத்தில் (தஞ்சை பெரிய கோவிலைக் கட்டியவன்) ஏற்பட்டது. அவன் காலத்தில் உருவான சோழ மண்டலம்தான் கோரமண்டலம் என்று இன்றும் அழைக்கப்படும் பகுதி. அவன் உண்மையிலேயே ஒரு அரசியல் ராஜ தந்திரி என்று சொல்லவேண்டும்.

தமிழ்நாடு முழுவதையும் ஒரே நிர்வாகத்துக்குள் கொண்டுவர வேண்டும் என்று அவன் உண்மையிலேயே நினைத்தான். எல்லாமே ராஜராஜ வளநாடு - வென்ற நாடு களையும் தன் நிர்வாகத்தில் கொண்டுவர அதற்கான அலுவலர்களை நியமித்தான். நில அமைப்பையே மாற்றி னான். அதற்கு முன் இல்லாத ஒரு புதுமாற்றம் இது. இதற்கு முன் யாரும் இதற்கு முயற்சிக்கவில்லை. சோழநாட்டை சோழமண்டலம் என்றான். பாண்டிநாட்டை ராஜராஜ பாண்டிநாடு என்றான். இலங்கையிலும் சென்று சில பகுதிகளை பிடித்தான். எல்லாம் இவன் பெயரால். மாற்றார் ஆட்சிப் பகுதிகளை - வென்ற நிலப்பகுதி எல்லாம் தன் நிர்வாக ஆட்சிப்பரப்புக்குள் கொண்டுவந்தான்.

தெற்கே மட்டுமல்ல வடக்கேயும் ஒரு ஜயங்கொண்ட சோழபுரம் வந்தது. இவனுடைய ஆட்சியின் கீழ் வந்தது. நீண்ட சோழமண்டல கடற்கரை என வெளிநாட்டினரால் அழைக்கப்பட்டு இன்று கோரமண்டலம் என அறியப்படு வது இவன் காலத்தில் உருவானதுதான்.

கேரளாவிலும் ஒரு பகுதியை தன் ஆட்சியின் கீழ் கொண்டுவந்தான். ஒரு சிறுபகுதிதான். அங்கு பெரிய வெற்றி பெறவில்லை. ஆனால் கன்னடத்தில் - குறிப்பாக தென் மாவட்டங்களான மைசூர்,பெங்களூர்,கோலார் போன்ற பகுதிகளை நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். கோலார்,பெங்களூர் போன்ற தென் மாவட்டங் களில் இன்றும் குடியிருக்கும் தமிழ்க்குடிகளில் பெரும்பகுதி (வரலாற்று ரீதியாகப் பார்த்தால்) ராஜராஜனின் காலத்தில் குடியேற்றப்பட்டவர்கள்தான். நமக்குள்ளே பேசுவதால் இதை தைரியமாகப் பேசுகிறேன். அரசியல் ரீதியாக இன்று இதற்கு வேறு பிரச்னைகள் வரலாம்.

ஆனால் 11-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இந்த ஆட்சி குறைந்துவிட்டது. ஆனால் தமிழ்நாடு முழுவதும் ஒன்று என்ற நிலைமை கி.பி. 11ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டு விடுகிறது. வெளியே இருந்த பகுதிகள் தொடர்ந்து தமிழ்நாட்டோடு இருக்கமுடியவில்லை. அதற்குப்பல அரசியல் காரணங்கள். ஆங்காங்கே (சோழஅரசு போல) வேறு பெரிய அரசுகள் உருவானது ஒரு முக்கிய காரணம். அவரவர் பகுதிகளை தம் ஆட்சிக்குள் கட்டுக்கோப்பாக வைத்திருக்க முயற்சித்தனர். இதன் காரணமாக தமிழ் பேசக்கூடிய பகுதியில் மட்டும் வடக்கே சித்தூர் முதல் தெற்கே குமரி வரை ஓரளவுக்கு சோழஅரசு இருந்தது. (200 ஆண்டுகள் சோழஅரசு நீடிக்கிறது.)

அதற்குப் பின்னர் தெற்கே பாண்டியர்கள் தலை தூக்கத் துவங்கியதால் சோழஅரசின் எல்லைகள் மீண்டும் குறுக்கப்படுகிறது. ஆனால் இக்காலப் பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றமானது அதற்கு இணையான வேறு சில மாற்றங்களையும் கொண்டுவந்தன. உதாரணமாக சோழர்கள் சைவ மதத்தைப் போற்றினார்கள். அதற்குப் பல காரணம் உண்டு. இதற்கு ஒரு முக்கிய காரணம் மக்கள் மனங்களை ஒருமுகப்படுத்தி அவர்களிடம் தங்கள் சோழ ஆட்சியை legitimise நியாயப்படுத்தி ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு ஒரு கருவியாக - விளம்பர சாதனமாக - மதத்தை - பக்தியை பயன்படுத்தினார்கள். ஆங்காங்கே இருந்த கோவில்களையும் விளம்பர சாதனங்களாகப் பயன்படுத்தினர். அதற்கு சைவ மதத்தை ஒரு முக்கியமான குறியீடாக எடுத்துக்கொண்டனர். இவர்களது நோக்கம் எப்படி இருந்தாலும் மக்களிடையே ஒரு Religious Integration என்பது ஏற்பட்டுவிட்டது. அதாவது ஆங்காங்கே இருந்த கோவில்களுக்குப் போவது - யாத்ரீகர் கள் போவது - என்ற வகையில் ஒரு வளர்ச்சி ஏற்படுகிறது. அதாவது இந்த நேரத்திலே இன்னொன்றை குறிப்பிட வேண்டும். அதாவது மக்களுடைய Social Mobility அதாவது Spatial mobility மக்கள் இடம்பெயர்வது என்பது கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வளர்ச்சி அடைகிறது.

முதலிலேயே மக்கள் இடம் பெயர்ந்தது உண்டு. ஆனால் அது மிக மிக கொஞ்சமாகத்தான் இருந்தது. பல்லவர்கள் பாண்டியர் காலத்தில் இது அதிகமானது. இவர் களுடைய படையெடுப்புகளினாலே வடக்கே இருந்தவர் கள் தெற்கே போகிறார்கள். தெற்கே இருந்தவர்கள் வடக்கே போகிறார்கள். தமிழகத்துக்கு வெளியேயும் - அதாவது துங்கபத்திரா வரைக்கும் போகிறார்கள். தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு போகிறார்கள். இலங்கைக்குப் போகிறார்கள். ஆனால் இதெல்லாம் இவர்களது படையெடுப்புகளினால் நடந்தது. ஆனால் சோழர்கள் ஆட்சிக்காலத்தில்தான் மக்கள் குடியேற்றங்கள் நடந்துள்ளது. இங்கே இருந்த தமிழர்கள் வெளியே போகிறார்கள். வெளியே இருந்த பிற மக்கள் இங்கே வருகிறார்கள். அதாவது 11-வது நூற்றாண்டின் இறுதியிலே ஆந்திராவிலிருந்து பலர் இங்கே வருகிறார்கள். Dynastic marriage என்ற வகையில் சாளுக்கியச் சோழர்கள் காலத்தில் பல குடும்பங்கள் (தெலுங்கு) தெற்கே வந்திருக்கவேண்டும். அரைவாசி தெலுங்கர்களாக அரைவாசி தமிழர்களாக இடப்பெயர்ச்சி அதிகமாக நடந்துள்ளது. இதோடு Religious Pilgrimage யாத்திரை போவது என்பதும் அதிகமாகியது.

---

**தமிழ்நாடு முழுவதும் ஒன்று என்ற நிலைமை**
**கி.பி. 11ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டு விடுகிறது.**
**வெளியே இருந்த பகுதிகள் தொடர்ந்து**
**தமிழ்நாட்டோடு இருக்கமுடியவில்லை.**
**அதற்குப்பல அரசியல் காரணங்கள்.**
**ஆங்காங்கே (சோழஅரசு போல) வேறு பெரிய**
**அரசுகள் உருவானது ஒரு முக்கிய காரணம்.**

---

அதுபோக அரசர்களே தங்களுடைய Religious கோவில்களைக் கட்டுவது கோவில் தேவைகளைப் பூர்த்தி செய்ய குருமார்கள் போன்ற பிராமண குடியேற்றங்களை ஊர்ஊருக்கு ஏற்படுத்துகிறார்கள். அந்த வகையிலும் இடப்பெயர்ச்சி இருந்துள்ளது. முதல் கட்டத்தில் வடக்கே இருந்து வந்த பிராமணர்கள் தொண்டை மண்டலத்தில் குடியேறுகிறார்கள். பல்லவர்கள் காலத்தில் மிக அதிகமாக இத்தகைய பிராமண குடியேற்றங்கள் ஆதரிக்கப்பட்டு கின்றன.

முதல் நிலையில் இவர்கள் வடக்கே இருந்து வந்து ஆந்திராவில் தங்கி பிறகு தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். இரண்டாவது நிலையில் தமிழ்நாட்டுக்கு உள்ளேயே இவர் களது இடப்பெயர்ச்சி ஏற்படுகிறது. இதற்கு சோழர்கள்தான் பெரிதும் காரணம். இவர்களுக்கென பெரிய கிராம குடியிருப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. பல பிரதேசங்களு க்கு - வறண்ட பிரதேசங்களில் கூட ஆட்சி பரவி குடியிருப்பு களை ஏற்படுத்தும்போது இங்கிருந்த பிராமணகுடிகள் அங்கே குடியேற்றப்படுகிறார்கள். இது நமக்கு வெளிப் படையாகத் தெரிகிறது.

இது தவிர நிலம் சார்ந்த குடிமக்கள் அதாவது வேளாளக் குடிமக்களும் நிலம் பெயர்ந்துள்ளனர். ஆங்காங் கே இருக்கிற இன்றைய Socio demographyயை வைத்து இது சோழர் காலத்தில் ஏற்பட்டதாகக் கூற முடியும்.

www.padippakam.com

இதைப் பேசும்போது ஒரு பிரச்னை இருக்கிறது. இன்றைக்கு இதை ஒரு விருப்பு வெறுப்பு இல்லாமல் பேச முடியவில்லை. உதாரணமாக மறவர்கள் என்ற இனக்குழு வை எடுத்துக்கொள்வோம். இன்றைய சாதிகளில் ஒன்றான மறவர்களைப் பார்க்காமல் அன்றைய ஒரு இனம் என்கிற அடிப்படையில் பார்த்தால் அவர்கள் ராமநாதபுரம் பகுதியி லேயே நீண்டகாலம் வாழ்ந்துள்ளனர். (அதற்கு அக்கால சான்றுகளே உள்ளன) பின்னர் 12 ம் நூற்றாண்டுக்குப் பிறகு தெற்கே திருநெல்வேலி போன்ற பகுதிகளுக்கு குடிபோயி ருக்கிறார்கள். அங்கே அதற்கு முன்னால் வேறு மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும். அல்லது மக்களே இல்லாமலும் இருந்திருக்கலாம். இப்போது போய் திருநெல்வேலியில் மறவர்கள் எல்லாம் வந்து குடியேறியவர்கள் 'வெளியே போங்க'என்று சொல்ல முடியுமா? அது தவறு. மக்கள் தொடர்ச்சியாக வந்து இடப்பெயர்ச்சியில் இருந்து கொண்டே இருந்துள்ளனர். இது போன்றே பல பகுதிகளி லும் மக்கள் ஆங்காங்கே பல்வேறு இனமக்கள் அதாவது இன்று பல்வேறு சாதிகளாக உள்ள அன்றைய பல இனமக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். முக்கியமாக இந்தப்போர் மரபு இனக்குழுக்கள்-அதாவது போரையே தொழிலாகக் கொண்ட சில இனங்கள் வாழ்ந்துள்ளன. பிறகுதான் இவர்கள் வேறு தொழில்களையும் பார்க்கத் துவங்கியுள்ளனர்.

தஞ்சைப்பகுதியில் இன்று நெசவுத்தொழிலை மேற் கொண்டுள்ள கைக்கோளர்கள் ஒரு காலத்தில் போரையே தொழிலாகக் கொண்டிருந்தவர்கள்தான். 11ஆம் நூற்றாண்டு வரை அவர்கள் நெசவுத் தொழிலையே மேற்கொள்ள வில்லை. இனிமேல் போர் என்பது ஒரு தொழிலாக இல்லை என்று ஆனபிறகுதான் அவர்கள் நெசவுக்கு வந்தார்கள். சில இனங்கள் மாறாமல் வேறு தொழிலுக்குப் போகாமல் இன்னும் போரையே தொழிலாகக் கொண்டு ஒரு முன்னேற்ற மும் இல்லாத சாதிகளாக இருந்து வருகின்றன. இது பற்றி நாம் பேசும்போது ஒரு சார்புத்தன்மை இல்லாமல் பேச வேண்டும்.

இந்தக்காலத்தில் மக்களின் இடப்பெயர்ச்சி என்பது ஏற்பட்டிருக்கிறது. அரசியலினால் ஏற்பட்டுள்ளது. சமயத் தினால் ஏற்பட்டுள்ளது. அதுவரை சிறு சிறு வட்டார அளவி லான மக்களைச் சார்ந்திருந்த வணிகம் கி.பி.11ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தென்னிந்தியா முழுவதும் ஐநூற்றுவர் என்கிற ஒரு வணிகக்குழுவின் ஆதிக்கத்துக்குள் வருகிறது. இந்த ஐநூற்றுவர் நான்கைந்து மொழிகள் பேசி யிருக்க வேண்டும். இது தனித்த ஒரு இனம் அல்ல. ஆனால் ஆங்காங்கே சிறு சிறு வணிகக் குழுக்களையும் ஐநூற்றுவர் என்ற போர்வையில் ஒன்றாக தங்கள் உறுப்பினர்களாக இணைத்தனர். இவர்கள் தமிழ்நாட்டுக்கு வெளியேயும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் சென்றனர். இலங்கையிலும் (தமிழ் அரசுகள் இருந்த இடங்களில் மட்டுமல்ல. சிங்கள மொழி பேசும் அரசுகள் இருந்த இடங்களிலும்) வணிகம் செய்தனர்.

இந்த வணிகக்குழுக்கள் சென்று வந்ததனாலும் ஒரு வகையான integration ஏற்படுகிறது. இவர்களினால் இந்த மொழி பல பகுதிகளுக்கும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் சென்று அடைந்ததெனக் கூறவேண்டும். இவர்களோடு சேர்ந்து மற்றவர்களும் போயிருக்க வேண்டும். ஆனால் அதற்கு Records இல்லை. இவர்கள் போனதற்கும் பெரிய அளவுக்கு Records இல்லை. ஒரு வகையான இணைப்பு ஏற்பட்டது இக்காலத்தில். அதற்குப் பிறகு ஒரு பெரிய இடைவெளி ஏற்படுகிறது. ஒரு பேரரசு என்பது இல்லை.

அதற்குப்பிறகு கி.பி. 1400 போல ஒரு பெரிய அரசு ஏற்படுகிறது. அந்த அரசின் தலைநகரம் கர்நாடகத்தில் இருந்தது. விஜயநகரப் பேரரசு எனப்படுகிற அந்த அரசு கர்நாடகத்தில் இருந்து பிறகு தமிழகத்திலும் தன் ஆட்சியைச் செலுத்தத் துவங்குகிறது. விஜயநகரப் பேரரசின் முக்கிய மான ஆட்சிப்பகுதிகள் இரண்டு. ஒன்று கர்நாடகம். மற்றது தமிழகம். அதிலும் தமிழகம்தான் வளமான பகுதி. மூன்றா வதுதான் ஆந்திரா.

இடையில் இன்னொரு விஷயம். கி.பி.1200 லிருந்து வட தமிழகத்தில் நெசவுத்தொழில் வளர்கிற ஒருகாலமாக இருந்தது. விஜயநகரப் பேரரசும் அதைப்போற்றி வளர்க்கிற வர்களாக இருந்தனர். அதுவரை நிலம் சார்ந்து மட்டுமே இருந்த பொருளாதாரம் மாறி ஒரு Mixed Economy உருவாகிறது. இந்த Commercialisation காரணமாகவே தென் கிழக்கு ஆசியநாடுகளுக்கு துணி ஏற்றுமதி வணிகம் வந்திரு க்கவேண்டும். இது ப்பற்றி நமது தமிழகத்தில் எந்தப்பதிவும் கிட்டவில்லை. 15ம் நூற்றாண்டில் தமிழகத்துக்கு வருகிற போர்ச்சுகீசியர்கள்தான் தென்கிழக்கு ஆசியநாடுகளுக்கும் தமிழகத்துக்கும் இருந்த துணிவணிகம் பற்றி முதன்முதலாக எழுதியுள்ளனர். கி.பி.1500 ஐப்போல இங்கு வந்த போர்ச்சு கீசியர்கள் எழுதுகிறார்கள். எனவே அதற்கு முன்பே இந்த வணிகம் இருந்திருக்கவேண்டும்.

இந்த நிலையில் அரசியல் ரீதியாக தமிழகம் கர்நாடக த்துடன் இணைக்கப்படுகிறது. இதை ஒட்டி இன்னொரு பெரிய மக்கள் பெயர்ச்சி ஏற்படுகிறது. அதாவது போர்வீரர்கள் - கன்னடம் பேசக்கூடிய போர்வீரர்கள் நாயக்கபாடிகள் என்று கூறப்படக்கூடியவர்கள் தமிழகத்தின் வட மாவட்டங்களில் குடிஏறுகிறார்கள்.

முதலில் காவேரி வரைக்கும்தான் இந்த குடியேற்றங் கள் அதிகமாக இருந்தன. அதற்கு அடுத்த கட்டமாகத்தான் மதுரைக்குத் தெற்கே இவர்கள் குடியேறுகிறார்கள்.

ஆந்திரா விஜயநகரப் பேரரசோடு இணைக்கப்படு வதை ஒட்டி தெலுங்கு பேசும் மக்களும் இரண்டாம் கட்ட மாக தமிழ்நாட்டில் குடியேறுகிறார்கள். 15 - 16 ஆம் நூற்றாண்டு களிலே இந்தக் குடியேற்றங்கள் அதிகமாக நடை பெறுகின்றன.

முதலில் போர்வீரர்களாக வந்த இவர்கள் ஆங்காங் கே குறுநில மன்னர்களாக மாறுகிறார்கள். சிறு சிறு நாயக்கர் கள் ஆட்சி ஏற்படுகிறது. பிறகு இவர்களிலிருந்து மூன்று நான்கு (தஞ்சாவூர்,செஞ்சி என்று) பெரிய அளவிலான நாயக்கர் ஆட்சி ஏற்படுகிறது. சிறு நாயக்கர் ஆட்சிகளும் ஆங்காங்கு தொடர்கின்றன. பின்னர் அவர்கள் பாளையக்கா ர்ர்களாக மாறுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த சமயத்தில் பரவலாக தமிழ்நாட்டுக்குள்ளே மொழிக்கலப்பு என்பது அதிகமாக நடக்கிறது. இலக்கியங் களைப் படிக்கும்போது அப்போது நடந்த போராட்டங் களைப் பார்க்கமுடிகிறது. அது அரசியல் ரீதியான போராட்ட மாகும். இன்னொன்று பொருளாதார ரீதியாக நடந்த போராட்டமாகும். எப்போதுமே புதிய அரசுகள் புதிய பிரதேசங்களில் ஏற்படும்போது நிறைய வருவாயை எதிர்பார்ப்பார்கள். அந்தப்படியே விஜயநகரப் பேரரசு தமிழ் நாட்டுக்கு வரும்போது வரிப்பளு அதிகமாக இருக்கிறது.

இந்த வரிப்பளு நிலக்கிழார்களைவிட சாதாரண குத்தகை விவசாயிகள்,நிலமில்லாத விவசாய கூலிகள் இவர் களையே அதிகமாகப் பாதிக்கிறது. எனவே இவர்கள் ஒன்று சேர்ந்து மேலே இருப்பவர்களை எதிர்த்துப் போராட துவங்குகிறார்கள். இப்போராட்டங்கள் மொழியியல் ரீதியாக இல்லாமல் ஆளுகிறவர் ஆளப்படுகிறவர் என்கிற ரீதியாகத்தான் இருக்கிறது. கி.பி.1400 க்குப்பிறகு இவை ஏற்பட்டன. இந்த சமயத்தில் இங்கே விஜயநகர அரசின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

இந்தப் பிரதிநிதிகளோடு உள்ளூர் படைவீரர்கள் சிலரும் (காணியாளர்கள் எனப்படும்) நிலக்கிழார்களும் (பிராமணர்கள்,வெள்ளாளர்கள்) சேர்ந்து ஆளும் வர்க்க மாகவும் மற்றவர் ஆளப்படுபவர்கள் (வரி செலுத்துபவர் கள்) என்ற ரீதியில் இப்போராட்டம் இருந்தது. இது மொழிப் போராட்டமாக இருக்கவில்லை.

அந்த சமயத்தில் எழுதப்பட்ட இலக்கியங்களை (பிரபந்தங்கள் போன்ற சில) நாம் படிக்கும்போது மொழிப் போராட்டமாகவும் சில நடந்துள்ளது தெரிகிறது. ஆனால் 1500 க்கு முன் கிடைக்கும் இலக்கியங்கள் பெரும்பாலும் சமயம் சார்ந்த இலக்கியமாக இருப்பதால் இந்தப் போராட்ட ங்களைப் பற்றி தெளிவாக அதில் வரவில்லை. ஆனால் ஆழ்ந்து பார்க்கும்போது இத்தகைய போராட்டங்கள் இருந்திருப்பதை உணரமுடிகிறது. பெரிதும் பொருளாதாரம் சார்ந்த போராட்டமாகவும் பிறகு சமயம் சார்ந்த பிரச்னை களும் இருந்திருக்கிறது. சமயப்பிரச்னைகளும்கூட பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டவைதான்.

இது போன்ற ஒரு சரித்திரப் பின்னணியில்தான் தமிழ் நாடு என்பது உருவாகி வந்திருக்கிறது.

17 ஆம்நூற்றாண்டில் நாயக்கர் ஆட்சி என்பது தமிழகம் தழுவிய ஒரு அரசாக இல்லை. 17 - 18 ஆம் நூற்றாண்டில் காலனிய ஆட்சிமுறை கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகத்தின் கீழ் உருவான பிறகுதான் தமிழ்நாடு முழுவது க்குமான ஒரு பிரிட்டிஷ் நிர்வாகம் என்பது ஏற்படுகிறது. - 1850 க்குப் பிறகு அப்போதும் அது மொழியால் ஒன்றுபட வில்லை. பிரதேசத்தின் நிர்வாகமாக இல்லாமல் Madras Presidency என்று பல மொழி பேசும் பிரதேசங்களும் இணைந்த ஒரு நிர்வாகமாகவே ஏற்படுகிறது. முழுக்க முழுக்க மொழி ரீதியான மாநிலம் என்பது 1956 ல் மொழி வாரி மாநிலங்களாக பிரிக்கப்பட்ட பிறகே ஏற்படுகிறது.



## அறிமுகங்கள் பிரசவிக்கும்...

நான்  
சொற் கண்ணிகளால் ஓயாது  
வேட்டை நிகழ்த்துபவன்  
என் குரலை சுமக்க  
காற்று உண்டு என்னிடம்  
மலம் அள்ளியதும் மாடறுத்ததுமான  
என் தாத்தனின் செயல்களை முன்னிறுத்தி  
நீங்களிட்ட பேருண்டே எனக்கு  
எல்லா வரையறைகளுடனும்தான்  
சுழல்கிறது எனக்கான உலகமும்  
புதுப்புது உலகங்களை பிரசவிக்கிற  
அறிமுகங்கள்  
விசாரிப்பின் ஆயுதங்களால்  
யோனிகிழித்து  
அவரவர்க்கானதை  
இழுத்து கிடத்துகின்றன  
மனதை கீறி நிகழும்  
எனது பிரசவங்களில்  
ஓர் ஆப்பிரிக்க பெண்ணுடையதைப்போல  
கிழிக்கப்பட்டும் தைக்கப்பட்டும்  
வலிக்கிறது என் யோனி

*அழகிய பெரியவன்*

www.padippakam.com



**தொ.ப. பக்கம்**

# பொதுவும் தோழமையும்

தொ.பரமசிவன்



**தமிழ்போன்ற பழைய மொழிகளில் சமூக வளர்ச்சி**யினைக் காட்டும் சுவடுகளை சொல் வடிவங்களாக காண முடிகிறது. சமூக வரலாறு காட்டும் சொற்களில் ஒன்றாகத் தமிழில் 'பொது'எனும் சொல்லைக் காணலாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக,இலக்கியத்திலும் மக்களின் அன்றாடப் பேச்சுமொழியிலும் இந்தச்சொல் தவறாமல் இடம்பெறுகிறது. மக்களைக் குறிப்பதாகவும், இடத்தைக்குறிப்பதாகவும்,நிறுவனங்களை குறிப்பதாகவும் இந்தச்சொல் நம்மால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொது மக்கள், பொதுவிடம், ஊர்ப்பொது, பொதுக்கோயில் என்றவாறு முன்னொட்டாக நின்று பலபொருள் உணர்த்தும் சொல்லாக இது அமைந்திருக்கிறது. 'பொத்தம்பொது'என்று இந்தச்சொல் இரட்டித்தும் பேச்சுத்தமிழில் நம்மால் வழங்கப் படுவதுண்டு.

சங்க இலக்கியங்களில் 'பொது' என்ற சொல்லோடு தென்கடல் வளாகம் பொதுமையின்றி என்று பொதுமை என்ற வழக்காறாக இருந்துள்ளது. 'பொதுமை'என்ற சொல் பொதுவுடைமை என்பதைக் குறிக்கும் மிகப்பழைய சொல்லாகும். இத்துடன் 'பொதுவர்'என்ற சொல்லும் சங்க இலக்கியத்தில் கால்நடை மேய்ப்பவர்களைக் குறிக்கின்ற சொற்களில் ஒன்றாக இடம்பெறுகிறது. 'பொதுவக்குடி'என்ற ஊர்ப் பெயரும் தமிழ்நாட்டில் காணப்படுகின்றது. இதனைப் பின்னர்க் காண்போம். அனைவருக்குமான உரிமையைக் குறிக்கும் 'பொது'என்றும் சொல்லுக்கு எதிர்ச்சொல்லாக் 'வரிசை'என்றும் சொல் இலக்கியங்களில் காணப் படுகின்றது. 'வரிசை'என்னும் சொல் தரவாரியாக மனிதர் களையும்,பொருள்களையும் பிரித்துக்காட்டுவதாகும். 'வரிசை அரிதலோஅரிது'என்று ஒரு புறநானூற்றுப்புலவன் பாடுகின்றான். 'வரிசை'என்னும் சொல் மேல்கீழாக மனிதர்களை அடுக்கி இனங்காட்டுகிறது. 'பொது'என்னும் சொல்லோ மனிதர்களைச் சமமானவர்களாகக் (ஒத்த தரமுடையவர்) காட்டுகின்றது.

'பொது'நோக்கான் வேந்தன் 'வரிசையா'நோக்கின் அது நோக்கி வாழ்வார் பலர். என்பது திருக்குறள். பழைய பொதுவுடைமைச் சமூகம் அழிந்து 'அரசு'என்னும் அதிகாரமையம் தோன்றுகிறபோது 'பொது'என்னும் சொல்லும்,கருத்தும் பொருள் இழந்து,வேண்டாதவையாக கருதப்படுகின்றன. சங்க இலக்கியங்களின் காலத்துக்குப் பின்னர் 'அரசு'(State)என்னும் நிறுவனம் வளர்ச்சி பெறுவதற்குரிய கருத்துக்களைத் திருக்குறளால் நிறையவே காணலாம். மனிதர்களைத் தரப்படுத்திப் பார்க்கவேண்டும் என்று வள்ளுவர் இக்குறளில் வலியுறுத்துவது அரசுருவாக்கம் பற்றிய கருத்துக்கள் வளர்ச்சியடைந்த தற்கான அடையாளமாகும். பழைய பொது வுடைமைச் சமுதாயத்திலே 'பொதுவர்கள்'என்னும் கால்நடை மேய்க்கும் மக்கள் மந்தைகளிலே அமர்ந்து தங்கள் தொழில் பற்றிய தேவைகளை எதிர்கொண்டார்கள். சமத்துவத் தன்மை கொண்ட 'பொது'விலேதான் கையில் கம்புடன் கால்நடை மேய்க்கும் குழுக்களின் தலைவன் (கீதாரி) தோன்றினான். இதுவே அரசுருவாக்கத்தின் முதல் கட்டமாகும். பொதுவர்களின் தலைவன் கையில் வைத்திருந்த கம்பு,அரசு என்றும் நிறுவனம் வளர்ச்சி பெற்றபோது,அரசன் கையில் புனிதத்தன்மை கொண்ட செங்கோலாக வளர்ச்சி பெற்றது என்று சமூகவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

அரசுகள் உருவாகி,மனிதர்கள் அரசுக்கு வேண்டிய படிபல்வேறு தகுதிகளால் பிரிக்கப்பட்டபோது அந்தப்பிரிவு தொழில் வேற்றுமைகளாகவும்,சாதி வேற்றுமைகளாகவும் உருவானது. அரசன் தனக்கு வேண்டிய புரோகிதச் சாதிக்கு (பிராமணர்க்கு) நிலங்களை வழங்கியபோது அவற்றை 'பொதுநீக்கி'தனியுடைமையாக்கி வழங்கினான். 'பொது நீக்கி'என்ற இந்தத்தொடர் தமிழ்நாட்டு அரசர்களின் தானச் செப்பேடுகளில் வழங்கப்படுவதைக் கூர்ந்துநோக்கி உணரலாம். இத்தானங்கள் எல்லாம் புரோகிதச் சாதியாகிய பிராமணர்க்கு மட்டுமே வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டுக்கு வெளியே கேரளத்தில் வழிபடும் இடங்களான கோயிலைக் குறிக்க 'பொது'என்னும் சொல் வழங்கப்பெறுகிறது. 'அம்பலவாசி'சாதியினரில் (கோயிற் பணி செய்யும் ஐந்துவகைச் சாதியார்) ஒரு பிரிவினர் 'பொது ஆள்'(பொதுவாள்) என்றே அழைக்கப்பட்டு வருகின்றனர். தமிழ்நாட்டில் 'தில்லை மூவாயிரவர்'என்றும் பிராமணர்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிதம்பரம் நடராசர் கோயிலுக்கும்,அக்கோயிலை இன்றளவும் நிருவகித்து வருகின்ற பிராமணச் சாதியாரின் சபைக்கும் 'பொது'என்ற பெயரே வழங்கி வருகின்றது. சிதம்பரம் நடராசரிடத்தில்

www.padippakam.com



பெரும் ஈடுபாடு கொண்ட வள்ளலார், 'திருப்பொதுவில் ஆடுகின்ற அரசே' என்றே தில்லை நடராசரைப் பாடுகின்றார்.

முதலாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று ஊரிலுள்ள பிடாரி கோயில்களைக் குறிப்பிடும்போது, 'பிடாரி பொதுவகை ஊருடையாள்' என்று ஒன்றைக் குறிப்பிடுகின்றது. இன்னும் தமிழ்நாட்டில் ஒரு சாதிக்கு உரிய தாய்த்தெய்வக் கோயில்கள் அல்லது சிறுதெய்வக் கோயில் களில் சபை 'ஊர்ப்பொது' என்ற பெயரிலும் கோயிலுக்கு வசூலிக்கப்படும் பணம் 'பொதுவரி' என்ற பெயராலும் வழங்கப்படுகின்றன. இவையும் பழைய சமூக நடைமுறைகளின் சொல்லெச்சமாகவே காணப்பெற வேண்டும்.


பொதுமக்கள், பொதுவிடம், பொதுத்தேர்தல், பொதுக் கூட்டம் பொதுக்கழிப்பறை என்றவாறு இன்று வழங்கும் சொற்கள் 'தனி என்ற சொல்லுக்கு எதிரானவை ஆகும். மறைந்து போய்விட்ட 'வரிசை' என்னும் சொல்லுக்குப் பதிலாக தனி உடைமை, தனியார்நிறுவனம், தனியார்பள்ளி ஆகிய சொற்களை இன்று வழங்கிவருகிறோம். பெண்ணுக்கான 'சீர்வரிசை' என்று சொல்லும்போது மட்டும் 'வரிசை' என்ற சொல் இன்றளவும் 'தரம்' என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகின்றது.

சுருக்கமாகச் சொல்வதானால், 'பொது' என்னும் சொல் பொதுஉரிமையினை அனைவருக்கும் வழங்கிவந்த இனக்குழுச் சமூகத்தின் தொல்லெச்சமாகத்தான் (**Vestige**) இன்றும் வழங்கிவருகிறது.

பொது என்ற சொல்லைப் போலவே பொருளாழ முடைய மற்றொரு சொல் தோழமையாகும். தோழி என்ற சொல்லே தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் காதல் உலகத்தின் பெருவழக்காகக் காணப்படுகிறது. (தோழன் என்ற சொல் அரிதாகவே காணப்படுகிறது) காதலிக்கும் பெண்ணொருத்தியிடம் 'சமத்துவம் குலையா நட்புரிமையுயை பெண்'ணே தோழியாவாள். ஒருவனைக் காதலிக்கும் பெண்ணும் அவள்தோழியும் 'இரண்டு தலைகளும் ஒருயிரும் கொண்ட பறவையினைப் போன்ற வர்கள் என்று சங்கஇலக்கியம் கூறுகின்றது.

''..........யாமே
பிரிவின்றி இயைந்த துவராநட்பின்
இருதலைப் புள்ளின் ஒருயிர் அம்மே''
(. எண். )
என்பது பாடல்.

புலால் உண்ணும் பார்ப்பனப் புலவராகிய கபிலர், பாரியினைத் தனது தோழன் என்று கூறியதோடு அவன் பெண்மக்கள் இருவரையும் ஊர்ஊராக அழைத்துச்சென்று திருமணம் செய்துவைக்க முயலுகிறார். வேட்டுவச் சாதியைச் சேர்ந்த குகனை இராமன் தோழனாக ஏற்றுக் கொண்ட செய்தியை முதலில் பெரியாழ்வாரும் பின்னர்த் திருமங்கையாழ்வாரும் வியந்து பாடுகின்றனர். இதனை



விரித்துப்பாடும் கம்பர்,

''தோழமை என்றவர் சொல்லியசொல் ஒரு சொல்லன்றோ'' என்று குகன் ஒரு தோழனுக்குரிய கடமையை ஆற்றுவதாக விரித்துக் கூறுகிறார். தோழமையை இன்னும் விரித்துப்பாடியவர் மகாகவி பாரதியார். சுபத்திரையைத் தூக்கிக்கொண்டு போவதற்கும் தோழனாகிய கண்ணன்தான் வழி சொல்லுவான். போர்க் களத்தில் கர்ணனைக் கொல்லுவதற்குத் தந்திரம் சொல்லித் தருபவனும் அவனே என்பது பாரதியின் 'கண்ணன் என் தோழன்' பாடலில் காணப்பெறும் செய்தியாகும். அப்படி யானால் சமத்துவம் குலையாத நட்போடு தவறுகளுக்கும் உடன்வருமா தோழமை?

ஆம். அப்படித்தான். இரத்த உறவுகளைவிடத் தோழமைஉறவு பெரியதாவது இந்த இடத்தில்தான்.

''என்னுடைய தோழனுமாய்
யானிகெப்பும் துரிசுகட்டுடடனாகி''
நின்றான் இறைவன் என்று பாடுகிறார் சுந்தரர்.

இருபதாம் நூற்றாண்டில் தோழமை என்ற சொல் பொதுவுடமை இயக்கச் சார்புடையதாக அறியப் பட்டுள்ளது. (**Comrade**) காம்ரேட் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக இந்தச்சொல்லைப் பயன் படுத்தியவர் திரு.வி.க.பின்னர் தோழர் சிங்காரவேலரும் பெரியாரும் இச்சொல்லைப் பேச்சிலும் எழுத்திலும் மிகுதியாக பயன்படுத்திக் காட்டினார்கள்.

'பொது'வும் 'தோழமை'யும் சமத்துவத்தின் அடை யாளங்களாகும். சமத்துவம்சார்ந்த அமைப்பினைப் 'பொது' சுட்டிக்காட்டுகிறது. சமத்துவம் சார்ந்த உறவினைத் 'தோழமை' வளர்த்தெடுக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# வரப்பெற்றோம்

**குரல்களின் வேட்டை**
(கவிதைகள்)
**சூத்ரதாரி**
விலை : ரூ **20**
***சொல் புதிது***
எல்-486,பெரியார் நகர்,
ஈரோடு - 638009.

**சேலம் கவிதைகள்**
தொகுப்பு: **நஞ்சுண்டன்**
விலை ரூ - 25
***சேலம் ஓவியர் - எழுத்தாளர் மன்றம்***
141,மாரியம்மன் கோவில் தெரு
6,சஞ்சீவிராயன் பேட்டை,
தாதகாபட்டி
சேலம் - 636006.

**புதுமையின் வேர்கள்**
(தமிழ் வசன கவிதைத்தொடர்)
**தமிழ்நாடன்**
விலை ரூ. **40.00**
***புதுமலர் படைப்பகம்***
வெண்முகில்,20/33,திருவள்ளுவர் நகர்
இராமநாதபுரம்,
கோவை - 641045.

**ஆர். சண்முகசுந்தரத்தின் படைப்பாளுமை**
(விமர்சனம்)
**பெருமாள் முருகன்**
விலை ரூ - **45**
***தமிழோசை பதிப்பகம்***
797E,ராம்மோகன் வணிகவளாகம்
சக்திசாலை,காந்திபுரம்,
கோயம்புத்தூர் - 641012.

**காலத்தை வென்றவர்கள்**
(கட்டுரைகள்)
***படிகள்***
விலை ரூ - **50**
படிகள் படிப்பியக்கம்,
45,கலைமகள் சாலை,
ஈரோடு - 638001.

**அன்புள்ள டாக்டர் மார்க்ஸ்**
(ஒரு சோசலிசப் பெண்ணியலாளரின் கடிதம்)
**வ. கீதா எஸ்.வி. ராஜதுரை**
விலை ரூ - **40**
***விடியல் பதிப்பகம்,*** 3,மாரியம்மன் கோவில் வீதி, உப்பிலிப்பாளையம்,
கோவை - 641015.

**ஆங்கில இலக்கிய வரலாறு**
**டாக்டர் அ. அருணாசலம்**
விலை ரூ - **78**
***அருணமுதம் வெளியீடு***
59/7A அரசமரத்தெரு,
திருவண்ணாமலை - 606603.

**பொதிகை**
பொதியவெற்பன் பொன்விழா மலர்
விலை ரூ - **100**
***சிலிக்குயில்,***
20,கோதண்டபாணித்தெரு
கும்பகோணம் - 612001.

**மீண்டும் ஆதியாகி** (Trans-novel)
**க.வை.பழனிசாமி**
விலை ரூ - **150**
***சுயம்,*** 24/9-அ,சகாதேவபுரம்,சேலம் - 636007.

**ஒரு பெண்ணின் பயணம்**
(பெண்ணிய நாவல்)
**சஞ்சீவி கோ. பொற்கலை**
விலை ரூ - **33**
***சக்தி நிலையம்,***
7,வில்லியம் லே-அவுட்
2வது தெரு,கே.கே.சாலை,
விழுப்புரம் - 605602.

**மூன்றாவது சிறகு**
(கவிதைத் தொகுப்பு)
**கி. சரவணக்குமார்**
விலைரூ - **20**
***முப்பாலிகை பதிப்பகம்***
10,காளியப்பா குடியிருப்பு,
பெரமனூர்,சேலம் -7.

**இன்று புதியாய் பிறந்தோம்**
(மாணவர் கதைகள்)
**கிருங்கை சேதுபதி**
விலை ரூ - **32**
***ஸ்ரீ செண்பகா பதிப்புகம்***
7,எம்.எம்.கார்டன்,தேனாம்பேட்டை
சென்னை-600018,
தொலைபேசி : 4335513.

**கோமுகி நதிக்கரைக் கூழாங்கல்** (கவிதைகள்)
**இளமுருகு**
விலை ரூ - **20**

**நேரிந்து...** (கவிதைத் தொகுப்பு)
**ம. மதிவண்ணன்**
விலை ரூ - 20

மேற்கண்ட இருநூல்களை
வெளியீட்டோர்:

***வேறு வேறு***, 11 ஆ,காந்திநகர்,
(பழைய எண் 89ஆ),
ஆத்தூர்-636102.

**கல்லும் மண்ணும்** (நாவல்)
**க. ரத்னம்**
***புதுமலர் படைப்பகம்***
33,திருவள்ளுவர் நகர்,
இராமநாதபுரம், கோவை-641045.

**நெடுவழித் தனிமை**
(கவிதைத் தொகுப்பு)
**மோகனரங்கன்**
விலை ரூ - **15**
***சொல் புதிது,***
L-486,பெரியார் நகர்,
ஈரோடு-638009.

**புதிய தலைமுறை** (1967-1969)
பார்வையும் படைப்பும்
**ப. தமிழரசி**
விலை ரூ - **25**
***நிகழ்,*** 123,காளீசுவரர் நகர்,
கோவை-641009.

**தமிழகத்தின் மனித உரிமைகள்** (1998-2000)
நன்கொடை ரூ-**75**
***மக்கள் கண்காணிப்பகம்***
தமிழ்நாடு
7,பி.டி.இராசன் சாலை,
இரண்டாவது தெரு,மதுரை-2.

**மைலாஞ்சி** (கவிதைகள்)
**ஹெச்.ஜி.ரசூல்**
விலை ரூ - 50
***சரம்,*** 21/77,ஞானியார் வீதி
தக்கலை-629175, கன்னியாகுமரி
மாவட்டம்.

www.padippakam.com






## எந்தப்பாதை?

**ஆ. சிவசுப்பிரமணியன்**

''நமது பண்டைக்காலத்தில்
எது உண்மையானதாகவும் உன்னதமானதாகவும்
முற்போக்கானதாகவும் இருந்தது எது
பிற்போக்கானதாகவும் கொடுமையானதாகவும்
அநீதியாகவும் இருந்தது என்பதனை
நம் இளம் தலைமுறையினருக்குத் தெளிவான
மொழியில் எடுத்துச்சொல்ல வேண்டிய
காலம் வந்துவிட்டது.''
இன்றைய காலத்தின் புத்தகம்.

***மக்கள் வெளியீடு***
24,உனிசு அலி சாகிப்தெரு
எல்லிசு சாலை,சென்னை - 600002.

விலை ரூ. **50** மட்டுமே.

---




## மந்திரமும் சடங்குகளும்

**ஆ. சிவசுப்பிரமணியன்**

விலை ரூ. 50.

மக்கள் வெளியீடு.24,உனிசு அலி சாகிப்தெரு எல்லிசு சாலை,சென்னை - 600002.

---

## உன் அடிச்சுவட்டில் நானும்...

**ட்ரான் தினிவான்**

விலை ரூ. **35.**

## சோசலிசக் கவிதைகள்

தொகுப்பு : **சூரியதீபன்**

விலை ரூ. **35.**

**அலைகள் வெளியீட்டகம்**

25,தெற்கு சிவன் கோயில்தெரு, கோடம்பாக்கம்,சென்னை - 600024

---




## கன்னிவாடி சிறுகதைகள்

**க.சீ. சிவக்குமார்**

இன்றைய நவீன காலத்தின் ஒரு கிராமப்புற
வேலை கிடைக்காத இளைஞனின்
நுட்பமான பார்வையில் தமிழ் வாழ்க்கை.

**தமிழினி,**
342, டிடிகே சாலை,ராயப்பேட்டை சென்னை - 14

விலை ரூ. **50.**

படிப்பகம்

# கதை கதையாம் காரணமாம்......

ந.முருகேசபாண்டியன்

**கைகளை ஆட்டிப் பேசத் தொடங்கியவுடன்** ஊடகமெங்கும் பரபரப்பு. வலைகளில் கசகசப்பு. பனியில் நனைந்த மலர்கள் மீன் கவிச்சியடிக்கும் கூடையில் கொண்டு செல்வது குறித்துச் செண்பகத்துக்கு ஏகவருத்தம். ஆள் எப்பவும் இப்படித்தான் அப்பாஸ் கேட்க ஆரம்பித்தார். ''அது எப்படி? ஸ்தான்ஸ்லாவ்ஸ்கியும் கோல்டாமேயரும் காணாமல்போய், திடீரென மீண்டும் ஒருங்கிணையும் புள்ளி எதுவென?'' அட போப்பா! அறிவாயா பேடிக்கூத்து, குடக்கூத்து, பரந்துவரும் எழினி, கரந்துவரும் எழினி. எனதருமைக் கனவானே! ஜில்ஜில்விலாஸ் சோடா... ஜிங்ஙினா ஜிங். அடைச்ச கடையைப் பார்த்து உடைச்ச சோடா குடிக்கும் அம்மையப்பனே! போதும் உமது திருக்கூத்து! இன்றைய ஸ்பெஷல் யாதுவெனில் பிள்ளைக் கறியெனப் பகரும் நரனே! வண்டுருட்டான் பழம் ஒரு டஜன் வேணுமா? வண்டுகள் பின்னகர்ந்து உருட்ட ஆரம்பித்தன.

தகவல் வெள்ளம் இணையகங்களில் சுழித்தோடுகிறது. வெளியெங்கும் வலைகள். p.c. அப்புறம் மோடம், எஸ்.டி.டி.வேணும். ஓகோ வாரும் பிள்ளாய்! படிக்குப்படி பத்தாயிரம் கதைசொல்லிகள் புதைந்து கிடக்கும் தத்தனேரிச் சுடுகாடாய் மாறும் நூலகம். பீரோ தட்டுக்களிலும் படிப்பறை மேசைகளிலும் பூதங்கள் உறைந்து கிடக்கின்றன. கிட்ட போனால் அப்பிக் கொள்ளும். வாரீர்!வாரீர்! ராஜாதி ராஜரே! உம் பணப்பொதியை அவிழ்த்துக் கொட்டு. பல்லை இளி. ஐந்தாம் தலைமுறைக் கணிணியின் அருளாசியினால் இந்தக்கதை எப்படி முடியும் என்பது குறித்துச் சதுக்கபூதம் நன்கறியும். நம்பிராஜன் என்ற பூர்வாசிர நாமமுடைய அண்ணாச்சி கணிணி வழி கவிதை எழுதுவாரா? அவரால் இலக்கியக்கூட்டம் களைகட்டிவிடும். கிழட்டுத்துறவி அதியற்புதமான கருஞ்சிவப்புத்திரவம். கலக்கலுக்கு கோக். அப்புறம் விடியவிடிய காற்றில்மிதக்கும் 5000குப்பிகள். அரே ஜீசஸ்! கன்னியில் கருப்பைக்குள் வடிவெடுத்தவனே! யோனிக்குள் துதிக்கையை நுழைத்து உறிஞ்சித்துப்பிய வல்லபகணபதியின் கதை அறிவாயா?



பேராக்கி புருஷ்

வலையின் பக்கங்களில் வேசியின்மீது எவனும் கல்லெறியக்கூடாது என்ற ஆணை வெளியாகும். புத்தகங்களின் பக்கங்களினூடே பதிந்திருக்கும் ராட்சதன் கும்மாளமிடுவான். எங்கெங்கும் உயிர்காக்கும்/கொல்லும் பூதங்கள். கற்றனைத் தூறும் அறிவுஎன கற்பித்த அய்யன், பரணில் ஒளிந்து கொள்வதைத்தவிர வேறுவழியில்லை. வாசுகி பெண்ணுடல் மீதான அத்துமீறல் குறித்து ஊர்வலம் போய், ஃபயர்படம் பற்றிக்கதைத்துக் குழாயடிக்குப் போவார்.

வரிகள் மங்கும் வேளையில் வெள்ளிப்பூச்சிகளும் கரப்பான்களும் படையெடுக்கத் தொடங்கின. பூச்சி கொல்லி, தெளிப்பான்சகிதம் விரைந்து நின்ற நூலகக் குள்ளர்கள் புயலில் காணாமல் போயினர். அவர்கள் நிலையறிய நிறுவப் பட்ட உயர்மட்டக் குழுவின் அறிக்கை ய.ய.ய....வலையில் பதிவாகியுள்ளது. தகவல் அமைச்சகம் நாடெங்கும் வலைவீசிக் குள்ளர் களைத் தேடிக் கொண்டிருக்கிறது. நூலகத்துறை இயக்குநர், எருவாட்டி

www.padippakam.com



களுக்கு பதிலாக கிலோ 0.26 காசுகளுக்கு விற்கப்படும் புத்தகங்களை சிதைக்காக பயன்படுத்தலாம் என்று சிபாரிசு செய்து கொண்டிருக்கிறார்.

ச்ச்ச்,ச்ச்ச்ச்,என புத்தம்புதிய பூதங்கள் விமானங்களில் பறந்து நகரெங்கும் கடைவிரித்தன. புத்தகங்களில் எஞ்சியுள்ள வரிகளைத்தேடியெடுத்து, மின்சுடுகாட்டில் தகனமாக்கிச் சில நிமிடங்களில் பால்தெளித்து வந்த குள்ளர்கள் குலுங்கி குலுங்கிஅழுதனர். ஆவதுஅறிவு... அறிவேசிவன். அன்பின் அகத்திணை ஐந்தா? அல்லது ஏழா?என ஜல்லிபோடும் பெரிசுகளும் விசைப்பலகையை அவநம்பிக்கையுடன் வெறித்தாலும், நாளடைவில் மெல்லத் தடவத் தொடங்கினர். முதல் அணைப்பில் இணையைத் தடவும் உடலின் வேட்கை,விசைப்பலகையெங்கும் வழிகிறது. அப்படிப்போடு சபாஷ்! அன்று பாய்மரக் கப்பல்கள். இன்று வலைகள். ஒவ்வொரு வீட்டின் வரவேற்பறைக்குள்ளும் அத்துமீறல்கள். சூரியனுக்குக் கீழ் சகலமும் வியாபாரம்... லாபநட்டக் கணக்கு. எங்கும் தகவல்கள் விற்கப்படும் வளாகங்கள். குவியும்துட்டு. வெள்ளிப் பணம். முப்பது காசுகளுக்காக யேசுவைத் தியாகியாக்கிய யூதாஸ் மநுதர்மம் குறித்து பென்சில் வேனியா பல்கலைக்கழகத்தில் மறுஆய்வு செய்து கொண்டிருக்கிறார்.

காதுகளில் பாம்படம்ஆட அப்பத்தா சொல்லும். ''டி.ஆர்.மகாலிங்கம் குரல் ஏழரைக்கட்டையில் உச்சிக்குப் போகுமென.''எப்படிப்பார்த்தாலும் குத்துமதிப்புப் போதும். சிட்டிகை,விரக்கடை,சாண்,முழம்...எந்த அளவானாலும் தகவல்பூதம் வாசலில் வெட்டியானாகக் காத்திருக்கிறது. மெல்லக் கதவிடுக்கில் நுழைந்த பூதம்,படுக்கையில் படுத்துக்கொண்டு,அட்டணைக்கால் போட்டு உற்சாகமாக இளிக்கிறது. அதன் எக்காளச்சிரிப்பு சுவரில்மோதி காற்றில் கெட்டியாக மிதக்கிறது. குட்டிப்பிள்ளைகள்,பெண்கள் சிலிர்த்தெழுகின்றனர். எதையும் சொல்ல....எல்லா வீட்டிற்குள்ளும் நுழைய உலகஉரிமை என்ற குரல் ஒலிக்கிறது. வானம் வலையினால் இழுத்துக் கட்டப் பட்டுள்ளது. வானம்,காற்று,நீர் சகலருக்கும் பொது. அவற்றின் விநியோக உரிமை பில்கேட்ஸ்ஸிற்கு மட்டும்.

சொற்கள் டிஜிட்டலில் ஒளிந்து கிடக்கின்றன. வலை மூலம் துள்ளிக்குதித்து ஆரவாரிக்கின்றன. பௌர்ணமி தோறும் மலைவலம் வரும் பக்தர்வெள்ளம், ஒன்பது கிரகங்களையும் சாந்தி செய்வதற்கான பரிகாரத்துடன் முருகன் டிராவல்ஸில் பயணமாகும்.

அப்பனே இதெல்லாம் யாது?உமது திருவுள்ளம் என்னவாக உள்ளது? இனி வலைகளில் மிதந்துவரும் மோகினிகளின் ராஜ்யம். சமையற்கட்டுக்குள் நுழைந்து பூரிசுடும் கருவிபற்றி ஆயிரம் நொட்டை சொல்கிறது. ஆண்மகனின் அடையாளம். ஷ்ஷ்ஷ்ஷ் பிராண்ட் ஆணுறை வாங்குவது என்று தாம்பத்யநெறி போதிக்கிறது. பிள்ளை பெற்றுச் சதசதத்திருக்கும் அடிவயிறு,புருஷனுக்கு அருவருப்பைத் தருமென அடித்துச்சொல்கிறது. TSN கருவியை use செய்துபார்! முப்பத்துமூன்று நிமிடங்களில் தேவதையின் வாசத்தை உணரமுடியும். அப்புறம் இணை யின் அடிவயிற்றுப்பரப்பில் நாக்கால் நக்கி புளகாங்கித மடையலாம். பூதம் அந்தரங்கமான அடிவயிறு குறித்து அபிப்ராயம் சொல்லுமெனில்,இனி கட்டிலை வெட்ட வெளிக்கு மாற்றிவிடலாம். செயற்கைக்கோள் காமிராக் களின் குளோசப் காட்சிகளில் திறந்தவெளியில் சிறுநீர் அடிப்பவர்களின் குறிகள் பதிவாகும். ஆதலால் மானிடர் காள்! இவ்வோத்து என்னபெயர்த்தவெனில் நண்டிற்கு மூக்குண்டோவெனில்...நோன்பு தலையாத்த.. இப்படிப் போனால் எழுத்துகள் ஜீபூம்பா பென்சிலால் கலவரப்பட்டுப் பல்லிவாலாகத் துடிக்கின்றன. கதைசொல்லிக்கோ தாங்க முடியாத குழப்பம்.

பழைய சாமான் பொறுக்குபவனின் கோணிக்குள் பாண்டலாகிப்போன பழைய P.C.கள்,பிரிண்டர்கள், மோடம்கள் பிதுங்கி வழிகின்றன. ஒவ்வொரு முடுக்கிலும் காலாவதியாகிப்போன பூதங்களின் ஸ்தூல உடல்கள் விரைத்துக் கிடக்கின்றன.

கையில் தீப்பந்தமேந்திய முதல் தேவடியாப்பையன் சென்ற பாதையெங்கும் பூதங்களின் ஜனனம். ஆதிபூதம் யாரிட்ட வரம்/சாபம்? வனகுடிமக்கள் ஆதியில் பூதங்களைக் கற்களில் பதித்தனர். உளிவழியே அதிகாரத் தின் இரைச்சல். துருத்திஊத,உலைக்களத்தில் உளிகளைக் கூர்மைப்படுத்திய கொல்லனின் தோள்களில் நீங்காதவலி. நெருப்பில் கதகதக்கும் உலோகக்கலவை. செப்புத்தகடுகளில் பொருத்தப்பட்ட பூதங்கள்,எங்கும் அதிகாரத்தைப் பாய்ச்சின. கள்ளிறக்கும் சாணார் வாகாக வெட்டிய பனையோலையில் பதுங்கிய பூதங்கள், சூர்யசந்திரரையும் தமது வரம்பினுக்குள் கொண்டுவந்தன.

வெளியெங்கும் நாற்காலிக்கான மோதுதல். பழுப்பேறிய காகிதத்தில் ஒளிந்துகொண்ட குட்டிப் பிசாசுகள்,குசு விடுவதற்கும் இலக்கணம் வகுத்தன. வலைக்குள்ளிருந்து எனது குளியலறைக்குள் எட்டிப் பார்க்கும் பூதம் சகலத்தையும் தகவமைக்கிறது. இளங்காலை,தென்றல்,மலர்,மழலையின் சிரிப்பு, தாயின் ப்ரியம்,இணையின்மீதான காதல்,அருமையானநட்பு, தோழமை... இப்படி எல்லாமே தெளிவாக முடிவெடுக்கப் பட்டுவிட்டன. இனி மூளையைக் கழற்றியெறிந்துவிட்டு, வலைக்குள் பயணித்துச் சர்வதேச... கடைசியாக ஒன்று: கவிஞர்களைப் பூதத்திற்கு இடைப் பலகாரமாகக் கொடுத்துவிடலாம்.

www.padippakam.com






# பண்பாட்டு அடையாளப் போராட்டங்கள்

....................

**ஆர். நல்லக்கண்ணு**

புதுவிசை வெளியிட்ட
பண்பாட்டு அடையாளப் போராட்டங்கள்
நூலை பற்றி அதன் ஆசிரியர்
திரு. ஆ.சிவசுப்பிரமணியனுக்கு
தோழர். ஆர் .நல்லக்கண்ணு எழுதிய
கடிதத்திலிருந்து....

அன்புள்ள தோழருக்கு,

வணக்கம். 'பண்பாட்டு அடையாளப் போராட்டங்கள்' நூலைப் படித்தேன். பண்பாடு சம்பந்தமான கருத்துக்களை ஆதாரத்துடன் விளக்கியுள்ளீர்கள். ஏங்கெல்ஸ் கருத்தையும் கூறித் தெளிவுப்படுத்தியிருப்பது - ஒரு சார்பு விவாதத்துக்குச் செல்லாமல் தடுத்து நிறுத்தும் என்று நினைக்கிறோம். நமது சமுதாயத்தில் இருந்து வரும் பழக்கங்களின் மேட்டிமைப் பண்பாட்டு ஆதிக்கத்தை சான்றாதாரங்களுடன வெளிப்படுத்தியிருப்பது பாராட்டுக் குரியது.

கம்யூனிஸ்ட்டு இயக்கத்திலும் குறிப்பாக விவசாயிகள் சங்கம் - விவசாயத் தொழிலாளர் சங்கம் நடத்திய இயக்கங்களில் மேட்டிக்குடியினரை ஆதிக்கத்தை பண்பாட்டு ரீதியாக கட்டுபாட்டுகளை நாம் எவ்வாறு உடைத்தோம் என்பதை விளக்கியிருக்கலாம் என்று கருதுகிறேன்.


நான்குநேரி மடத்துக்கிராமங்களில் 'ஓடும்குடிகள்'' என்ற கட்டுபாட்டைத் தகர்த்து மண்ணைத் தோண்டி நிலை வைப்பது போன்ற உரிமையைப் பெற்றது. (மலையடிப்புதூர், கீழக்கட்டளை)

தருமலாபுரம் கிராமத்தில் (விஜயநாராயணம் அருகிலுள்ளது) துஷ்டி சொல்லப் போகாமல் தடுத்து வெற்றிப் பெற்றது.

தஞ்சை மாவட்டதில் தென்பறையில் நடந்த முதல் போராட்டம் - உத்திராபதி மடத்துக் கிராமத்தில் பெண்கள் உரம் சுமக்கக் கூடாததென்பதாகும். பெண்கள் ரவிக்கை போட அனுமதி கிடையாது; உரம் சுமந்தால் கம்முக்கூடு தெரியும் என்பதால் இநத இழிவை அனுமதிக் கூடாதென்ற போராட்டம் முதலில் துவங்கியது. வெற்றியும பெற்றது.

பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் - மிராசுதார நிலத்தோடுள்ள அடிமை முறையை அகற்றியதாகும்.

இதுபோன்ற நிகழ்வுகளையும் இடதுசாரி இயக்கங்கள் நடத்தியிருக்கின்றன. இவைகளைக குறிப்பிட்டால் - சாதிக்காரர்கள்தான் சாதிமேம்பாட்டுக்கான போராட்டத்தை நடத்துகிறார்கள் என்ற ஒரு பகுதி உண்மையை மட்டும் அல்லாமல் 20ஆம் நூற்றாண்டில் மத்தியில் வர்க்கப் போராட்டங்களும் பண்பாட்டுப் போராட்டங்களுந்தான் தளமிட்டன என்ற வரலாற்று உண்மையைத் தெரிந்து கொள்ள உதவும் என்று கருதுகிறேன். வாழ்த்துக்கள்.



www.padippakam.com



''ஒரு நல்ல திருவோடு வாங்கணும்.......''

# பிச்சன் சுமக்கும் இறகின் சரிதம்

உரையாடலும் தொகுப்பும்:
**கி. பார்த்திபராஜா.**

( புழுதி மண்ணைக் கைநிறைய அள்ளி,முகர்ந்து பார்த்த அளவில் அந்த மண்ணில் புழுங்கும் மனிதர்களின் குணரேகைகளை உணர்ந்து கொள்கிறான் சுமைகள் ஏதுமற்ற பயணி. சூலம் போன்ற சம்பிரதாயங்களை அசட்டை செய்யும் அவன்,காற்று பாயும் திசையைக் கொண்டுதான் தான் பயணப்படவேண்டிய திசையைத் தீர்மானிக்கிறான். காற்றுக்கு எதிரே செல்ல ஒருபோதும் அவன் உடன்பட்டதில்லை. மனக்கணக்கின்படி வயதில் அறுபது ஆண்டு களைக் கடந்துவிட்ட அவன்,முப்பது ஆண்டுகளை நடந்தே தீர்த்திருக்கிறான். கூர்ந்து பார்க்கையில்,கண்களுக்கு வெளியாகாத மிகப்பெரிய மூட்டையை லாவகமாகத் தூக்கிக்கொண்டு நடந்து போகிறான். அது,வாழ்தல் குறித்த நம்பிக்கை மூட்டைதான். வழியில் எதிர்ப்பட்ட ஒருவனிடம் தன் பயணத்தைப் பற்றிச் சொன்ன அவனது பயணப்பாதை- மிக நீண்டவெளியில் விரிந்து கொண்டிருக்கிறது. பார்வையில் இணக்கம் கொண்டிருக்கிற எவருக்கும்,அவன் தன் கதையைச் சொல்லக்கூடும்.)

எம்பேரு கந்தசாமி. ஊரு உசிலம்பட்டிப் பக்கம் மேட்டுப்பட்டி. நான் 25 வயசுல சாமியாரா ஆயிட்டேன். அப்பா அம்மால்லாம் தவறிட்டாக. நான் சின்னவயசுலயே தவறிட்டாக. அதுக்குப் பிற்பாடு நா ஒரு எடத்துல ஆடு மாடுக மேச்சு,கொஞ்சங்காசும் சம்பாரிச்சு.....அதுக்குப் பிற்பாடு கலியாணங்காச்சி முடிச்சு......பொண்ணு புள்ளக பொறந்து,புள்ளகுட்டிக்காரனானேன். அதுலருந்து நல்ல படியா இருந்தேன். குடும்பநெலம கொஞ்சஞ் சரியில்ல. அதுனால எம்பாட்டு வெறுப்பா வெளியேறிட்டேன்.

வீட்டுல நா ஒரே ஆள்தேன். எஞ்சம்சாரமும் ஒரே ஆள்தேன். வீட்டு மாப்ளயா போனேன். எஞ்சம்சாரம் பொறந்தது பக்கத்துல மேட்டுப்பட்டி. எனக்கு அஞ்சு கொழந்தக. பயலுக ரெண்டுபேரு. பொண்ணுக மூணு. மூத்த பொண்ணு பேரு பேச்சியம்மா,ரெண்டாவது முத்துப்பிள்ள, மாயக்கா...மயன்க கருப்பசாமி,மாயாண்டி.

கலியாணத்துக்கு முந்தி ஒரு வீட்டுல அடிமையா இருந்தேன். ஆடுமாடு மேச்சேன். பண்ணக்கி இருந்ததுதான். பத்துவயசு வரைக்கும் இருந்தேஞ் சம்பளத்துக்கு. ரொம்பச் சின்ன வயசுலயே ஒரு எடத்துல போயி அண்டிக்கிட்டேன். எனக்கு நல்லா ஆடிஓடி வெளயாட.....பத்து வயசுக்குக் கூடத்தான் இருக்குமுனு வைய்ங்களேன். அதுக்குப் பிற்பாடு ஒரு ஆடுமாடு மேச்சு....அவுக சொல்ற வழிமுறல்லாங் கேட்டு, சாணிஅள்ளி, சகதிஅள்ளி,ஒரு காட்டுக்குப் போச்சொல்ல,கரைக்குப் போச்சொல்ல,வெறகு வெட்டப் போச் சொல்ல....எல்லாம் அவுகளுக்கு எடுபுடி வேலபாத்து,ஏதோ நல்லபுள்ள ஆகி.....அதுல கொஞ்சங் காசுங் கெடச்சுச்சு.... அதவச்சு அவுகளே கலியாணத்த வச்சாக.

கலியாணத்த முடுச்சவொடன அவுக வீட்டுக்கு நாம் போயிட்டேன்....பொண்டாட்டி வீட்டுக்கு. கலியாணம் முடுஞ்சு பத்துநாளு இருந்தேன் என் வீட்டுல. பொறந்த ஊருல. அதவிட்டு பொண்டாட்டி ஊருக்குப் போயிட்டேன்.

சந்நியாசத்துக்கு நா வந்தது குடும்பச்சங்கதி. வாழ்க்கப் பிரச்சன. பொண்டாட்டி சரியில்ல. இன்னொருத னோட இஷ்டமாருந்தா......(தாழ்ந்த குரலில்) அதுனால.... அது

எனக்குப் புடிக்கல. அது மனசு நொந்து வந்துட்டேன். கொழந்தகளுக்காக இருக்கிணுமுன்னு தோணுது....இங்க தான் ஈட்டிக்கிப் போட்டியா பண்றாள்ள......நம்மல மதிக்கல யில்ல......இன்னொருத்தனோட தொடர்பா இருக்கும்போது .....அது யாருக்குமே மனசு தாங்காது.. ஒங்களுக்கும் அதுதேன். எனக்கும் அதுதேன். மனுசனாப் பொறந்தா,எந்த ஒரு மட்டமான நபராயிருந்தாலுஞ்சரி.. ...நம்ம ஒயர்வான ஆளுகதான்....ஆனா இதுக்கு மட்டும் விட்டுக்குடுக்க மாட்டாகல்ல.....கொலபழி ஆயிரு



முள்ள..... அதுக்குத்தான் நானும் வெறுப்பா..... வெளி யேறிக்கிட்டேன் வீட்டவிட்டு. வெளியேறி,ஏதோ இந்தக் காவியக் கட்டிக்கிட்டு....தருமம் வாங்கி....பிச்ச வாங்கிச் சாப்புட்டுக்கிட்ருக்கேன்.

வீட்டவிட்டு வந்து மொதல்ல திருப்பரங்குன்றத்துல மலையிலேயே ஆறுமாசம் இருந்தேன். சொந்தக்காரன்க கொஞ்சம் கண்ணுக்குத் தட்டுப்பட்டான்க. அதுனால... அங்கருந்து திருப்புவனம்வந்துட்டேன். மடப்புரம் காளி கோயிலு...ஒரு முக்கியமான கோயிலு....நீங்க கேள்விப் பட்ருப்பிய....அங்க நமக்கு சவுகரியம் இருந்துச்சு. அங்க ஆறு இருக்கு....குளிக்க....திருப்பரங்குன்றத்துலயும் சவுரியம் இருந்துச்சு. இருந்தாலும் இந்த சொந்தக்காரன்க கண்ணுக்குத் தட்டுப்படுறதுனால....அவன்க கொஞ்சம் மட்டமாய் பேசுனானா....'என்னடா இப்புடித் திர்றே...'பிச்ச வாங்கித் திங்கிறதுனால மட்டமா நெனச்சு,வீட்டுல போயி சொல்றது....அவ நம்மள....அடுத்தாளுக்கிட்ட சொல்லி விட்டு....'இங்க இருக்கக்கூடாது. எங்கயாவது கௌம்பச் சொல்லு....'அப்டீன்னு. இப்புடிச் சொல்லவும் எனக்கு ரோசப்பட்டு திருப்புவனம் வந்துட்டேன். திருப்புவனத்துல வந்து ரெண்டுவருசம் இருந்தேன்; மானாமதுர வந்துட்டேன் மானாமதுரலருந்து பரமக்குடி வந்து ஆறுமாசம் இருந்தேன். அது டவுனா இருந்தாலும் சாப்புடக் கொள்ளச் சவுரியம் இருக்கு அங்க. கடகல்ல.... ஓட்டல்ல....பிச்சவாங்கிட்டு. சாப்பாடு கெடைக்கும் ஊருல. கையில பத்தஞ்சு இருக்கு முல்ல ஏங்கிட்ட. அதவச்சு கடகல்ல சாப்புட்டு....காலயில எங்கயாவது ஏதாவது பிச்ச வாங்குறது...அப்புறம் நைட்டுக்கு அங்க வந்துர்றது....அப்புடி இருந்துக்கிறது... அப்புறம் அதவிட்டு நம்ம திருவாடானை ஏரியாவுக்கு வந்துட்டேன். இன்னொரு ஊருல கொஞ்சநாளு இருந்தேன். நம்ம ஆரெஸ்மங்கலத்துல வந்து இருந்தேன். அது ஒரு நல்ல எடம். ஒரு மாசம் தங்கியிருந்தேன். அப்புறம் திருவாடான னாடி வந்துட்டேன். திருவாடான வந்து கொஞ்சநாளு இருக்கமுன்னு வைய்ங்க. அதவிட்டுட்டு இந்த லைனுக்கு வந்தேன். ஆவுடையார் கோயிலு...நாகுடி, சுப்புரமணிய புரம்,அங்குட்டுப்போயி பத்துநாளாத் திரிஞ்சுவுட்டு இங்குட்டு வர்றேன்.

ராத்திரித் தூங்குறது இந்த மாதிரித்தான்....சாவடி... சத்திரம்...பஸ்ஸ்டாண்டு...போலீஸ்காரக கேப்பாக. யாரு என்னண்டு கேப்பாக. சாமியாரய்யாண்டா...போய் யாண்டு வாக நம்ம சாமியாருன்னா அவுகளுக்கு ஒரு சின்ன இது. புடிச்சா புடிச்சதான். சந்தேகப்பட்டு புடிக்கிறாகன்னு வைய்ங்க...புடிச்சா புடிச்சதான். ரெண்டு நாளக்கி அங்க இருந்துட்டு...போடான்னு வெரட்டி விடுறதுதான். அது நமக்குத் தேவயில்ல. அப்புடி எடத்துல நாம் படுக்கவும் மாட்டேன். படுப்பேன்; அது எந்த எடத்துல படுக்கணு முன்னு எனக்கு ஒரு.....மனத்தைரியம் இருந்தாத்தேன் அங்ன படுப்பேன். இல்லன்னா நடயக் கட்டிக்கிட்டே இருப்பேன். கிராமத்த அண்டிப்போயி படுத்துக்கிருவேன்... பட்டிக்காட்டுனாடி. கோயிலு இருக்கு பாருங்க....அந்தக் கோயில அண்டி வாசல்ல படுத்துக்கிருறது. ஆராவது ஆருய்யான்னு கேட்டா.... 'சாமியாரய்யா....வந்தேன்; படுத்துருக்கேன்; படுத்து ருந்துட்டு காலயில போறேங்க...' அப்டீம்பேன். 'சரி படுத்துருங்க சாமி.....காலயில போங்க சாமி...'அப்புடீன்டு சொல்லுவாக. ஒரு பொல்லாத ஆளுக...'இங்ன படுக் காதய்யா...எந்திரிச்சுப் போய்யா...' அப்டீங்க,அதுக்கும் எந்திரிச்சுப் போய்கிட்டே இருக்க வேண்டியதான். அங்ன ஒரு புளியமரத்தடியில படுத்துருந்து போகவேண்டியதான். அப்டியிருக்கு ஏம் பொழப்பு.... (சிரிப்பு.)

புள்ளயல்லாம் என்னயத் தேடும். அவ தேட வேணாம்ன்ருவா. அவதான் இன்னொருதனச் சேத்துக் கிட்டாள்ளய்யா....(தாழ்ந்த குரலில்) அதுக்குச் சொல்ல

www.padippakam.com



வாரேன். அவதான கள்ள ஒறவாருக்கா.... அதுனால அந்த இதுல... தன்ன மறந்து ஒரு மனுசன வெறுத்துப் பேசுற மாதிரி....ஒரு மனுசன் வேணும்,வேணாங்கிறதுக்கு ஒரு பேச்சு வருதுல்ல...துஷடமா பேசுறவனிருந்தா ஒரு மனுசன் வெறுக்குறான்ல....அந்த மாதிரின்னு வைய்ங்க. அதான் எம் பொழப்பு. வீட்டவிட்டு வெளியேறி இதுவரைக்கும் வீட்டுக்குப் போகல. நாளக்கித்தாம் போகலாம்னு இருக்கேன். இந்தப் புள்ளயலோட ஞாவுகம் இருக்கு. அதுனால கண்ணுல பாத்துட்டு வந்துறலாமுன்னு இருக்கேன். வேற அங்க நா கஞ்சிக்குப் போகல. புள்ளயலப் பாத்துட்டு அப்டி....அப்பவே....அதே நிமிசத்துல... புள்ளயல மட்டும் பாத்துட்டு அதுக்கு ஒரு ஆந்த வார்த்த சொல்லிட்டு....நம்ம வந்துக்கிட்டே இருக்கவேண்டியது தான்.

கேக்குற எடத்துல பிச்சபோடவும் செய்வாக. அரிசி... சோறு...பத்துக்காசு...இப்புடி. செல எடத்துல திமுராவும் பேசுவாக. 'ஒனக்கு என்ன கொள்ளயாய்யா.....வேல செய்ய,போய்யா....'அப்டீன்னு அதட்டுவாக.காசு நெறயக் கெடச்சுச்சுன்னா கடயில போயி சாப்டுக்கிருவேன். இட்லியோ,தோசயோ,சாப்பாடோ....மற்றது நமக்கு வேணுங்கிறத வாங்கிச் சாப்டுக்ருவேன். கடைகள்ல வாடிக்கையா இருந்தா...ஒரு சாமான ஒட்டித் தாராகன்னு வைய்ங்க...புரட்டா சாப்டுறமுன்னு வைங்க. செல ஊருல நாம வலியக் கேட்டாதான் ஊத்துவாக. ஒரு கடயில கேக்காம ஊத்திக்கிட்டே இருப்பாக. சாமியாரு நம்ம கடக்கி வரட்டும் அப்டீன்னு. அப்புடிக் கடக்கித்தான் நான் போவேன். சில கடயில மறுசோறு வப்பாக. செல கடயில அந்த அளவு சாப்பாடுதேன். கரெக்டரா ஒரு கிண்ணத்துல... இன்னுனு...ஒரு சின்னப்புள்ள சோறுதான் இருக்கும். அதக் கொண்டுக்கு வந்து போட்டுட்டு....சரியாப் போச்சுய்யா... 'பதினைஞ்சுரூவா குடுய்யா சாப்பாட்டுக்கு'அப்டீன்னு பணத்த வாங்கிக்கிட்டு போகச்சொல்லீருவான். செல கடயில மறுசோறு கொஞ்சம் வச்சு...சாப்புடவிட்டு.... அப்பறம்... கொஞ்சம் பாயசம் கொஞ்சம் குடுப்பாக.... மோரு கொஞ்சம் குடுப்பாக....அதச் சாப்டுட்டு நம்ம வாட்டுல கையக் கழுவீட்டு காசக் குடுத்துறவேண்டியது தான். பதினேழுரூவா அது. பாயசம் குடுத்து மோரு குடுத்தா பதினேழுரூவா. வெறுஞ் சாப்பாடும் வெஞ்சனமும் குடுத்தா பதினஞ்சுரூவா. கறி வாங்குறமுன்னு வைய்ங்க....இருவது ரூவா வந்துரும் கணக்கு.

வீடுகள்ள வெரதம் இருக்காகன்னு வைய்ங்க....சாமி யாரக் கூப்புட்டு சாப்பாடு போடுவாக. மொதல்ல நம்மளக் கூப்புட்டு சாப்பாடு போட்டு,கொழம்பு ஊத்தி,தண்ணியுங் குடுத்து...வயத்துக்குச்சாப்பாடுபோடுவாக. அரைகொறயா சாப்பாடு போட்டா திருப்தியா இருக்காது முருகனுக்கு. அன்னதானங் குடுக்குறதுமாரி வகுத்துக்குப் போட்டு.... கையில ரெண்டு காசு குடுத்தாலுங் குடுப்பாக....இல்ல.... 'போயிட்டு வாங்க சாமி....'அப்டீம்பாக....பிரியம் இருந்தா ஒருவா குடுப்பாக காப்பி குடிக்க. பிரியம் இல்லாட்டி 'சாமி போயிட்டு வாங்க.....சாப்டியலா...''சாப்டேன் ஆத்தா' பிரியம் இருந்தா ஒருவா கெடைக்கும் எக்ஸ்ட்ரா.

கையில,பைதான் வச்சுருப்பேன். பை....இந்தக் காயிதப்பை மாரித்தான் வச்சுருப்பேன். மத்த சாமியா ராட்டம் பழைய சாமியாராட்டம் தோல் பைலாம் போட்டுக்குற மாட்டேன். நா இந்த விருந்தாடி போற ஆளு மாதிரி ஒரு சின்னப்பையி.....அத மட்டும் வச்சுக்குட்டு.... அதுல திருவோடு...வேற விரிப்பா ஒன்னும் வச்சுக்கிற மாட்டேன்....இந்த வேட்டி,தோளுல போட்டுருக்க துண்டு இதுதான். வேற சொமையேதும் வச்சுக்கிற மாட்டேன். நீட்டா...சிம்பளா...நம்ம பாட்டுக்கு ஜாலியா ஒரு ஊருக்குப் போயிட்டு வார மாதிரி....மண் திருவோடு ஒன்னு வச்சுருக்கேன். அது மானாமதுரையில வாங்குனது...காசு குடுத்து வாங்குனது....பத்துரூவா...வெறும் பத்துரூவா. மண்லயே திருவோடு...வட்ட சைசுல...செஞ்சு விப்பாக. செல ஊருகள்ல திருவோடு சைசுக்கே செஞ்சு...நல்லா காய வச்சு....தீயில போட்டு வாட்டி...கருப்பு மாதிரி ஆக்கி அதையுங் குடுப்பாக....அது பதினஞ்சுரூவா. மதுரை புதூரு...அங்க ஒரு வேளாள வீட்டுல போடுவாக. ஏற்கனவே ரெண்டு மூணு வட்டம் வாங்கீருக்கேன் அங்க. அத திருவோடு மாதிரியே கைவசம் வச்சுக்கலாம்.

ஒருதரம் திருவோட்ட ஒருதன் அடுச்சு ஒடச்சுப் புட்டான்.அது நம்ம மேலூரு சைடு. 'ஒனக்கென்ன கேடு... போடா...'அப்புடீன்னு ஒரு சாதாரண ஆளு....லோடு... லோடு...(குடிகாரன் என்று விரலைக் காட்டுகிறார்) தண்ணி யடிச்சுட்டு...சும்மா நான் நடந்து போயிக்கிட்டிருக்கும் போது ரோட்டுல....'எந்த ஊர்ருடா'அப்புடீன்னு மெரட்டி அப்புடீன்னு கெட்ட வார்த்தயில பேசி....என்னய அடிக்கிற முன்னு....இதுல கைபட்டு ஒடு ரெண்டா ஒடஞ்சு போச்சு. மண் ஒடுதான....ரெண்டா விட்டுப்போச்சு. அப்பறம் ரெண்டு அடி அடிச்சான். அதையும் வாங்கிக்கிட்டு வந்துக் கிட்டே இருந்தேன்,முருகா நீ பாத்துக்கடான்னுட்டு. அதுக்கு அப்பறந்தான் மானாமதுரயில சின்ன திருவோடு வாங்கிக் கிட்டேன்.

கையில காசுருந்தா பீடி சிகரெட்டு குடிப்பேன்.

www.padippakam.com



அதோட சரி. வேறெதுவும் சாராயம் கஞ்சா எதுவும் நமக்கு புடிக்காது. வேற போதை வஸ்து எதுவும் சாப்புட மாட்டேன்...கையில கெடக்கிற காசுலதான் சாயாவும் குடுச்சுக்கிறனும் பீடியும் வாங்கிக்கிறனும்....ஒரு சாயா ஒன்னாருவா. ஒன்னாருவா நம்ம செட்டப் பண்ணித்தான் குடுக்கனும்.....செலவேரு ஒன்னே காலுரூவா குடுத்தாலும் வாங்கிக்கிருவாக....அது கிராமத்துலதான் அப்புடி. டவுனுக்குள்ள ஒரு பைசாக்கூட கொறச்சுக் குடுக்கமுடியாது.

இந்த சுப்புரமணியபுரத்துல ஒரு ஆளு என்னய மெரட்டிட்டாரு. நான் பிச்ச எடுத்த அரிசிய அந்த ஆளு வாங்கிக்கிறமுன்னு சொல்லிட்டாரு. அப்பறம் என்ன நெனச்சாரோ....அப்பறம்....'வேணாஞ்சாமி....'அப்டீன்டாரு. நா அத வித்தாத்தான்....இத நம்பித்தான் டீயும் ஒரு மிக்சர் பொட்டனமும்...மிக்சர் பொட்டனம் ஒர்ரூவாயோ ரெண்ரூவாயோ தெரியல....அதுக்கு நானு இந்த அரிசிய விக்காம....கொஞ்சம் செரமப்பட்டுப் போனேன. ஒரு நா முன்னப்பின்ன ஆச்சுன்னு வைங்க. அதுக்க என்ன மெரட்டிட்டாரு. போடா வாடான்னு பேசிப்புட்டாரு. 'சாமியாருப்பய அந்தப்பய இந்தப்பய...பிராடுகாரப்பய... பிச்சக்காரப்பய...'அப்புடீன்னு தரமல்லாம பேசிப்புட்டாரு. எனக்குன்னா மனசு ரெம்ப வேதனயாப் போயிருச்சு. அது ரோட்டுல போயிக்கிட்ருக்கவன கூப்புட்டு என்னயத் திட்டிப் புட்டாரு. 'காசக் குடுத்துட்டுப் போடா பிச்சக்காரப்பயலே...' அப்புடீன்னு கேட்ட ஒடன எனக்கு மனசு வேதனப்பட்டுப் போச்சு. இப்ப காசு இல்ல...காலயில தாரமுன்னேன். 'அதுலாம் முடியாது இப்பவே காசக் குடுத்துட்டுப் போடா பிச்சக்கார நாயே' அப்புடீன்னு அசிங்கமா பேசிப்புட்டாரு. அப்பறம் ஒங்களாட்டம் ஒருதரு 'ஏய் அவர திட்டாதய்யா... அவரு காலயில குடுத்துருவாரு....' அவரு சொல்லவும் கொஞ்சம் பேசாம நிண்டாப்புல. அப்பறம் நானும் அரிசிய வித்து ரெண்டாரூவாயோ மூன்றூவாயோ குடுத்துட்டேன். அவரு இல்ல கடயில ஒரு பையன் இருந்தான். சொல்லிக் குடுத்துட்டு வந்தேன் 'ஐயா....ராத்திரி என்னப் பேசிப் புட்டாரு....இந்தக்காச சாமியாரு குடுத்தான் அப்டின்னே சொல்லு...என்னய அவருன்னு கூட சொல்லவேணாம். சாமியாரு குடுத்துட்டுப் போனான் அப்புடீன்னு சொல்லீரு' அப்புடீன்னு சொல்லிட்டு அப்பறம் வந்தேன்.

பிச்ச எடுக்குற அரிசிய கடகள்ல வாங்கிக்கிருவாக. செல வீடுகள்லயும் வாங்கிக்கிருவாக...இல்லாதவுக....கூலி ஆளுக...இந்த சேம்பருல வேல பாக்றாங்க பாருங்க... செங்கவேல...அவுகள்லாம் அரிசி வெலக்கித்தான் வாங்கனும்...அவுகட்ட கொண்டுபோயி குடுத்தம்னாக்க... ஏதோ ஒருவா ரெண்ரூவாய குடுத்துட்டுக்கூட...வாங்கிக் கிருவாக....ரேசன் அரிசிதான....அதுனால கொறச்ச வெலயில வாங்கிக்கிருவாக. பக்கா ஒருபடி ஆறுரூவான்னு கூட குடுத்துருக்கேன். நல்ல அரிசியா இருந்தா பத்து ரூவான்னுகூட குடுப்பேன்...

ஒடம்பு சரியில்லன்னா பேசாமப் படுத்துக்கிருவேன். காப்பித்தண்ணி குடுச்சுட்டுப் படுத்துருவேன். ஒரு நாயிகூட நம்மளக் கடிச்சுப்புருச்சு...வேற ஊருக்குப் போறமுன்னு... நைட்டுல பத்துமணியப்போல...அந்த நேரம்....நாம் போன நேரம் லைட்டும் இல்ல...லைட்டு ஆப்பாயிப் போச்சு... அன்னக்கி மழை....அன்னக்கி நாயி கடிச்சுப்புடுச்சு சாமி... இந்த வேட்டி வேற வேட்டி...இந்த வேட்டி நேத்துதான் ஒரு ஆளு குடுத்தாரு...இன்னயோட மூனுநா ஆச்சு...தொடயில ...பெருந்தொடையில கடுச்சு வேட்டியப் புடிச்சு கிழிச்சிருச்சு...ஊசி போடல...மாத்தர வாங்கி சாப்புட்டேன்...இந்த மாத்தர...மஞ்ச மாத்தர...ஆச்சனா... ஆச்சன் பை கண்டரட்....அது வாங்கிச் சாப்டேன். மண்ட வெயிட்டா இருந்துச்சு அதுக்கு ஒரு மாத்தர வாங்கிச் சாப்புட் டேன். கையில குச்சி இல்லாட்டி நாயிக வெரட்டும்...கீழ தட்டுனா ஓடிப்போயிரும்... அப்புடீல்லாம் இருக்கய்யா ஏம் பொழப்பு...இந்த மொட்ட கோயிலுக்குப் போட்டேன்... ஆவுடையார் கோயிலுக்கு. ஆபநாதர் கோயிலுக்கு. நாயி கடுச்சதுல்ல...அதுக்கு நேந்துக்கிட்டுப் போட்டேன்.... வெசம் ஏறக்கூடாது...ஊசி போடல...நான் ஊசி போட மாட்டேன்...அதுக்காக. சாமியாருல்லாம் ஊசி போடக் கூடாது. நம்ம திரேகத்துல ஊசி படக்கூடாது.

இப்போ ஒரு பெரிய தவறு பண்ணிப்புட்டான் ஒரு சாமியாருன்னு வைய்ங்க....ஒரு புள்ளயக் கெடுக்குறான்னு வைய்ங்க...இந்தத் தவற மனசுக்குள்ள வச்சுக்கிட்டு... எல்லாரையும் நெனப்பாக. நம்ம எவ்வளவோ கேள்விப் பட்டுருக்கமுல்ல. பிரமானந்தா சாமியாரப்பத்தி நம்ம கேள்விப்பட்டுருக்கமுல்ல. அவன் பண்ற ஊழல்தான எங்களுக்கு எடமுல்லாமப் போச்சு. எங்கள செலவேரு... 'என்ன நீ பிரேமானந்த சாமியாருக்குச் சொந்தக்கார்ரா...' அப்புடீன்னு லக்கலா பேசுறது நம்மள. அவன் பண்ணுன வேலயினால நம்மளயும் சேத்துப் பேசுறது அவுக. அந்த மாதிரி செல எடங்கள்ள மரியாத இருக்கு. செல இடங்கள்ள மதிக்க மாட்டாக. வசதி இல்லாதவுகளுக்கு குடுக்குறதுக்குத் தான் மனசு வரும்.

கோயிலுக்குப் போயி பிச்ச எடுக்கப் போகும்போது

படிப்பகம்

www.padippakam.com



அங்க உள்ள சாமியாருகளோட பழக்கம் வச்சுக்கிருவேன். என்ன ரொம்ப பழக மாட்டேன். 'சாமீ'ன்னு கேப்பாக. நாமளும் 'என்ன சாமி'அப்டீங்கிறது. நமக்கு பிச்ச போடுறவுக போடுவாக. அவுகளுக்குப் போடுறவுகளும் போடுவாக. கோயில்லயே ரெம்பநாளா சாமியாருக இருக்கயில நாம புதுசாப் போறமுன்னு வையிங்க,புதுசாப் போனா மரியாதை கொஞ்சம் கம்மிதேன். 'அங்குட்டுப் போயி ஒக்காரு,இங்கிட்டுப்போயி ஒக்காரு,அங்ன போயி ஒக்காந்து வாங்கு,வெளியபோயி ஒக்காரு,கோயிலுக்கு வெளிய. நாங்க வாங்கணும் இது எங்க வாடிக்கை உள்ள பகுதி. நீ அங்குட்டு வெளிய போயி ஒக்காந்து வாங்கு.' அப்புடி எடுத்தாலும் நானுங் கொஞ்சநாளு வாங்கீருக் கேனுள்ள. எங்க? இதே திருப்பரங்குன்றத்துல. முருகன் கோயில்ல. அவுக பழைய ஆளுகள்ளாம் பழைய எடங்கள்ள அதுனால ஒக்காந்துக்கிட்டு. இப்ப நா ஒக்காந்தி ருக்கமுன்னு வையிங்க. எதேச்சையா காசு விழுகும். மத்த சாமியாருள்ளாம் அங்குட்டுப்போயி ஒக்காரும்பாக. அவக மொதல்ல ஒக்காந்தா காச மொதல்ல போட்டுருவாகண்டு. அந்த மெயினான எடத்துல ஒக்காந்துக்கிறது...அந்தக் கோயில அண்டி...அந்தச் செவத்தை அண்டி ஒக்காந்துக் கிருறது...ஆங்...(சிரிப்பு...)

இந்த மொரட்டு சாமியாருகளயில்லாம் நாம் பாக்கல. மொரட்டு சாமியாருன்னா...இந்த பிரேமானந்தா சாமியாரு...சந்திராசாமி....இந்தமாரி...இந்த திருச்சியில ஒரு பொம்புள....ஒரு பொம்புள சாமி ஊழல்தனம் பண்ணிப் புருச்சல...அதப்புடுச்சு உள்ள போட்டாகல்ல... அப்படி ஒரு முக்கியமான சாமிகள எல்லாம் கிட்டபோயி பாத்ததுல்ல.... யாராவது மொகத்தார் சொன்னா...காதுல கேட்டுக்றது. அதயிட்டு நமக்கு ஒரு கெட்டபேரு. நாம் பாக்குற சாமியாருகள்ள ஏமாத்தற சாமியாருகளும் இருக்காகல்ல... இப்ப நீங்க ஒரு காசுகப்பு வச்சுருக்கியன்னு வச்சுக்கங்க... தூக்கத்துல எடுத்துக்கிட்டுப்போற சாமியாரு களும் இருக்காகல்ல....படுக்குறமுன்னு வைய்ங்க....நம்பிப் படுக்கச் சொல்றீங்க நீங்க...படுக்கும்போது ஒங்க மடியில என்ன இருக்குமுன்றது தெரியாதுல்ல...கேட்டுக்கிறதுல்ல... தூங்கும்போது மடியில இருக்கத எடுத்துக்கிட்டு தெரியாதது மாதிரி வேற ஊருல போயி படுத்துக்கிறது. காலயில நீங்க வச்சுருந்த சாமானக் காணாமுண்டா அவனத்தான் நீங்க நெனக்கிறது. அவருதான அந்தாளு.....அவருதான் எடுத்துருப்பாரு.....நாளப்பின்ன அம்புடுறாருன்னு வச்சுக்குங்க அப்பப்புடுச்சு ஒதைக்கிறது.....அவன் இல்லை ன்ருவான்.



பேராசிரியர் ஜோதி

செல சாமியாருக பேங்குல போடுறாகள்ள... இப்டிலாஞ் சிக்கல் இருக்குன்னு. பேங்குல போட்டமுன்னா எப்ப வேணுமுனாலும் கையில எடுத்துக்கிறலாம். நம்ம மண்டயப் போடுறமுன்னு வையிங்க....நம்ம பிள்ளய பேரப் போட்டுக் குடுத்துட்டமாக்கும் பிள்ளய வந்து வாங்கிக் கிருங்க...ரெண்டுரூவாயா இருந்தாலுஞ் சரி,அஞ்சு ரூவாயா இருந்தாலுஞ் சரி,பத்து ரூவாயா இருந்தாலுஞ் சரி அந்த ரிக்காடப் பாத்துட்டு....குடுத்துருவாக.

காசு இருக்குன்னு வைய்ங்க. அதப் பேங்குல போட வேண்டியதுதான். ஆனா நா இன்னம் போடல....நமக்குக் காசே கெடக்கலங்க அய்யா....(குரல் ஓங்கி ஒலிக்கிறது.) (சிரிக்கிறார்) ஏன் அளவத்தான் நான் ஒங்ககிட்ட சொல்றன்ல. நான் கையில காசுருந்தா அஞ்சுரூவா இருந்தாலும் டீக்கடக்கிப் போயிருவேன். ரெண்டு பலாரம் வாங்கி டீக்குடிச்சாத்தான் எனக்குக் கண்ணு அடையும். இந்தக் காச மிச்சப்படுத்தணும்,சம்பாரிக்கணும்,வட்டிக்கிக்

www.padippakam.com




குடுக்கணும்....அந்தக் காசப் பெருக்கணும் அப்புடீன்ற எண்ணமெல்லாம் ஏங்கிட்ட கெடயாது. நம்ம வகுத்தக் கழுவுனாப் போதும். இந்த வகுத்துக்கு நம்ம துரோகம் நெனக்கப்புடாது. அப்புடீன்றதுக்காக பத்து ரூவா இருந்தாலுஞ் சரி....ரெண்டு ரூவா இருந்தாலுஞ் சரி.... ஒடனே டீக்கடயிலதான்...இல்லன்னா ஓட்டல்லதான் என்னப் பாக்கலாம். காசுல்லாத குத்தத்துனால வலிய யாருக் கிட்டயாவது இம்புட்டுப் பழயசோறு கேப்பேன்.

செல சாமியாருக சரியாப் போடலயின்னா திட்டிப் புட்டுப் போயிருவாக.....நீ வெளங்காமப் போயிருவ அப்படீம்பாக. நீ வெளங்காமப் போ அப்டீன்னா வெளங்காமப் போயிருவாகளோ?.....(சிரிக்கிறார்...) அப்புடிச் சாமியாரு எத்துனையோ பேரு ஒதை வாங்கிட்டும் போயிருக்கான்கல்ல. அவன் அடிக்கிறா கன்னு வைய்ங்க. யாரு எதுத்துக் கேக்குறது?...அந்த அடிய வாங்கிட்டு போயிட்டே இருக்க வேண்டியதான்.

நெறயா ஊரு போயிருக்கேன். தஞ்சாவூர் மாவட்டம் ரொம்ப செழிமான ஊரு. செய்கை அவ்வளவு சரியில்ல. ஊரு நல்ல செழிமான ஊரு. தருமம் போட மாட்டாக. வெறுஞ்சோறுதாம் இம்புட்டு அள்ளிப்போடுவாக. அவுக தருமம் போடுவாக, அஞ்சு பைசாவுக்கு மேல போட மாட்டாக. அரிசியிலாம் வீட்டுக்கு அரைக்காப்புடி போட்டாலும் நெறயா கெடக்கிம். அவக அரிசியே போட்டுப் பழக்கம் இல்லயாம்...அவக சொல்றாக. நாகுடி பேராவூரணி வரயில போயித்திரும்பி வந்தேன். அங்க கொஞ்சம் செழிமானமாத்தான் தெரியிது. வைகைத் தண்ணி பாசானமில்லயா....ஆத்துத்தண்ணி......காவேரி ஆத்து. இங்கேருந்து வருதுல தண்ணி...எங்க...இங்க ஆவுடையார் கோயிலருதி வருதுல்லங்க தண்ணி......

இந்தப் பகுதியில (இராமநாதபுரம்)...... ஏதோ ஓரளவுக்குப் பரவாயில்ல....இல்லயினு சொல்லாமயும்..... ஏதோ கேட்டதுக்கு ஒரு புடிச்சவுடியாவது அரிசி அள்ளிப் போடுறாக சோறாவது போடுறாக.....பத்துக் காசுன்னாலும் மனசாத்தாராக....திருவாடான.....ஆரெஸ்மங்கலம்....நம்ம பரமக்குடி.....ம்...ராமநாதபுரம்....இங்கிட்டு மானாமதுர... திருப்புவனம்....மதுர ஏரியா...இங்கிட்டுப் பரவாயில்ல. இதுக்குத் தெக்கதான் போடவே இல்ல. தென்னாடு. அருப்புக்கோட்ட....தூத்துக்குடி...நம்ம சாத்தூரு கோயில் பட்டி....விருதுநகரு....அருப்புக்கோட்ட...ம்...எட்டயாபுரம்... நம்ம இந்தக் கட்டபொம்மன் ஊருக்கெல்லாம் இன்னம் போனதுல்ல....அந்த ஊருக்குப் போகனும்ண்டு ஒரு ஆச இருக்கு....அந்தக் கட்டபொம்மனோட பெறந்த ஊரு எது? எப்புடி இருந்து வந்தாரு? அவரு இருந்த மணிமண்டபத்த எப்புடி....அப்படீங்கிறதப் பாக்கிறதுக்காகப் போகணும்.

வேற.....மெட்ராசப் பாக்கணுமுன்னு ஒரு ஆச இருக்கு......அதயடுத்து திருப்பதி போகணுமிண்டு ஆசப்படு றேன். அப்பறம் இன்ன ஒரு ஊரு பெங்களூரு போகணமுன்னு இருக்கேன். பெங்களூரு...ஊட்டி... ஏலகிரிமல... கொடைக்கானல்.....இதயல்லாம் பாக்கணு முன்டு ஒரு ஆச இருக்கு...ம்...இதுக்குப் போகணுமுன்னு பாக்குறேன். வேளாங்கண்ணிக்குப் போகணுமின்னு ஒரு ஆச இருக்கு. அந்த மாதா கோயிலப் பாக்கணுமின்னு ஒரு ஆச....அங்க ஒரு பொருள் ஒன்னு இருக்காம் அதை வாங்கணுங்கிறதுக் காகப் போறேன்.....பொருளுன்னா தங்கமுன்னு நெனச்சிரா திக........(சிரிப்பு...) திருவோடு வாங்கணும்னு போறேன் (சிரிப்பு) அது கெடக்காட்டி ஒரு சங்காவது வாங்கி வச்சுக்கிறலாம்.....இப்ப வச்சுருக்கது மண்ணோடுதான கையில வச்சுக்கிருக்கேன். இதுக் கொஞ்சம் மருவாதி கம்மி தான. சங்கு வாங்கி வச்சுக்கிறலாமுன்னு பாக்குறேன். அதுக்குத்தான் அந்த ஏரியாவுக்குப் போகலாமுன்னு பாக்குறேன்.




(கையெழுத்துப் படியைத் தயா செய்ய உதவிய, சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறை ஆய்வாளர் செல்வி நா. ரேணுகாவுக்கு நன்றி.)

படிப்பகம்

www.padippakam.com





**செத்தவர்களை ஏமாற்றியவர்களைப்**
**பற்றிய செய்திகள்**

குளுமையான சூழல்
கூத்தும் பாட்டுமான
அரட்டையில்
குதூகலமான
நண்பர்கள் கூட்டம்.

எனக்குள் புழுக்கம்
எழவும்
எழுந்தேன்
கிண்டல் பார்வைகள் கிழித்து.
வெளியில்
எரிக்கும் வெய்யிலில்
இறங்கி நடந்தேன்.

ஈரமாய்
கோடை வெய்யில்.
உள்ளே -
உலர்ந்த மனிதர்கள்!

***A. வளவன்***

தில்லையில் ஆடுகிறான் தாண்டவராயன்
என்றோர் வரி
கவிதைக் காதாரமாய் தந்து சென்றார்
சித்தப்பா-
கவிதையெழுது வாரென்றம்மா
சொல்லக்கேட்டு விசாரித்ததும்
அந்தப்பெயரில் அவருக்கிருக்கும்
தம்பி பற்றிச் சொன்னாரோ
அன்றி
ஞாலம் காக்க ஆலமுண்டவனைச் சொன்னாரே!
தொடவும் விடவும் முடியாமல்
புலிவால் தொட்ட தயக்கத்துக் கவிதையுடன்
நான் திண்டாட-
முற்றுப்பெறா கவிதையின்
மன உளைச்சல் சுகமா சுமையா
என் உணர்த்தாமலேயே
ஆடுகிறான் தாண்டவராயன்
இன்னமும் தில்லையில்,

**S.** *ராமநாதன்.*

**ஆன்றி மிஷோ கவிதைகள்**
திருத்தம்

சென்ற இதழில் வெளியான ஆன்றி மிஷோ கவிதைகளை பிரஞ்சு மூலததுடன் ஒப்பிடப்பட்ட நிலையில் ஆங்கிலம் வழி தமிழில் மொழிபெயர்த்தது **நடராஜ் - கண்ணன்.**

இரண்டாவது கவிதையில்
'ஆயுதங்கள்' என்றிருப்பதை
'கைகள்' என வாசிக்கவும்.

படிப்பகம்

www.padippakam.com




இதிகாசங்களை உழைப்பாளிகளின்
பண்பாட்டு ஆயுதங்களாக்கிய

# ''உபகதை''

ஒரு பார்வையாளரின் பதிவுகள்

**நீதிராஜன்**



ஏகலைவன் துரோணரிடம் வில்வித்தை கற்றான். அவன் அர்ச்சுனனைவிட அதிக திறமையாய் இருந்ததால் மானசீகமாக குருதட்சிணையாக அவன் கட்டைவிரலையே துரோணர் கேட்டார். கொடுத்தான். என்பதுதானே நமக்குத் தெரிந்த கதை! இதில் தன்னை குருவாக மதித்தவனிடம் துரோணர் கொடூரமாக ஏன் நடந்து கொண்டார் எனும் கேள்வி மட்டுமே இருக்கிறது:

சென்னையில் பிப்ரவரி 16,17,18 தேதிகளில் நடந்த ''உபகதை''எனும் நாடகம் இந்த கேள்வியை மேலும் ஆய்கிறது.

இதுவரை வென்றவர்களே தோற்றவர்களுக்கு கதை சொன்னார்கள். தோற்றவனே தன் கதையை சொன்னால்? எனும் கோணத்தில் இருந்து நாடகம் இதிகாசங்கள் உள்ளிட்ட மரபு இலக்கியங்களை பார்க்கிறது.

ஏகலைவனே தன் கதையை நாடகத்தில் சொல்கிறார். சம்புகன்,அனார்கலி,ரேணுகாம்பாளின் கதைகளையும் காட்சிக்கு வைக்கிறார்.

ஏகலைவன் வேட்டையாடி வாழ்பவன். வேடவர் தலைவன். காட்டுக்குள்ளே வந்த அர்ச்சுனன் ஏகலைவனிடம்,தோற்றோடுகிறான். துரோணர் படையுடன் வருகிறார். ஏகலைவன் கட்டைவிரல் கட்டாயமாக வெட்டப்படுகிறது.

குருவுக்கு குருதட்சிணையாக தரவில்லையா? என்ற கேள்விக்கு ஏகலைவன் சொல்கிறான். ''நான் ஏன் துரோணரிடம் வில்வித்தை கற்கவேண்டும்? வில்லும் அம்பும் எங்கள் விரல்களின் நீட்சி! வேட்டையாடி வாழும் எங்கள் முன்னோர்களிடம் வேண்டுமானால் துரோணர் கற்றுப் போயிருக்கலாம்? என்கிறான்.

உண்மைதானே! எத்தனை காலம் மகாபாரதம் கேட்டோம்!! பார்த்தோம்!! ஆனால் எத்தனை இயல்பான கேள்வி! அது கிளப்புகிறது ஆயிரம் துணைக் கேள்விகளை!

அந்தக் கேள்வி ஏகலைவக் கதையின் மாயத்திரையை விலக்குகிறது. திரைக்குள்ளே ஏகலைவன் எனும் சூத்திரன் திறமையானவனாக இருந்தாலும் சத்திரியனை வெல்லக் கூடாது. பிராமண ஆசிரியன் அறியாமல் வித்தையை கற்றாலும் கட்டை விரல் வெட்டி அழிக்கப்படும் எனும் மனு (அ) நீதிதர்ம சமூகம் மகாபாரதத்திற்குள்ளே பளீரிடுகிறது.

அதனால்தான் மகாபாரதத்தில் ''சாதீய சிந்தனை'' ஏகலைவன் கட்டைவிரலை வெட்டிவிட்டு ''குருதட்சிணை யாக கொடுத்தான்''என்று ஏகலைவனின் பரம்பரைக்கே பாடம் நடத்துகிறது.

மகாபாரதத்தின் ஏகலைவ கதையின் நோக்கம் சூத்திரனை அழிப்பதல்ல. அவனுக்குள்ளே அடிமைத்

www.padippakam.com



தனத்தை வளர்த்துப் பலப்படுத்துவதே!

உண்மையில் இதிகாசங்கள் ''மெக்காலே''வேலை யைத்தான் செய்தன,செய்கின்றன. ஆங்கிலேயர்களுக்கு இந்திய அடிமைகளை மெக்காலே கல்விமுறை தயாரித்துத் தந்தது.

இந்திய சாதீய சமூகத்திற்கு சூத்திர அடிமைகளை இதிகாசங்கள் தயார் செய்து தந்தன. செய்துகொண்டு உள்ளன.

வேதங்கள் உள்ளிட்ட சாஸ்திரக்கல்வி உழைப்பாளி களுக்கு மறுக்கப்பட்டது. ஆனால் சாஸ்திரங்களின் சாதீய கருத்துக்களுக்கு சூத்திர அடிமைகள் கட்டுப்படவைக்க வேண்டுமே,அதனாலே இந்த கருத்துக்களையே இதிகாச, புராணங்கள் வழியாக சொல்லித்தந்து உழைக்கும் மக்களின் எதிர்ப்பு உணர்வை காயடித்தனர். கட்டுப்பட வைத்து, அடிமைத்தனத்தை வளர்த்தனர்.

இன்னொரு கேள்வியும் வரலாம். உழைப்பாளியான சூத்திரனை எதிர்ப்பதுதான் நோக்கமென்றால் இதிகாசத்தில் இப்படிப்பட்ட கதையே வேணாமே? ஏகலைவன் திறமையாக இருந்தான் என்பதை வெளிப்படுத்த வேண்டிய தில்லையே?

அடுத்ததாக ராமராஜ்ய சம்புகனின் கதை, ராமராஜ்யம். சாதீயராஜ்யம். சூத்திர சம்புகன் மறைவாக வேதம் படிக்கிறான். மேல்சாதியை காப்பியடிப்பதுதான் முன்னேறும் வழி என நினைக்கிறான். அவன் சாதீய தாழ்வுணர்ச்சியின் சின்னம். சகதோழர்களின் அறிவுரை களை புறக்கணிக்கிறான்.

ராமனின் தலைமை புரோகிதரின் குழந்தை இறந்து பிறக்கிறது. சம்புகன் வேதம் படிப்பதே குழந்தையின் மரணத்துக்கு காரணம் எனும் புகாரை ராமன் ஏற்கிறான். சம்புகன் தலையை துண்டிக்கின்றான். இங்கும் மன்னனின் கடமை பிராமணரை பாதுகாத்தல்,சூத்திரரை அடிமை வேலை செய்ய வைத்தல் எனும் மனுஅநீதி சட்டமே கதை யாக உழைப்பாளிகளுக்கு சொல்லப்படுகிறது. அரவர் களோடு போரிட வேண்டிய அரசனான ராமன் ஒரு சூத்திரனை ஏன் நேரடியாக வதம் செய்யவேண்டும்? சாதீய சமூகத்தின் விதிகளே இதை செய்ய வைக்கின்றன. பள்ளிகள் இப்போது ராமன் செய்த வேலையைத்தான் செய்கின்றன.''என்கிறான். காட்சி விரிகிறது.

ஏழை தலித் விவசாயி மகன் பள்ளியில் சேர்க்கப் படுகிறான். பாடத்திட்டத்தில் பண்டிகைகளாக ஆவணி அவிட்டம்,கோகுலாஷ்டமி,போன்றவை உள்ளன. அவன் கொண்டாடும் முளைப்பாரி மற்றும் மயானக்கொள்ளை, போன்றவை இல்லை.

விவசாயம் பற்றி அவன் வகுப்பில் விரிவாகச் சொல் கிறான். ஆனால் பாடப்புத்தகத்தில் இருப்பதை மட்டும்தான் சொல்லவேண்டும் எனக் கண்டிக்கப்படுகிறான். இந்த செய்தி நாடகத்தில் அழுத்தமாகச் சொல்லப்படுகிறது.

எல்லோரும் படிக்கலாம் எனும் நிலை வந்துவிட்ட இந்தக் காலத்தில் சம்புகன் கதையை ஏன் சொல்கிறாய்? என நாடகத்தில் ஒரு கேள்வி வருகிறது. அதற்கு ஏகலைவன் ''இப்போதும்,ராமனும்,சம்புகனும் இருந்தால் முன்பு போல சம்புகன் தலையை ராமன் வெட்டமாட்டான். பள்ளியில் சேர்த்துவிடுவான். அவனுடைய ஓவியம்,பாடல் திறமைகள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. அவன் வாழ்கிற சூழலோடு தொடர்பில்லாத,பயன்படாத கல்வி பள்ளியில் உள்ளது. ஆனால் அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை என பள்ளி அவனைத் துரத்துகிறது. ''நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு'' என்று ஆசிரியர் விரட்டும்போது அந்த தலித் சிறுவன் அழுகிறான். இந்த காட்சி பார்ப்பவர்களை மனம் கசிய வைக்கிறது.

வேதம் படித்ததற்காக,சம்புகன் தலை ராமனால் வெட்டப்பட்டது. அது போலவே இன்றும் பள்ளிக்குப் படிக்க வருகிற தலித் குழந்தைகளின் ''கல்வி ஆசைகளின் தலைகள்'' தினமும் வெட்டப்பட்டு . கொண்டுதான் இருக்கின்றன.

வென்றவனும்,தோற்றவனும் சமமில்லை என்பதை திரும்ப திரும்ப பாடத்திட்டம் சொல்கிறது. ஏற்றத்தாழ்வு களை ஏற்றுக்கொள்ளும் மனநிலையையும் கல்விச்சாலை உருவாக்குகிறது என்கிறது நாடகம்.

அடுத்ததாக வருகிறாள் அனார்கலி. அடிமை நடனக் காரியான அவளை அக்பர் சக்ரவர்த்தியின் மகன் சலீம் காதலிக்கிறான். மணக்க விரும்புகிறான். அக்பருக்கு இதில் வெறுப்பு இல்லை. தன் ரஜபுத்ர மனைவி ஒப்புக்கொள் வாளா என்றும் கவலைப்படுகிறார். சாதி அமைப்பு இல்லாத இஸ்லாமிய சமயத்தை சேர்ந்த மன்னனின் ஆட்சி நடக்க லாம். ஆனாலும் சாதீய சிந்தனைதான் சமூகத்தை ஆள்கிறது. ரஜபுத்ர ஷத்திரியப்பெண் அடிமை மருமகளை ஏந்த மாட்டாள். இந்திய சாதீய சிந்தனையோடு அக்பரும் மோத விரும்பவில்லை,முடிவு எடுக்கும் பிரச்னையை மந்திரி களிடம் தள்ளிவிடுகிறார்.

மந்திரிகள் அனார்கலியை நாட்டைவிட்டு துரத்து கிறார்கள். சலீம் பின்தொடர்கிறான். இளவரசன் நாட்டை விட்டு செல்லாமலிருக்க அனார்கலி உயிரோடு சமாதி யாக்கப்படுகிறாள்.

மதம் மாறினாலும் சாதி விடுவதில்லை. சாதியை எதிர்ப்போர்களையும் அது தனி சாதியாக்க முயல்கிறது. சமூகத்தின் பிற முரண்பாடுகளோடு சாதி முரண்பாடுகளை எதிர் எதிராக வைத்துப் புரிந்துகொள்ளும் சிந்தனை மு னால் சாதியை அழிக்கமுடியும் என்கிறது நாடகம்.

ஜமதக்கினி முனிவரின் மனைவி ரேணுகா. ...ளும் மண்ணைப் பிசைந்து குடமாக்கி உடனே அங்கேயே தண்ணீர் கொண்டுவரும் ''கற்புக்கரசி.'' ஒரு நாள் குளக்கரை யில் வானில் வரும் கந்தர்வனை பார்த்ததால் 'கற்பு'' போய் விடுகிறது. மண்ணை,குடமாக்க முடியவில்லை. முனிவர் மன்னிக்க மறுக்கிறார். மகன் பரசுராமனை ஏவித் தாயைக் கொல்லச் சொல்கிறார். கெஞ்சிப்பார்த்த மனைவி கொதிக்கி றாள். ''நான் செய்தது அறியாப்பாவம். ஆனால் தெரிந்தே மனைவியை கொல்லுதல்,தாயைக் கொல்லத் தூண்டுதல் என இரண்டு பாவம் செய்கிறாய் முனிவனே'' என எச்சரிக்கி றாள். ''வெறும் மண் பானை ஆவது எனக்குத் தரப்பட்ட

வின் பகுதி ஸ்ஆவோட்டர் என்று கூறுகிறது. வடமொழியில் ஹோட்டர் என்பது மதகுருவைக்குறிக்கும் சொல் என்பதோடு இதை ஒப்பிடலாம். மேலும் அவரை மந்த்ரன் (மன்த்ரின் வடமொழி - மந்திரங்களை உச்சாடனம் செய்பவன்) என்றும் அழைக்கிறது.

சில சிறப்பு வித்தியாசங்களும் உண்டு. வட மொழியில் தேவா என்பது 'தேவன்' 'கடவுள்'. ஆனால் அவெஸ்த்தாவில் 'தேய்வா'என்பது 'அசுரன்'.நாஸத்யா என்பது வடமொழியில் தெய்வத்தன்மை,அவெஸ்த்தாவில் பேய்த்தன்மை.

பல கடவுளர்களின் பெயர்கள் இரண்டு இலக்கியத் திலும் காணக்கிடைக்கிறது. யமன் என்பது யமாஃ என வட மொழியிலும் யிமாஃ எனஅவெஸ்த்தாவிலும் உள்ளது. ஸேனா எனும் போர்ப்படை அவெஸ்த்தாவில் ஹேயின என்றுள்ளது.

அவஸ்த்தாவில் இந்திரன்,தேவா,நாஸத்யா முதலிய ரிக்வேதத்தில் உள்ள கடவுளர்கள் பெயர் உள்ளது; ஆனால் அவஸ்த்தா வில் இக்கடவுளர்கள் 'பேய்'என உருவகப் படுத்தப்பட்டுள்ளது.

ஸருதஷ்ரா சமயத்தின் சுயம்புவாக உருவான கடவுள் ஹஹீரமஸ்தா. (வடமொழியில் அஸீரமேதா) மேற் கூறியதிலிருந்தும், அவஸ்த்தா/ரிக்வேதம் குறித்த பல ஆய்வுகளிலிருந்தும் வேதநாகரிகத்தை சார்ந்த மக்களும் அவஸ்த்தா நாகரிகத்தை கொண்ட மக்களும் மிகமிக நெருக்கமாக உறவு உள்ளவர்களாகவே இருந்திருக்க வேண்டும் எனக்கருதலாம்.

வேதநாகரிகத்திற்கும்,இன்றைய இரான் துருக்கி பகுதியில் அன்று வாழ்ந்தவர்களுக்கும் கலாசார தொடர்ச்சி இருந்தது என்று கருத நம்மை தூண்டும் மேலும் ஓர் வலுவான ஆதாரம் உள்ளது. அது சுமார் கி.மு.1350 ல் மிட்டானியின் அரசனான மட்டிவாஸாவை ஹிட்டிடிஸின் அரசனான ஸீப்பில்லுலியும்மா தோற்கடித்த போது எழுதப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும். கியூனிபார்ம் எனப்படும் களிமண்ணில் இந்த ஒப்பந்தம் பொறிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த ஷரத்துக்கு அடியில் கடவுளர்களின் பெயர்கள் எழுதப்பட்டு இக் கடவுளர்களின் ஆணையாக ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் என இந்த ஆவணம் கூறுகிறது. முதலில் வென்றவர்களை ஹிட்டிடிகளது கடவுளர்கள் பட்டியலிடப் பட்டுள்ளனர். பின்னர் பட்டியலிடப்பட்டுள்ள மிட்டானி கடவுள்களில் ஐந்து வேதக்கடவுள்களும் உள்ளனர்- மித்ரா,வருண,இந்திர இரண்டு நாஸத்தியர்கள் (அஸ்வின் என்றும் இவை அழைக்கப்படும்).

இரண்டாவதாக பட்டியலிடப்பட்ட கடவுள்கள் போரில் தோற்றுவிட்ட மிட்டனிகளது கடவுளாகதான் இருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆக,இன்றைய இரான் பகுதியில்தான் இந்திரிக்வேதக் கடவுளர்கள் இட்டுக் கட்டப்பட்டிருக்கவேண்டும். பின்னர்,இந்தியாநோக்கி பரவிய கலாசாரம் இக்கடவுள் கோட்பாடுகளை உள் வாங்கிக்கொண்டு,மேலும் அதுவரை சிந்துநாகரிகத்தில் புழங்கிய பசுபதி போன்ற கடவுளர்களையும் ஏற்றுக் கொண்டு புதிய வேதமதமாக உருவாகியது எனக்கருதலாம்.

**தெனாலிராமனின் குதிரை**

தெனாலிராமன் கதையொன்று உண்டு. குதிரையை தத்ரூபமாக வரைபவருக்கு பரிசு என அரசர் அறிவிக்க தெனாலிராமனும் வரைந்து வைத்துக்கொண்டு காத்திருப்பான். அரசர் பார்வையிடவருவார்.தெனாலியின் படத்தைக்கண்டு திகைத்துவிடுவார். 'இதுஎன்ன', 'இதுவா அரசே குதிரையின் வால் 'என்பான் தெனாலி,சித்திரத்தில் உள்ள ஒரு கோட்டை சுட்டிக்காட்டி.

'அதுசரி குதிரை எங்கே'என்பார்அரசர்.'அதுவா அரசே சித்திரத்திற்கு அந்தப்புறம் உள்ளது'என்பான் தெனாலி.

இதைப்போலவேதான் சிந்து சமவெளியில் கிடைத்துள்ள சில உடைந்த முத்திரை வில்லைகளில் உள்ள ஒரு மிருகத்தின் பின்பாதி உடம்பைக்காட்டி 'இதுதான் குதிரையின் உருவம் ஆகவே சிந்துநாகரிகத்திலேயே குதிரை இருந்துள்ளது' என சங்பரிவாரைச் சார்ந்த என்.எஸ்.ராஜாராம் மற்றும் என்.ஜா.என்பார் வாதிடு கின்றனர். மைக்கேல்விட்செல் மற்றும் ஸ்டிவ்பஃர்மர் போன்றோர் இந்த வாதத்தைச் சந்திசிரிக்க வைத்துள்ளனர்.

'யூனிக்கார்ன்'எனப்படும் கற்பனைமிருகம் செதுக்கப்பட்ட வில்லைகள் சிந்துநாகரிகத்தில் மிகுதி. இந்த கற்பனை மிருகம் காண்டாமிருகத்தின் சாயல்எனவும் கருத்து உண்டு. இம்மிருகத்திற்கு ஒற்றைக்கொம்பு உண்டு.

புலி,காளை,மான்,யானை என பல விலங்குகள் வில்லைகளில் இருந்தாலும் குதிரைமட்டும் இல்லை. அது போலவே,பிற்கால சிந்துநாகரிக குடியிருப்புகளில் கிடைக்காதது மட்டுமில்லை வேறு எந்த இடத்திலும் குதிரையின் மண்பொம்மை கிடைக்கவில்லை என்பது தான் உண்மை. வேறுபல மிருகங்களின் உருவ பொம்மைகள் கிடைத்துள்ளன.

எனவே வேதங்கள் உருவானது இன்றைய இந்தியப் பகுதியில் அல்ல என்பதும் ஆரியர்களின் 'பித்ரு பூமி' இந்தியா அல்ல என்பதும் தெட்டத்தெளிவு.

சங்பரிவாரின் மதவெறிச்செயல்கள் இன்றைய இந்தியாவை வெட்கித்தலைகுனிய வைக்கிறது என்றால், இந்த 'மேதைகள்' வரலாறு என்றபெயரில் அவிழ்த்து விடும் புனை கதைகளோ நமது முற்காலத்தின் பெருமையையும் சீரழிக்கிறது.

www.padippakam.com







**தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் இசைக்கூறுகள்**

**முனைவர். அரிமளம் சு. பத்மநாபன்**

**விலை : ரூ. 95**

**வெளியீடு : இசைத் தென்றல்**
**14, மூன்றாவது குறுக்குத் தெரு**
**இராமன் நகர், (குறிஞ்சி நகர்)**
**லாசுப்பேட்டை, புதுச்சேரி - 605 008.**



**ஆம் நண்பர்களே அதுதான் நடந்தது.**

மகாதேவன் கவிதைத் தொகுப்பு

விலை ரூ.20

வெளியீடு : தமிழினி, சென்னை - 14.



நாடகங்கள் அர்த்தத்தைச் சார்ந்து இருக்கக்கூடாது என்றும் அனுபவத்தைச் சார்ந்து இருக்கவேண்டும் என்றும் நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்தக் கட்சிக்கு முருகபூபதி என்ற ஓர் ஆதரவாளர் கிடைத்திருக்கிறார்.

நாம் சங்கீதத்தை அர்த்தப்படுத்திக் கொள்வதில்லை, அனுபவிக்கிறோம். ஓவியத்தை அர்த்தப்படுத்திக் கொள்வதில்லை,அனுபவிக்கிறோம். சிற்பத்தை அர்த்தப் படுத்திக் கொள்வதில்லை, அனுபவிக்கிறோம்.வாழ்க்கையை அர்த்தப்படுத்திக் கொள்வதில்லை, வாழ்கிறோம். ஏனெனில் நாம் அர்த்தத்தைச் சார்ந்து,அர்த்தத்தைப் புரிந்து கொண்டு இந்த உலகிற்கு வரவில்லை. அர்த்தத்தைப் புரிந்து தமிழ்மொழி பேசும் ஒரு பிரதேசத்தில் பிறக்கவில்லை. நாம் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு இவ்வுலகிற்கு வந்திருப்போமானால் ஆங்கிலம் பேசும் ஒரு பிரதேசத்தை தேர்ந்தெடுத்திருப்போம் அல்லது ஆங்கிலம் பேசும் பெற்றோர்களை யாவது தேர்ந்தெடுத்திருப்போம். வேலை வாய்ப்புகள் அதிகம் உள்ள ஒரு பிரதேசம் நம் பிறப்பிடமாக இருந்திருக்கும். அர்த்தத்தை மறுத்துவிட்டு அனுபவத்தை ஆதரிக்க வேண்டும் என்று சொன்னாலும் அர்த்த மிருக்கிறது. அந்த அளவில்தான் நாம் செயல்படவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

- நா. முத்துசாமி

**கூந்தல் நகரம்** (நாடகத் தொகுப்பு)

**ச. முருகபூபதி**

**விலை : ரூ. 50**

**வெளியீடு : அனன்யா**
**8/37, பி.ஏ.ஒய். நகர்**
**குழந்தை இயேசு கோவில் அருகில்**
**புதுக்கோட்டை சாலை, தஞ்சாவூர் - 613 005.**

படிப்பகம்

www.padippakam.com



# எழுத்தாளனின் பிறப்பு

## தகழி

தமிழில் : **உதயசங்கர்**

**நான் எப்படியோ பார்ஸ்ட்பாரம் படிக்கும் போதி** விருந்தே ஒரு கவிஞனாகியிருந்தேன் என்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனால் உண்மை. ராமாயணம், பாரதம்,ஹாலாஸ்ய மகாத்மியம்,கிருஷ்ணகாதை,துள்ளல் கதைகள்,என்று எல்லாவற்றையும் என்னுடைய அப்பா பல தடவை என்னைப் படிக்கச் சொல்லியிருக்கிறார். அதன் மூலம்,'கேக', 'நாத'ஸ்லோகங்களும் 'பான'முதலான பல விருத்தங்களில் நிறையப் பாடல்களை எழுத முடிந்தது. எல்லாம் புராணக்கதைகளின் பாதிப்பினால் எழுதியது. இப்படியிருக்கும்போது எண்ணிலடங்காத தலைமுறை களுக்கு புரட்சிகர ஞானமும் உணர்ச்சியும் தந்த மலையாளத்தின் ஆதி மகாகவியாகிய - ஆசானின் கவிதைகள் என் கையில் கிடைத்தன. அந்தக் கவிஞனைப் போலவே தெய்வத்தை விட்டுவிட்டு மனிதனுடைய பிரச்னைகளைப் பற்றிக் கவிதைகள் எழுதும் முயற்சியில் நானும் ஈடுபட்டேன். 'துரவஸ்த'யும்,'லீலா'வும் படித்த போது சுற்றிலும் நடக்கிற ஏராளமான நிகழ்ச்சிகளை கவிதைக் கருப்பொருளாக்கலாமென்று நான் தெரிந்து கொண்டேன். கவிதைகள் புனையவேண்டும் என்றும் எனக்குத் தோன்றியது. அப்போது நான் ஃபோர்த் பாரத்தில் படித்துக் கொண்டிருந்தேன்.

அந்த வயதிற்கென்று சில விசேஷங்கள் உண்டு. ஒரு சிநேகிதி வேண்டுமென்று தோன்றும். அதைக் காதல் என்று சொல்லாதீர்கள். கூடப்படிக்கிற சில பெண்களுக்கு கடிதம் கொடுத்து கல்விநிலைய விதிமுறைகளை மீறிய குற்றத்திற்காக சஸ்பென்ஷனும் வாங்குகிற பருவம் அது. இன்றுள்ள நிலையான உறவின் சரித்திரத்தில் ஒரு காலகட்டம் அது. அதிலிலுள்ள பாலுணர்வுக்கவர்ச்சி ஒரு விசித்திரமான விஷயம்தான். அவளை வாழ்க்கைத் துணையாக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து அந்த உறவு உருவானது அல்ல. அதே நேரம் அவளோடு பல விஷயங்களும் பேசுவது உண்டு. அவளிடமிருந்து பல விஷயங்களும் கேட்பதும் உண்டு. பிரிந்திருக்க தோன்றுவதில்லை.

எனக்கு அப்படி ஒரு சிநேகிதி இருந்தாள். என்னுடைய வகுப்பில் படிக்கிற பெண். அவளுடைய மூத்த சகோதரிக்கு அந்தக்காலத்து ஒரு பத்திரிகை வெளி யீட்டோடு கொஞ்சம் தொடர்பிருந்தது. அதனால் அந்தப் பத்திரிகையின் எல்லாப் பிரதிகளையும் நான் வாசித்தேன். அதில் கதைகள் இருந்தன. இதற்கிடையில்தான், 'கதாகௌதுகம்' 'கதாகௌமுதி'போன்ற பத்திரிகை களுடைய பழைய பிரதிகளும் கிடைத்தன. சமதர்ஸி வெளியிட்ட 'சாகித்யோபகார'த்தில் கதைகளும் நன்றாக விருந்தன. இப்படி கதைகளின் மீது ஒரு ஈர்ப்பு தோன்றியது.

என்னுடைய முதல் கதை அன்று எழுதியது. அதற்கு நான் தலைப்பு வைத்தேன். என் சிநேகிதியின் பெயரை வைத்தேன். கதை எழுதி முடித்ததும் அதை என்னுடைய சிநேகிதியின் கையில் கொடுக்கவேண்டும் என்று தோன்றியது. விடுபட்ட பாடங்களை எழுதி முடிக்கிற மாதிரி நான் அவளுடைய 'நேச்சர்ஸ்டடி'நோட்புக்கை வாங்கி னேன். அதைத் திருப்பிக் கொடுக்கும்போது எடுக்க மறந்து போன மாதிரி அதில் இந்தக் கதையையும் வைத்திருந்தேன்.

எனக்குப் பயமாகிவிட்டது. அது ஒரு காதல் கதை. போச்சு,அவள் அதை ஹெட்மாஸ்டரிம் கொடுத்து விட்டாள். அவர் கொஞ்சங்கூட இரக்கமில்லாத பயங்கர மான ஆள். தமிழ் பிராமணர். போனவருடம் ஒரு பெண்ணுக்குக் கவிதை எழுதிக் கொடுத்ததற்காக ஒரு மாணவனை டிஸ்மிஸ் செய்தவர். இலக்கிய ரசனை யெல்லாம் அந்த ஹெட் மாஸ்டருக்கு ஒரு விஷயமல்ல.

ஆச்சு! அடுத்தநாள் ஸ்கூலுக்குப் போகும்போது வழக்கமாய் நாங்கள் சந்திக்கும் ஆளரவமற்ற இடத்தில் வைத்து வெட்கம் தொடரும் ஒரு புன்சிரிப்போடு அந்தக் காகிதங்களை என்னிடம் திருப்பித் தந்தாள். என் உடலில் உயிர் தங்கும்படியாக அருளினாள். இது உங்களுக்கு ஒன்றுமேயில்லாமலிருக்கலாம். ஆனால் என்னால் அதை மறக்கவே முடியாது. கதையின் தலைப்பிற்கு மேலே அழகிய

www.padippakam.com





கருத்த கையெழுத்தில், A Very good story. Congratulations என்று எழுதப்பட்டிருந்தது.


ஏராளமான கதைகளும், ஐந்தாறு நாவல்களும் எழுதிய பின்பும், பல முக்கியஸ்தர்களின் வாழ்த்துக்கள் கிடைத்தபிறகும், அந்த வாழ்த்து அளித்த துல்லியமான, கால காலத்திற்குமான புதிய ஆனந்தம் வேறெதிலும் கிடைக்க வில்லை. அந்த வரிகளை எத்தனைமுறை வாசித்தாலும் எனக்குப் போதவில்லை.

நான் ஆவேசத்தோடு கதைகள் எழுதினேன். முதலில் அந்தக்கதையும், அதன் தலைப்பிற்கு மேலேயிருந்த அந்த வாழ்த்தும் நான் கலியாணம் முடிக்கும்வரை என் அருகிலேயே இருந்தது. கலியாணத்திற்கப்புறம் அதைக் காணவில்லை.

அந்த சிநேகிதி இப்போது எங்கேயிருக்கிறாள் என்று கூட எனக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும் அவளுக்கு நான் நன்றி சொல்லவேண்டும். ஆனால் நானும் எழுத்தாளனாகி மலையாளிகளுக்கு செய்துள்ள துரோகத்திற்கு, என்னை முதல்முதல் கதை எழுதத்தூண்டிய அவள்தான் பதில் சொல்லவேண்டும்!

---

நன்றி - கிரந்தலோகம் ஜூலை 1949



## கோலம்

அடிக்கும் பனியிலும் அரையிருட்டிலும்
அள்ளித்தெளித்த விண்மீன்களாய் இவள்
காலடியில் புள்ளிகள்
என் மன ஆசைகளாய்
எத்தனை புள்ளிகள்
எல்லாவற்றையும் அடையவே
எத்தனை ப்ரயத்தனங்கள்
புள்ளிகளை சுற்றிச்சுழன்று
வளைத்து, வளைத்து
சிக்கித்தவித்து
ஆசைகளை அடையவென
அலைக்கழிந்து
இறுதிப்புள்ளிவரை அடைத்துவிட்ட
இறுமாப்பில் இடுப்பில் கைவைத்து
நிமிர்ந்தபோது தொடங்கிய
இடத்திலேயே மீண்டும் நான்
மனம் தோய்ந்து போனாலும்
மலர்ந்திருக்கும் கலை பார்த்து
மறுபடி முறுக்கேறும் மனசு

திலகபாமா

படிப்பகம்


www.padippakam.com



# குற்றப் பரம்பரைச் சட்டமும் கட்டாயக் கல்வியும்

பிரான்மலைக் கள்ளர்கள் மீது தொடுக்கப்பட்ட இரட்டைத் தாக்குதல்கள்

சு.வெங்கடேசன்




படிப்பகம்

www.padippakam.com



19 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஆங்கிலஅரசு தங்களுடைய நிர்வாக உத்தரவிற்கும், சட்டஒழுங்கிற்கும் கட்டுப்பட மறுத்த சில குறிப்பிட்ட இனக்குழு மக்களின்மீது தீவிரமான அடக்குமுறையை ஏவிவிடத் தயாரானது. இப்பகுதி மக்கள் அரசுக்கு எதிரான அரசியல் இயக்கங் களுடன் கலந்துவிடாமல் இருக்க அவர்களை கடுமையான முறையில் அடக்கி ஒடுக்கும் பணியினைச் ''சட்டப்படி'' செய்வதற்காகவே 1911 ஆம் ஆண்டு குற்றப்பரம்பரைச் சட்டத்தை (Criminal Tribes Act) அரசு அமுல்படுத்தியது.

1871ல் முதலில் குற்றப்பரம்பரைச் சட்டம் என்பது பிரிட்டிஷாரின் உத்தரவுபடி விவசாயத்தில் ஈடுபட மறுத்த பழங்குடி மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டது. 1897,1911,1923 ஆகிய ஆண்டுகளில் மும்முறை திருத்தி எழுதப்பட்ட இச்சட்டம் 1911வரை சென்னை மாகாணத்தில் அமுலாக்கப்படவில்லை. 1897ல் சென்னை அரசு இது தெற்கிற்கு பொருத்தமில்லாத சட்டம் என முடிவு செய்தது. இருந்தபோதிலும் மாகாணத்தில் 1911 ல் இது அறிமுகப் படுத்தப்பட்டது. எந்த குழுவோ, கூட்டமோ, இனமோ ஜாமீனில் வெளிவரமுடியாத குற்றங்களை தொடர்ச்சியாக திட்டமிட்ட முறையில் புரிந்தால் அதனை குற்றப்பரம்பரை என அறிவிக்கும் அதிகாரத்தை அரசுக்கு இச்சட்டம் வழங்கியது. ஒருமுறை அறிவிக்கப்பட்டுவிட்டால் அக்குழு வின் உறுப்பினர் இதனை எதிர்த்து நீதிமன்றங்களில் முறையிடமுடியாது.

உயர்ந்த கல்வி அறிவும் தேசாபிமானமும் படைத்த காங்கிரஸ் தலைவர்கள் அந்நிய அரசின் பிடியிலிருந்து விடுபட பிரயத்தனங்கள் செய்துவரும்போது அவர்களுடன் பழங்குடி மக்கள் கலந்து விட்டார்களானால் காங்கிரசை அடக்குவது முடியாத காரியமாகிவிடும். காங்கிரஸ் இயக்கமும் வலுவாகிவிடும் என்பதே வெள்ளையர் அரசின் அன்றைய பயம். எனவே காங்கிரஸ் பாசறைக்குள் பழங்குடி மக்கள் புகாவண்ணம் தடுக்கவே குற்றப்பரம்பரைச் சட்டத்தை வேலியாகப் போட்டனர் எனலாம்.

1901ஆம் ஆண்டு கணக்கெடுப்பு அறிக்கையில் பிரான்சிஸ் குறிப்பிடுகின்ற பொழுது ''கள்ளர், மறவர், அகமுடையார் ஆகிய சாதிகளைச் சேர்ந்தவர்களே தென்மாவட்டங்களில் நிகழும் குற்றங்களில் பெரும்பாலான வற்றிற்குக் காரணமானவர்கள். இது அவர்களுடைய மக்கள் தொகையின் எண்ணிக்கையின் விகிதத்தைக் காட்டிலும் மிகவும் அதிகமானதாக உள்ளது. 1897 ல் சிறைச்சாலை களின் மேற்பார்வையாளர்களின் முதல்வர் மதுரைச் சிறைச் சாலையில் உள்ள கைதிகளில் 42 சதவிகிதத்தினரும், பாளை யங்கோட்டைச் சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் 30 சதவிகிதத்தினரும், இந்த மூன்று சாதிகளுள் ஏதாவது ஒரு சாதியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர் எனக் கூறியுள்ளார். 1894 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் 137கால்நடைத் திருட்டுக்களை இம்மூன்று சாதிகளைச் சேர்ந்தவர்கள் நிகழ்த்தியிருக்க, மற்ற சாதியினர் 47 திருட்டுக்களை மட்டுமே நிகழ்த்தியுள்ளனர். இது இம்மூன்று சாதியினையும் சேர்ந்தவர்களுள் 1497 பேருக்கு ஒருவர் திருட்டு நிகழ்த்தியுள்ளதாக ஆகும். இதற்கு மாறாக மற்றச் சாதியார் களுள் 37,380 பேருக்கு ஒருவரே திருட்டு நிகழ்த்தியவர் களாக உள்ளனர். திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களிலும் இவர்களைப் பற்றியதான குற்றச்செயல் களின் புள்ளி விவரங்கள் மோசமானவை யாகவே உள்ளன.''

மேற்படியான காரணங்களை மையப்படுத்தி சென்னை மாகாணத்திலேயே, மதுரை மாவட்டத்தில்தான், குற்றத்தொழில் புரிபவர்கள் அதிகமுள்ளனர் என்றும், எனவே கள்ளர், மறவர், அகமுடையார், குறவர், ஒட்டர், வளையர், ஆகிய ஜாதியினரை, குற்றப்பரம்பரையினர் என்று அரசு ஆணைப் பிறப்பித்தது. (Madurai Dist.Gazetteers; பக்.215-216) 'குற்றத்தொழில் புரிபவர்களைத் தண்டித்து திருத்துவது' என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட இச்சட்டம், செயல்படுத்தப்பட்டவிதத்தைப் பார்க்கிற பொழுது, இதன் உண்மையான நோக்கம் அதுவல்ல என்பது வெளிப்படையாக தெரிகிறது.

ஆறு சாதியினர் மீது இச்சட்டம் போடப்பட்டிருந் தாலும், நடைமுறையில் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டவர்களில் பெரும்பான்மையோர் கள்ளர்கள் என்று அழைக்கப்படும் பிரான்மலை நாட்டு இந்திரகுல கள்ளர் களேயாவர். மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, திருமங்கலம் தாலுகா பகுதிகளில் வாழ்ந்துவந்த இந்தக் கள்ளர்இன மக்களின் மீது ஆங்கிலஅரசு குற்றப்பரம்பரையினர் சட்டத் தினை மிகக் கொடுமையாக அமுல்படுத்தியதற்கான காரணம் என்ன? சி.டி.ஆக்ட். கள்ளர் இன மக்களை நோக்கியே பிரதானமாக பிரயோகிக்கப்பட்டதற்கான பின்னணி என்ன என்பதை நாம் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

பொதுவாக, வரலாறு நெடுகிலும் பார்க்கிறபொழுது, இவ்வினக்குழு மக்கள் மதுரையை ஆட்சிசெய்த எந்த ஆட்சி யாளர்களுக்கும் இணங்கி, கட்டுப்பட்டு, கப்பம் செலுத்தி

படிப்பகம்

www.padippakam.com



வாழ்ந்ததாக எந்தக் குறிப்பும் இல்லை. அதேபோன்று, 14,15,16 ஆம் நூற்றாண்டு மதுரை வரலாறும்,குறிப்பாக நாயக்கர்கள் ஆட்சிக்கால வரலாறும் மேற்சொன்ன செய்தியையே உறுதிப்படுத்துகின்றன. மதுரைவீரன் கதை போன்ற கதைப்பாடல்களில் வரும் கள்ளர் பற்றிய செய்திகள் அனைவரும் அறிந்ததே. 17 ஆம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் படைகள் மதுரையையும்,தென் தமிழகத்தையும் கைப்பற்றி ஆட்சியை நிலைநிறுத்திய பொழுது,பிரான்மலைக் கள்ளர்கள் செயல்பட்ட விதம் குறித்து கீழ்க்கண்ட சில தகவல்களை நாம் உதாரணங்களாக எடுத்துக்கொள்ளலாம்.

''Madura Country By Nelson Page 274 ல். ஆங்கிலத் தளபதி ஹெரனைப் பற்றிக் குறிப்பிடுகையில் 1755 ஆம் ஆண்டு மே மாதம் 28ந்தேதி திருச்சிராப்பள்ளிக்கு போகும் வழியில் கள்ளர்கள் படை சூழ்ந்துகொண்டு அவனது படையை நிர்மூலமாக்கிய செய்தியை குறிப்பிடுகின்றது. மதுரை ஜில்லாக் கெஜட்டியர் பக்கம் 88,286 ல் கள்ளர்கள் கர்னல் ஹெரனையும் அவன் 1500 பேர் கொண்ட குதிரைப் படைகளையும் சின்னாப் பின்னப்படுத்தினர் என்று கூறுகிறது.

1755 மதுரை கெசட்டீயர் - கள்ளர் தலைவர்கள் ஊர் ஒப்பந்தம் செய்து தீர்வை செலுத்தக்கூடாது என்று சாதிக் கட்டுப்பாடு செய்து வரிகொடா இயக்கம் பிரகடனம் செய்தார்கள் என்கிறது காங்கிரஸ் இயக்கம் தோன்றாததற்கு முன் இலண்டனில் உள்ள இந்திய வரிப்பட இலாகாவில் உள்ள நூலொன்றில் பி.27 எம்.2 என்பதால் கள்ளர்களின் வரிகொடாமை குறிப்பிடப்பட்டுள்ளது.

யூசுப்கான் சென்னை கவர்னருக்கு எழுதிய கடிதத்தில் 'கள்ளர்கள் சாதாரண மனிதரல்ல,ராட்சஸ சுபாவமுடையவர்கள்,யுத்தத்தில் இவர்கள் தங்கள் உயிரை மதியாது எதிரியின் மீது பாய்ந்துஅவர்களுக்குச் சிங்கச்சொப்பனம் போல் விளங்கும்,மனித சக்திக்கு மேற்பட்ட வீரர்கள்'என்று குறிப்பிடுகின்றனர்.''

கள்ளர்களைப்பற்றி 18ம் நூற்றாண்டின தொடக்கத்தில் 1817 ல் டி.டர்ன்புல் எழுதியுள்ள குறிப்புகளில் சில பின்வருமாறு 'கள்ளர்கள் பொதுவாக ஈட்டி எறிவதிலும் வளரி எனப்படும் வளைத்தடியினை எறிவதிலும் திறமைமிக்க அஞ்சா நெஞ்சர்கள். இந்தப் போர்க்கருவி இச்சாதியாரிடையே பெருவழக்கினதான ஒன்றாகும். சுமார் 30 அங்குலம் உள்ள வளைவுடையதான் ஒரு கருவியாகும் இது.

பண்ணை அடிமைமுறை கள்ளர்களிடையே நிலவிய நீண்டகாலப் பகுதியில் எந்தக் காரணத்தின் அடிப்படையிலும் அப்போதைய அரசு தங்கள் மீது ஆதிக்கம் செலுத்த கள்ளர்கள் அனுமதிக்கவில்லை. அரசுக்குரிய வரியினைச் செலுத்தும்படியாக கேட்டால் கள்ளர்கள் மிக ஆணவத்துடன் 'வானம் பொழியுது,பூமி விளையுது,எங்கள் கால்நடை ஏர் உழுகின்றது நாங்கள் நிலத்தில் உழைத்து அதனைப் பண்படுத்துகிறோம். நிலமை அப்படிஇருக்க அதன் விளைவுகளை உழைப்பவர் மட்டும்தானே அனுபவிக்க வேண்டும்? எங்களோடு ஒத்த ஒருத்தனைப் பணிந்து அவனுக்கு நாங்கள் வரி செலுத்தவேண்டும் எனக் கூறுவதேன்? எனக் கேட்பர்.

கிழக்கிந்தியக் கம்பெனியரால் பதினெட்டாம் நூற்றாண்டில் காப்டன் ரம்லே (Captain Rumley) கள்ளர்களின் கிளர்ச்சியை அடக்குவதற்காக அனுப்பப்பட்டான்.

திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற போரின்போது கிளைவ்,ஸ்டிரிங்கர் லாரன்ஸ் ஆகிய இருவரின் குதிரைகளையும் இருகள்ளர் சகோதரர்கள் திருடிச்சென்றுவிட்டனர் என்ற செய்தி பதிவுகளில் உள்ளது.''

இவ்வாறாக,ஆட்சியாளர்களுக்கு எதிராக,ஆதிக்கத்திற்கு அடங்க மறுக்கிற கலகக்காரர்களாகவே,இருந்து வந்துள்ளனர் பிரான்மலை நாட்டுக் கள்ளர்கள். இவர்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிரான அரசியல் இயக்கங்களுடன் கலந்துவிடாமல் இருக்க,இவர்களை தனிமைப்படுத்தி அடக்கி ஒடுக்கவே 'குற்றப்பரம்பரையினர் சட்டம்' பயன்படுத்தப்பட்டது. 1911 ஆம் ஆண்டு இச்சட்டம் கொண்டு வரப்பட்டிருந்தாலும் 1914 ம் ஆண்டுதான் இது மதுரை மாவட்டத்தை நோக்கி பாய ஆரம்பித்தது.

அதன்படி, 10-1-A, 11-1-B, ஆகிய இரண்டு ரிஜிஸ்தர்களிலும் குற்றப்பரம்பரை சட்டத்திற்குட்பட்டவர்களை பதிவு செய்யும் பணி துவங்கியது. முதலில் 'கேடிகள்' என்று காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்டவர்கள் மட்டும் இச்சட்டத்தின்கீழும் பதிவு செய்யப்பட்டார்கள். பின்னால் அனைவரையும் இச்சட்டத்தின் கீழ் அரசு பதிந்தது.


அதன்படி,11 வயதுக்கு மேற்பட்ட கள்ளர் இன ஆண்கள் அனைவரையும் கேடிகள் பட்டியலில் பதிவு செய்த முதல் கிராமம் 'கீழக்குயில்குடி'. அதன் பிறகே G.O. No 2233 Judicial 16 th Sept 1915. இச்சட்டம் மேலஉரப்பனூர், பூசலப் புரம்,சொரிக்கான்பட்டி போன்ற கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது.

www.padippakam.com



11 வயதுக்கு மேற்பட்ட கள்ளர் இன ஆண்கள் அனை வரையும் இரவு முழுவதும் போலீஸ் ஸ்டேஷனில் படுக்க வைக்கிற ரேகைச் சட்டத்தில் பதிவதென்பது சாதாரண காரியமல்ல. அரசு நிர்வாகமும்,அதிகாரிகளும் கடும் சவால் களை சந்திக்க வேண்டியிருந்தது. இந்நிலையில் 1919 ஆம் ஆண்டு மதுரை ஜில்லா போலீஸ் சூப்ரெண்டன்டாக இருந்த 'லவ்லக்'என்ற ஆங்கிலேயன் இச்சட்டத்தை அமுல்படுத்தும் பொழுது கையாளவேண்டிய தந்திரங்கள் குறித்து அரசுக்கு ஒரு அறிக்கை கொடுத்துள்ளான். அதனடிப்படையில்தான் கள்ளர் இன மக்களின் மீது இச்சட்டத்தினை அரசு பிரயோகப் படுத்தியது. அந்த 'லவ்லக்'அறிக்கை அமுலில் இருக்கும் போதே சீர்திருத்த நடவடிக்கைகளும் இளம் தலைமுறை யினருக்கு கட்டாயக் கல்வியும் தந்தாகவேண்டும் என வலியுறுத்தியது.

'லவ்லக்'அறிக்கை கேட்டுக் கொண்டதற்கிணங்க, மதுரை,இராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள வயதுவந்த கள்ளர் இன மக்கள் அனைவரையும் ரேகைச் சட்டத்தின் கீழ் பதிய 27.4.1918 ல் மாகாண அரசு உத்தரவு பிறப்பித்தது. இதன்படி பதிவுப் பணியினையும் சட்டப்பணியினையும் நிறைவேற்ற 1918 கடைசியில்,மதுரையில் தனி நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டது.


No. 1

ரிப்போர்ட்டின் நகல்.

Date

கள்ளர் இன மக்கள் எல்லோரையும் ரேகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யும் பணியினை திருமங்கலம் தாலுகாவில் குறிப்பிட்ட கிராமங்களில் அரசு துவக்கியது. அப்படி துவக்கப்பட்ட கிராமத்தில் ஒன்றுதான் 'பெருங்காம நல்லூர்'. கள்ளர் இனத்தின் பூர்வீகக் கடவுளான பேகாமன் (பெருங்காமன்) பெயரைத் தாங்கியுள்ள கிராமம். கிராமத்தில் உள்ள அனைவரையும் ரேகைச் சட்டத்தில் வெள்ளையன் பதிவு செய்யப்போகிறான் என்ற செய்தி கிராமத்திற்கு தெரிந்தது முதல் இந்த வன்முறைச் சட்டத்தை புறக்கணிக்க மக்கள் தயாரானார்கள். ரேகைச் சட்டத்தில் பதிய முடியாது என அறிவித்தனர். இதனையொட்டி கொடுமையான வன்முறைக்கு அரசு தயாரானது. முதல்நாள் இரவே (2.4.1920) போலீஸ் படை கிராமம் முழுவதையும் சுற்றி வளைத்தது. அடுத்தநாள் (3.4.1920) மந்தையில் வைக்கப்பட்ட ரிஜீஸ்தாரில் தானே முன்வந்து ரேகையை பதியுமாறு அறிவிக்கப்பட்டது. பதிய மறுத்த மக்கள் கிளர்ந் தெழுந்தபொழுது சுட்டுத்தள்ளுமாறு ஆணை பிறப்பிக்கவே 16ஆண்களும் பெண்களும் மந்தை திடலிலே படுகொலை செய்யப்பட்டார்கள். குற்றப்பரம்பரைச் சட்டத்திற்கு எதிராக நடந்த இந்த எழுச்சியால் 17 பேர் களப்பலி கண்டனர். கிராமத்தைச் சேர்ந்த சுமார் 700 க்கும் அதிகமானோர் சிறைச் சாலைக்குள் அடைக்கப்பட்டனர். இந்தத் தகவல்கள் பிற கள்ளர் நாட்டையும் எட்டியபொழுது இப்பகுதி கள்ளர் இன மக்களிடையே பெரும் கொந்தளிப்பும்,அதை அடக்க அரசின் காட்டுமிராண்டித் தனமான அடக்குமுறையும் அரங்கேறியது. பெருங்காமநல்லூர் படுகொலையை தொடர்ந்து கொடுமையான வன்முறையின் மூலம் 19.11.1920 க்குள் 20896 பேரை ரேகைச் சட்டத்தின் கீழ் அரசு பதிவு செய்தது.

இந்தப் பின்னணியில் 6.11.1920 ல் கள்ளர் சமூக அபிவிருத்தி அதிகாரியாக 'ராவ்பகதூர்'A.K.ராஜாஐயர் என்பவரை அரசு நியமித்தது. ஜில்லா போலீஸ் சூப்ரடெண்டு அந்தஸ்து உள்ள இந்தப்பதவி,போலீஸ் பணியினையும், சீர்திருத்தப் பணியினையும் இணைந்து செய்ய வேண்டிய பதவியாகும். அதன்படி A.K.ராஜாஐயர் தேர்ந்த ராஜ தந்திரத்துடன் தனது பணியினைத் துவக்கினார். 'குற்றப் பரம்பரை சட்டத்தை'அமுல்படுத்தியதில் அரசின் பார்வை யில் மிகப்பெரும் வெற்றியை ஏற்படுத்தியது இவரே. இதனாலேயே அரசு இவருக்கு 'ராவ்பகதூர்' பட்டத்தினை வழங்கியது. இவர் 1920 களில் இச்சட்டம் அமுலாக்கம் தொடர்பாக அரசுக்கு சில ஆலோசனைகளை வழங்கினார். ''அடக்குமுறையின் மூலம் மட்டும் கள்ளர்

www.padippakam.com



இனமக்களை அடிமைப்படுத்த முடியாது. அவர்களுக்குக் 'கல்வி' அளிப்பதன் மூலமே அவர்களது போர்க்குணத்தை மட்டுப் படுத்தி மழுங்கடிக்கமுடியும்''

எனவே,கள்ளர் இன மக்கள் மத்தியில் 'கட்டாய ஆரம்பக் கல்வி'யை அமுல்படுத்த அரசு உத்தரவிட்டது. (இந்திய அரசியல் வரலாற்றில் 'கட்டாய ஆரம்பக்கல்வி' அமுலாக்கப்பட்டதென்பது அனேகமாக முதலும் கடைசியும் இதுவே) அதனடிப்படையில் 5 வயது முதல் 12 வயது வரையிலான ஆண்,பெண்,குழந்தைகள் அனைவரும் கண்டிப்பாக பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்று உத்தரவாகியது.

பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாத பெற்றோர்கள் குற்றப்பரம்பரையினர் சட்டத்தின் கீழ் காவல் துறையினரால் உடனடியாக தண்டிக்கப்படுவர்.

பள்ளிக்கூடத்திற்கு பிள்ளைகள் சரியாக வருவதை பஞ்சாயத்தார்கள் கவனிக்கவில்லையென்றால்,அந்தப் பஞ்சாயத்தார்களும் குற்றப்பரம்பரையினர் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவர்.

கள்ளர் சமூகத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் காவல்துறையே செய்ததால்,ஆசிரியர்களும் இந்தத் துறையில் பயிற்சி பெற்றவர்களாகவே நியமிக்கப்பட்டனர். பிள்ளைகளுக்கு காயம் ஏற்படாமல்,இரத்தம் வராமல் அடிப்பது உள்ளிட்ட பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.


பள்ளிக்கூடம் வராத பிள்ளைகளின் கழுத்திலும், காலிலும் 'கொண்டிக்கட்டை'போடும்முறை அமுல்படுத்தப் பட்டுள்ளது. இந்தக் கொடிய செயலை ஆசிரியரே போட்டும்,அவிழ்த்தும் விட்டிருக்கிறார்.

'கட்டாய இலவச ஆரம்பக் கல்வியை'இவ்வளவு கொடிய விதிமுறைகளோடு அரசு அமுல்படுத்த துவங்கியது. அதன்படி கள்ளர் கிராமங்கள்தோறும்,ஆண், பெண் பிள்ளைகளுக்கான பள்ளிக்கூடங்கள் திறப்பது, தேவை உள்ள இடங்களில் ஹாஸ்டல்கள் திறப்பது,உணவு, உடைகளை இலவசமாக வழங்குவது,சாரணர் பயிற்சி வழங்குவது ஆகியவற்றில் அரசு தீவிரம் காட்டியது. இந்த அடிப்படையில் முதல் ஆண்டிலேயே ஆண் பிள்ளைகளுக் கான 148 பாடசாலைகளும்,பெண் பிள்ளைகளுக்கான 16 பாடசாலைகளுமாக மொத்தம் 164 பாடசாலைகளை கள்ளர் கிராமங்களில் அரசு துவக்கியது. சாரணர் பயிற்சி முகாம் உசிலம்பட்டியிலும் கீழக்குடியிலும் நடத்தப்பட்டுள்ளது.

இக்கல்விமுறை அமுல்படுத்தப்பட்ட 27 ஆண்டு களில் ஏறக்குறைய 30,000 மாணவர்களை அந்த பாட சாலைகள் சந்தித்துள்ளன. இது குறிப்பிடத் தகுந்த விளைவு களை ஏற்படுத்தவே செய்தது. (இங்கு பயன்படுத்தப்பட்ட பாடத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை)

நாடெங்கும் 'இலவச ஆரம்பக்கல்வி'கொண்டுவர எவ்வளவோ குரல் கொடுத்தும் செவி சாய்க்காத அரசு, குற்றப்பரம்பரை சட்டத்திற்கு உட்பட்டவர்களுக்கு 'கட்டாய இலவசக்கல்வி'கொண்டு வந்ததற்கான காரணம் என்ன என்று யோசித்தால்,கிடைக்கிற விடை 'கல்வியின் மூலம் ஆட்சியாளர்களுக்கு கிடைத்த அரசியல் லாபமே'.

ஒரு குறிப்பிட்ட இனத்தில் பிறந்தாலே அவன் குற்றவாளி எனச் சொல்லப்படும்,பிறப்பின் அடிப்படை யிலான நவீன ஒடுக்குமுறையை கொண்டுவந்தது ஆங்கில அரசு. இந்த ஒடுக்குமுறையை ஸ்தாபிக்க கருத்தியல் வடிவமைப்புக்காக கல்வியை பிரதானமாக பயன்படுத்தியது. போர்க்குணத்தை சிந்தனைகளில் இருந்து வெட்டி எரியும் விஷக்கத்தியாக கல்விச்சாலைகளை மாற்றியது.



படிப்பகம்

www.padippakam.com



கள்ளர் கிராமங்களில், கிராமக் கோர்ட்டும், மணிப் படுக்கைத் திண்ணைகளும் ஏற்படுத்திய விளைவுகளுக்கு கொஞ்சமும் குறைவில்லாத விளைவுகளை 'கல்விக் கூடங்கள்' ஏற்படுத்தின.

தன்னுடைய ஆதிக்கத்திற்கும், அதிகாரத்திற்கும் அடங்க மறுத்த மக்களின் மீது வன்முறையின் மூலமான கல்வியையும், கல்வியின் வன்முறையையும் திறம்பட செலுத்தியது வெள்ளைஅரசு.

மக்களை 'வசக்கி ஒடுக்கும் கருவியாக' கல்வி பயன் படுத்தப்பட்டதை குற்றப்பரம்பரையினர் சட்டம் பிரயோ கிக்கப்பட்ட விதத்தின் மூலம் அப்பட்டமாக பார்க்க முடியும்.

குடிநீர் கூட கிடைக்காத கிராமத்தில் பள்ளிக்கூடம் கட்டப்பட்டதும், சாலை வசதிகளே இல்லாத கிராமத்தில் கவர்னர் வந்து பள்ளிக்கூடத்தை திறந்து வைத்ததும் பிள்ளைகள் அனைவரும் பள்ளக்கூடத்திற்கு கட்டாயம் வந்தே தீரவேண்டுமென விதி செய்ததும், வராத பிள்ளை களுக்கு கொடுமையான தண்டனை வழங்கப்பட்டதும் குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து விலக்கு கேட்டு கவர்னருக்கு மனு கொடுப்பவர்கள், நாங்கள் பள்ளிக்கூடத் திற்கு பிள்ளைகளை ஒழுங்காக அனுப்புகிறோம், பள்ளிக் கூடம் இல்லாத ஊரில் கிராமத்தின் சார்பில் நாங்களே பள்ளிக்கூடத்தை உருவாக்கிக் கொள்கிறோம் என வாக்குறுதி கொடுப்பதும், காவல்துறையே பள்ளிக்கூடத்தை நிர்வகிப்பதுமான, செய்திகள் எல்லாம் நமக்கு உணர்த்துகிற உண்மை ''கல்விச்சாலைகள் அடக்குமுறையின் மையப் புள்ளியாக செயல்படுத்தப்பட்டுள்ளன'' என்பதுதான்.

இன்றும்கூட ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிக்காக உழைக்கின்ற இயக்கங்கள் கல்விச்சாலைகளில் மக்கள் ''தயாரிக்கப்படும்'' விதம் குறித்தும் பாடத்திட்டங்கள் குறித்தும் கற்பித்தல் முறை குறித்தும் அக்கறை செலுத்த வேண்டும். பெருவாரியான மக்கள் தங்களை அடிமைகள் என்ற ஒப்புதலை மனப்பூர்வமாகத் தருமாறு தயாரிக்கும் தொழிற்சாலைகளான கல்விச்சாலைகளை இயக்கங்கள் குறி வைத்தாக வேண்டும்.

(விரைவில் வெளிவர இருக்கும் சு.வெங்கடேசன் எழுதிய ''கலாச்சார அரசியல்'' எனும் நூலிலிருந்து.....)

**செத்தவர்களை**
**ஏமாற்றியவர்களைப்**
**பற்றிய செய்திகள்**

1.

மரித்தவர்களை
தொடர்ந்து சாகப்பண்ணும் பொருட்டு
முன்பு உயிரோடிருந்த அவர்களை
நினைவிலிருந்து துரத்துகிறோம்

களிகூர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும்
நம்மையே நாம் காட்டிக்கொடுத்துவிட்டோம்

சிநேகிக்கப்பட்டவர்கள் அகாலமடையும்போது
நமது குரல்வளையை நசுக்கிக் கொல்லும்படி
கெஞ்சித்திருந்திருக்கலாம்

நம்முடைய பிணத்துக்கு
நாம் பயப்படுகிறோம்

தற்கொலை செய்துகொண்டவர்களை
வீரர்களென்று ஒத்துக்கொள்வதற்கு
தயங்குகிறோம்

2.

இப்போது இரத்தவோட்டம் நிறைந்த
நம் பிணத்துக்கு முத்தம் வைக்கிறார்கள்
அப்பாவிகள்.

***பாலைநிலவன்***

www.padippakam.com



# அரைச்சண்டியர்

**எஸ்.இலட்சுமணப்பெருமாள்**



பேராச்சி புருஷ்

தியேட்டருக்கு முன்னாடி வேப்பமரத்துக்கு கீழ் உட்கார்ந்திருந்தான் சாவண்ணா. கைலியும் முழங்கை வரைக்கு வெள்ளை சட்டையை ஏத்தி மடிச்சி விட்டிருப்பான். கணுக்கால் முழங்கால் முழங்கையெல்லாம் மீன்செதிலை ஒட்டவச்ச மாதிரி புண் வந்து ஆறாமல் காய்ப்பேறிப் போயிருந்தது. குடிச்சிட்டு தினசரி எங்க யாவது வம்பிழுத்து அடிவாங்கி காயப்படலேன்னா அவனுக்கு அன்னைக்கு விடிஞ்ச மாதிரியே இருக்காது. சட்டையை கைலியை கழற்றுனா பூராம் அந்த விழுப்புண்கள் தான்.

www.padippakam.com



புண்ணுல ஒட்டுன ஈயை ஒண்ணுகூட தப்பீராம ரெண்டு கையாலயும் 'டப் டப்' புன்னு அடிச்சு உள்ளங்கையை பாத்து 'சோலி முடிஞ்சிருச்சி'ன்னு உறுதி பண்ணீட்டு கீழே உதுத்துக்கிட்டிருந்தான். ராத்திரி ஏத்துன ஏத்துல நிதானமில்லாம எங்கெங்கே போயி அலஞ்சி இங்கவந்து விழுந்தானோ தலையெல்லாம் மண்ணு உடம்பெல்லாம் புழுதி வெள்ளச்சட்டையா இது! லாண்டரி தெறக்கவும் சட்டைய மாத்தனும். என்ன துட்டா தரப்போறான். துட்டுக்கேட்டுட்டு அவன் இங்க கடை வக்கெலையா? நல்லா வெள்ள வெயில் அடிக்கிற வரைக்கும் கிடந்து இப்பத்தான் முழிப்பு தட்டுனது. எந்திரிச்சதும் 'டப் டப்'புன்னு வழக்கம் போல் காலை வணக்கம் ஆரம்பிச்சிட்டான்.

வகுறு பண்ற மொரடைப் பாத்தா ராத்திரியே ஒண்ணும் இரை எடுத்தமாதிரி தெரியல. எந்திரிச்சி நெளிச்சிவிட்டான். சுத்து முத்தும் பார்த்தான். 'ம்....எப்படியும் ஒரு அணையெ போட்டு வக்கெணுமே'வயித்த தடவிக்கொடுத்த மட்டுல மெல்ல நடந்தான். பத்துமணி ஆட்டத்துக்கு ஒத்த ஆளு வரக்காணும். வால்போஸ்டர பாத் தான். பழைய படம் போலுக்கு. 'படம் போட்டுருக்காம்பாரு லட்சணமா'ன்னு மொணங்கிகிட்டே பொம்பளயாளுக கவுண்டர் பக்கம் வந்தான். ஒண்ணு ரெண்டு பொம்பளெக டிக்கட் எடுத்து உள்ளபோறத கூர்மையா பாத்துக்கிட்டிருந்தான்.

'அப்படி'கழுதைகள் அவன் கண்ணுக்கு தப்பவே முடியாது. தலை வாரி யிருக்கிற சைசு,சேலை கட்டுமானம்,கையில் வச்சிருக்கிற துண்டு. வாயில பான்பராக் ஒதுக்கி ஒரு சைஸான நடை. அதுலெ கண்டுபிடிச்சிருவான். ம்ஹூம்.....ஒண்ணுங் காணோம். 'அதுகளும் நம்மள கணக்கா சாமக்கோடாங்கி. நாம ரெண்டு தண்ணிக்கு திரிஞ்ச மாதிரி அதுகளும் ரெண்டு சம்பாரிக்க விடிய விடிய அலஞ்சிட்டு நம்மள கணக்கவே இன்னுந்தூங்கும். அவனா சமாதானம் பண்ணிக்கிட்டான். எப்படியும் பசியாத்தனுமே.

இப்படிக் கூடியிருக்கிற இட்லிக்கடையில பூராம் கூடுன மட்டும் கடன் சொல்லி யாச்சி. அரட்டி உருட்டி சாப்டணும்னா சாப்டலாம். இங்ஙனக்குள்ள அது வேண்டாம். ஏன்னா போலீஸ் கீலீஸ்னு ரைடு வரும்போது பொசுக்குன்னு இந்தக் கடைகள்லதான் நொழயணும் சே. இப்படி நேரத்துலதான் வீட்டோட அருமை தெரியுது. 'சும்மா வீட்டோட கிடைய்யா நா ஒழச்சி ஒனக்கு வேணும்கிறத செய்யுறேன்னு'தான் அவ சொல்றா. 'தினோமும் வம்பு வழக்கு வாய்தான்னு ரூபா ரூபான்னு அரியா அரிச்சா இங்க என்ன மரத்துல காய்க்கா'அப்பனும் ஆத்தாளும் தலையில அடிக்காத நாளில்லெ. காலையில எந்திரிச்சதும் புத்தி நல்லாயிருக்கு. வீட்டுக்குப் போகணும், அவ கையால சாப்புடணும். பயலோட ரெண்டு வாக்கொடுக்கணும் அப்படியே புஞ்சைப்பக்கம் போய் பெருசுக ரெண்டு பேருக்கும் ஒத்தாசையா இருக்கணும்னு. நேரமாக ஆக புத்தி தடுமாறிருதே. சரி இன்னிக்கு எப்படியும் கிளம்பிரணும். பய அன்னிக்கே கேட்டான். 'யய்யா வரும்போது ஒரு வாய்ப்பாடு வாங்கியாருவி யான்னு'ஒரு மாசமாச்சி எவ்வளவு துட்டு பொழங்கிச்சி.

அந்தா சுப்பையன் வந்துட்டான். புல்லுக்கட்ட சைக்கிள்ல வச்சி இழுக்கமுடியாம கட்டி இழுத்துட்டு வர்றான். சாவண்ணா ஓடிப்போய் கேரியரை தாங்கி லப்பவிடாமல் பிடிச்சிக்கிட்டே போனான். கரைக்கு கீழே இறங்குனதும் வேலி மரங்களுக்கு நடுவிலே இருந்த குட்டிச்சுவருக்குள்ளே புல்லுக்கட்டை எறக்கமுடியாம எறக்கி கட்டை வேகமாகப் பிரிச்சான் சாவண்ணா. சுப்பையன் கேரியரிலே கயித்தை சுத்திக் கிட்டே சொன்னான். 'லே சாவண்ணா'ஒன்னால எனக்கு ரொம்ப வியாபாரம் குறையு தப்பா'சாவண்ணா அதை காதுலெயே வாங்கிக்கிடலை. புல்லுக்கட்டுக்குள்ளயிருந்து பெரிய பன்னியை இழுப்பதைப் போல சாராயம் ரொப்பிய கார் டியூப்பை சிரமப்பட்டு இழுத்து பிரிச்சி அதை வரிசையாய் பிளாஸ்டிக் கேன்களில் மளமளன்னு அடைக்க ஆரம்பிச்சான்.

'பொத்தையம்பட்டி சரக்கா ஆலம்பட்டி சரக்கா?'சாராயநெடி மூக்கைப் பிளக்க, கேனில் பிடித்தவாறே முகத்தை திருப்பி கேட்டான்.

'அந்த மயிரெல்லாம் இருக்கட்டும். குடிக்க வர்றவன்ட்டயெல்லாம் 'ஒங் கணக்குல எனக்கொரு அரைகிளாஸ் வாங்கிக்கொடு'ன்னு வர்ற வாடிக்கைகாரன் கிட்டே கேட்கிறே'. இப்ப அவன்லாம் இங்க வர யோசிக்கிறான். சுப்பையன்கிட்டெ போனா சாவண்ணாவுக்கு அரைகிளாஸ் வாங்கித்தரணும் கிழக்க போயிருவோம்னு ஆளுக வரத்து கம்மியாயி வாடிக்கை குறைஞ்சு போச்சு இன்னும் உனக்கு தாட்சண்யம் கிடையாது. நீயி கிராக்கிகளை பிடிச்சி கொண்டுவந்தது போதும். ஒஞ் சோலி எதுவோ அதப்பாத்துட்டுப் போ.

'சுப்பையண்ணே சுப்பையண்ணே நா ஒங்க வியாபாரத்துக்கு எவ்வளவு ஒத்தாசை பண்றேன். ரெயில்வே கேட் சாராயம் புளிக்கும். ஒப்பாச்சி சரக்கு உள்ள எறங்கையிலேயே ஓங்கரிக்கும். பஸ்ஸ்டாண்டு சரக்கு முறுகி போதையே இருக்காது. சுப்பையன் சரக்குதான் சூப்பர்னு சொல்லி ஆளுகள கொண்டுவந்து விடுறேன். அவங்களா பிரியப்பட்டு வாங்கித்தாரான். சரிண்ணே இனிமே அப்படி

www.padippakam.com



யாரும் பிராது சொன்னா செருப்புட்டு அடிண்ணே பத்துக்கிடுதேன்.

இவன் கொஞ்சமும் லொங்காத மூதேவி என்று முடிவு கட்டிய சுப்பையன் பேச்சை சுருக்கினான். 'இந்தா இந்தா ரெண்டு கிளாஸப்போடு'.வியாபாரத்துக்கு இடைஞ்சல் இல்லாமப் பாத்துக்கோ வர்ற கிராக்கிகளெ மளமளன்னு தள்ளிவிடு.

குளிர்ந்து போயிருந்த சாராயம் வயிற்றுக்குள் பசியின் கடுமையையும் 'முதல் நாள் சொக்கு'கிறக்கத்தையும் மீட்டியது. ''ஆளுக வந்தா தள்ளிவிடுகிறேன்'' கைலி யால் வாயைத் தொடைத்தவாறு கரையேறினான். ''வெண்ணே! சாராயம் சும்மா கொடுக்கிறவன் மாதிரிதான். இவ்வளவு வேலை பாத்துருக்கு. நா ஆளுகளெ அணச்சி கொண்டு வரலன்னா மாடிவீடும் லயன்வீடும் கட்டுவான். மனசுக்குள்ளே வஞ்சிக் கிட்டே நடந்தான். புருசன் கலெக்டர் சம்பளம் வாங்குற மாதிரி இவம் பொண்டாட்டி மாடியில நின்னு குளிச்சிட்டு சிக்கெடுக்கிறா. ஊருக்குள்ள இவனுக்கு மூணு நாலு வங்கணம் வேற.....ஏன்னா பெரீய்ய ஊஞ்சம்பட்டி மைனரு தெரியாதாக்கும் இவம் பொழச்ச பொழப்பு இருக்கிறவன் குடல் அழுகி சாக இவுக மஞ்சக்குளிக்க. இரு இரு உனக்கு ஒருநா ரைடு இருக்கு'. கறுவிக்கிட்டே வேம்படிக்கு வந்தான். திடீரென்று அடி வயிற்றில் தீயால் சுட்டமாதிரி 'சுரீர்'என்ற கதகதப்பு. உடம்பு சளசளவென்று வேர்த்தது. புதிய அவதாரம் எடுத்து கை கால்களை புதிய தெம்பு கொடுத்து ராச போங்கு நிறைந்த,பத்துஆள் தெம்புல ரொம்ப கித்தாப்பாய் நடந்தான். இப்போதுக்கு இரண்டு உளுந்தவடை கொஞ்சம் கட்டி சட்டினி வச்சி உள்ள தள்ளுனால் இன்னொரு பத்துஅடிக்கு மேல பறந்த மாதிரி இருக்கும். பீடியை பத்தவச்சி புகையை பொட்டு வெளியேவிடாமல் நெஞ்சுக்குள்ளே நிறுத்தி,கொஞ்சமா மூக்கு வழியே கசிய விட்டான். அந்தா அந்தா போறாள்ல. இன்னக்கி வளச்சி இவகிட்டே மாமூல் வாங்கீர வேண்டியதான். 'ஏ சடச்சி! சடச்சி! இங்க வந்ததும் போ'....

அவ நின்னு மொறச்சாள். மூஞ்சிய கடுகடுன்னு வச்சிக்கிட்டு ஏதோ வாய்க்குள் ளேயே இவன வஞ்சிட்டு மடமடன்னு போயிட்டா. இதான் இதான் இதான இவனுக்கு பிடிக்காதது. பெரிய ரோக்கியம் போல போறாள்ல. என்னமோ இந்த ஏரியாவில குடியிருக்காளேன்னு பேசாம இருக்கான். இல்லன்னா இவங்கிட்ட தப்ப முடியுமா? அவளுக்கு என்ன நெனப்புன்னா எத்தன பொம்பளகெ வாராக போறாக அவுகள யெல்லாம் நிக்கச்சொல்லி பேசுறானா. என்னய மட்டும் கூப்ட்டு பேசுற அளவுக்கு என்னத்த கண்டான்?

ம்ஹூம்.....ஒண்ணுந்தெரியாதுன்னு நெனச்சிட்டு திரியுறா. அது இல்லே. எல்லாந்தெரியுமின்னு அவளுக்கு தெரியும். இங்ஙனக்குள்ளேயே சுத்திக்கிட்டு திரியுறானே இவன் என்ன பண்ணீருவான்னு ஒரு அசால்ட்டு. மாமூல் தராம எவ்வள நாள் தப்பிச்சிருவா? இருப்பிடத்துலேயே போயி வந்தவனோட சேத்து ரெண்டு பேரையும் கையும் களவுமா பிடிச்சிட்டா. அவன் துட்டுப்பெருத்த ஆளு. லச்சைக்கி லொங்குறவன். அவங்கிட்டயும் துட்டு பிடுங்கலாம். நாளப்பின்னே இவ சவகாசம் கொறஞ்சி இவளுக்கும் வரும்படி அடிபட்டு போகும். அப்ப வசத்துக்கு வருவா...ம்... அனத்தம் பிடிச்சிட்டான் மகளேய்..........

வீட்டுக்குத் தெரியாம ரூட்டு மாறுற இந்த மாதிரி கேஸ்கள் இவனுக்கு அருவ மில்லாம மாமூல் வெட்டீரணும். அப்படியில்லே நான் யோக்கியம்னு சொல்லி தப்பிக் கிறவா என்னெக்காவது எசகு மசகுல சிக்கினான்னா போச்சு. பிடிச்சி,வர்றவன் போற வனெல்லாம் நிறுத்தி க்யூவில விட்டிருவான். அதே பெழப்பா ராத்திரியெல்லாம் லாரி களை மறிக்கிறதுகள்,வீட்ல அடங்காம கிளம்பி வந்ததெல்லாம் போலீசுக்கு பயப்படாட்டாலும் இவனுக்கு பயப்படணும். இவங்கிட்ட ஆசிர்வாதம் வாங்கியாச்சா அப்பாடா நிம்மதி. பெருமையா நா அப்படி குடும்பம் இப்படி குடும்பம்னெல்லாம் சொன்னா இவங்கிட்டெ செல்லுபடியாகாது. தொழிலுக்குன்னு வந்துட்டு என்ன வேண்டிக்கிடக்கு தற்பெருமை. வேணும்னே ஜாதியை ஏந்திச் சொல்றவளை புறங்கையோட அடிச்சி விழத்தாட்டி ருவான். ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு வாசனை பிடிச்சி வச்சிருக்கிறவங்கிட்டே ஏமாத்த முடியுமா? ஒண்ணு 'கருமருந்து'வாடை அடிக்கும். ஒவ்வொண்ணு 'புளிச் சண்ணி' வாசனை. ஒவ்வொருத்திக்கி பிறவி வாசியா என்னமோ சுண்ணாம்பு சட்டியெ மோந்து பாத்தமாதிரி. ஒண்ணொண்ண நெருக்கிப் பிடிக்கும் போதே பாம்பு அடக்கிடந்த இடம் மாதிரி நாசியைப் பிடிக்கும். கருப்பட்டி பாலை முறுகக்காய்ச்சுன மாதிரி ஒரு சிலதுகளை ஒரு வடயா நீச்சுவாடை அடிச்சுக் கிட்டு இருக்கிறதும் இருக்கு.

இப்படி டவுன்ல வந்து விதம்விதமா சால்னாவும் சாம்பாரும் நக்கி சொவை கண்டுகிட்டா வீட்டு சாப்பாட்டு மேல என்னத்த நோங்கும்.

கைகள் பரபரன்னது,பக்கத்துல எட்டமுட்டும் தெரிஞ்ச வரிசைப் பனைமரங்கள், கொளிஞ்சி செடி மாதிரி இவம் பார்வைக்கு தெரிஞ்சது. இப்போ இருக்கிற போட்ஸுக்கு தியேட்டரையே நொறுநொறுன்னு மிதிச்சி குப்பைமேடு ஆக்கீரலாம் போல இருந்தது. எவனையாவது கூப்ட்டு 'எந்தூர்ரா'ன்னு கேட்டு அவன் என்ன பதில் சொன்னாலும்

www.padippakam.com



சும்மா பெரட்டி பெரட்டி அடிக்கனும். அதை இந்த டவுன் பூராம் பேசனும். சாவண்ணான்னா அருச்சுனம்பேர் பத்துன்னு ஆணும் பெண்ணும் ஓட்டம் கிண்ணும்.

இப்படி நெனப்பில்தான் எங்கேயும் போய் சிலுசிலுத்து அடி உதை வாங்கி உடம் பெல்லாம் காயம் பெத்து இந்த வேம்படியில வந்து கிடப்பான்.

ஒருநா ஒரு பொழுதாவது சிப்பிப்பாறை கந்தசாமி நாயக்கர் மாதிரி பெரிய போக்கிரியா வரணும்னு இவனுக்கு ஆசை. மாமூல் கொடுக்காத பெரிய சம்சாரிகளை ஊருக்குள்ள நொழஞ்சி மடத்திலெ கூப்ட்டு வச்சி கருக்கு மட்டையாலே அடிப்பாராமே அந்த மாதிரி உருவெடுக்கணும். வெள்ளக்காரன் போலீஸ் அவரைப்பிடிக்க படாத பாடுபட்டதாம். கையிக்கும் காலுக்கும் விலங்கு போட்டு கோர்ட்டுக்கு பஜார் வழியே நடத்தி கூட்டி வரும்போது ஊர்ச்சனமே நின்று வேடிக்கை பார்த்ததாம். தன்னையும் அப்படி கற்பனை பண்ணி பார்த்தான். சண்டியர் சண்டியர் அந்த மனுஷன் மாதிரி இருந்தாவுள்ளே, பொம்பள விசயத்துலயும் அவ்வளவு ரோக்கியமானவராம். நாம விருதா 'சொலப்பெறக்கின்னு' பேர் வாங்கிட்டமே.

இல்லேன்னா தோட்லாம்பட்டி வேல்த்தேவர் மாதிரியாவது பேரு வாங்கணும். எங்கே கொள்ளை யடிச்சாலும் எவனும் போலீஸ்ஸ்டேசன் போறதில்லை. ஐயா சாமி ன்னு கால்ல விழுந்து நல்ல வார்த்தை சொல்லி ஒரு தொகை கொடுத்து மீட்டிக்கிட்டு போவாகளாம். அவரு படுக்கையே சுடுகாட்டுலதான். அங்கெ எந்த போலீஸ் போகும். ஒரு ரூபா துட்டை பெருவிரல வச்சி ரெண்டா ஒடிக்கிற பலவான்கிட்டெ தைரியமா ஒண்டிக்கொண்டி போலீஸ் நிக்கமுடியுமா? இவன் என்ன ஒண்ணாந்தேதி சம்பளம் வாங்க வேண்டாமா?

இப்படியெல்லாம் பேரு பெறணும்னு ஆசை. நாம என்னடான்னா ஆத்துக் காட்டுல காயப்போட்ட சேலய களவாங்கவும், குடிபைப்புகிட்டெயிருக்கிற பிளாஸ்டிக் பானையை தூக்கவும்மா திரிஞ்சா என்னக்கி அப்படி சண்டியர் ஆக முடியும்.!

ஆகாரம் ஒண்ணும் பாக்காததனாலே போதை கலகலத்து இறங்கு முகமா யிருந்தது. இன்னொரு கிளாஸ் போட்டா தாவலை.

டீக்கடைக்காரர் ரெண்டு பேர்கிட்டே சாவண்ணாவை பார்த்து கைநீட்டி அடையாளங் காட்டிக்கிட்டிருந்தார். இருந்த கொஞ்ச நஞ்ச போதையும் இறங்கீச்சி. நல்லா வாப்பான வாலிப பசங்க. புதுசா டிரெய்னிங்குக்கு ரெண்டு எஸ்.ஐ வந்ததா சொன்னாங்க அவங்களா? போலீஸ் மாதிரிதான் தெரியுது. இல்லை நேத்து போதையில எங்காவது வம்பு சண்டை போட்ட பஞ்சாயத்தா? ஏதோ ரெண்டுபேரும் கிட்டவர்ற வரைக்கும் நிப்போம். நீதானே சாவண்ணான்னு மேற்காம ஓட்டம் பிடிச்சிற வேண்டியது தான். ஓட்டத்தில நம்மள தொயற எவராலும் முடியாது. முள்ளு முடை யெல்லாம் விழுந்து எந்திரிச்சி சிட்டாப் பறியும்போது எந்தப்போலீஸ் பின்னால நிக்கெ முடியும்?

'வணக்கம்' 'வணக்கம்' வந்த வாலிப பசங்க கொடுத்த மரியாதை. 'ஆ'.....ஆங்... மணக்கம் மணக்கம்' இவ்வளவு மரியாதையை எதிரிபார்க்காத சாவண்ணாவுக்கு பெரிய திகைச்சல். அவனுக்கு யாரும் இப்படியொரு மரியாதையை பிறந்தாம் பிறப்பில் கொடுத்தது இல்லை. எப்பவாவது ஊருக்கு போனால் மகன்தான் 'குட்டுமானிங்' சொல்லுவான். அவன் மறந்தாலும் இவன் கேட்டு வாங்கிக் கொள்வான். 'ஐயாவுக்கு ஒரு குட்டுமாணிக்கம் போடுயா' குட்டுமானிங்'ஏய் குட்டு மாணிக்கம்னு முழுசாச் சொல்லு' அப்படீன்னு திருத்துவான். அப்படியொரு சந்தோச மான மணக்கம் இன்னிக்கி.

நீங்கதானேமிஸ்டர்........சாவண்ணா?

'ஆமா' தயக்கத்தோடு சொன்னவன் கைலியை எறக்கிவிட்டான். 'இல்லே ஒங்க கிட்ட கேட்டா பட்டை சாராயம் விக்கிற இடம் தெரியுமின்னாக' ரொம்ப மெதுவா காதோரமா கேட்ட பையன்களை சந்தேகத்தோடு பார்த்தான். ஒருவேளை போலீஸு தான் சாராயம் இருப்பிடத்தை கண்டுபிடிக்க மப்டியில வந்திருக்காங்களோன்னு அபிப்ராயப்பட்டான். அப்படியொருவேளை போலீஸக் கொண்டுபோய் தெரியாத்தனமா விட்டு சுப்பையா பிடிபட்டானோ நம்ம ஒத்த காலையும் கையையும் மாறுகால் மாறுகை வாங்கி விட்டுருவான். டீக்கடைக்காரரை பார்த்தான். அவர் நம்ம பயகதான்கிற மாதிரி அங்கிருந்து வெள்ளை வீசினார்.

'பிடிபட்டது பாஞ்சாலங்குறிச்சி'ங்கிறது மாதிரி, வாங்க வாங்க நான் கூப்புட்டு போறேன்'. தடபுடலா கரையைப் பார்த்து நடக்க ஆரம்பிச்சான்.

'ப்ளீஸ்.....நீங்க கொஞ்சம் முன்னாடி போங்க நாங்க பின்னாடியே வாரோம். நாங்க காலேஜ் ஸ்டுடன்ஸ். அதனால் ஒங்ககூடயே வர்றது நல்லால்லே.

அடாடாடா காலேசு பையன்களா அப்படிச் சொல்லு. அதான் நம்மகூட நடந்து வர ராஞ்சனை படுறாங்க.' அப்பசரி அந்தா அந்தகரைமேலே ஏறி கீழே எறங்குற வேலிக் கும்பலுக்குள்ளே குட்டிச் சுவரிருக்கும்.' மெதுவா பேசும்படி சைகைகாட்டி சாவண்ணாவை முன்னாடி போகச் சொன்னாங்க.

திரும்பவந்து சாவண்ணா ஒரு பீடியை பத்தவச்சி

www.padippakam.com



வேப்பமரத்துக்கு கீழ நின்னுக் கிட்டிருந்தான். பின்னாலே நடந்து வந்த பையன்கள் ரெண்டுபேரும் புன்னகையா சிரிச்சி 'ரொம்ப தேங்க்ஸ் வர்றோம்'னு நடந்துகிட்டேயிருந்தாங்க 'இந்தா தம்பி இங்க வாங்க'சாவண்ணா கொஞ்சம் ஏறுன சவுண்ட்ல கூப்புட்டான். அவன் கண்ணுக ரெண்டும் கங்காய் சிவந்து போயிருந்தது. 'சரக்கு எப்படி,ஒங்க விஸ்கி பிராந்தியெல் லாம் கிட்ட நிக்கெமுடியாது. இத தொட்டவன் அத நோங்கவே மாட்டான்''.

'எஸ்.சீப் அண்ட் பெஸ்ட். வர்றோம் ரொம்ப தாங்க்ஸ்'கிளம்பினார்கள்.'ஏய் இருப்பா.'ஒருத்தன் சட்டையை பிடிச்சி இழுத்து நிறுத்தினான் சாவண்ணா. 'ஒன் தாங்க்ஸ் எனக்கு சோறு போடுமா? ஒரு ஐநூறுரூபா இருந்தா கொடுத்துட்டுப் போ. வீட்ல பயலுக்கு வாய்ப்பாடு வாங்கிட்டு போகணும்.

'என்னது ஐநூறு ரூபாயா? என்னங்க சாதாரணமா கேக்கிறீங்க. ஐநூறுரூபா ஏன் கொடுக்கனும். 'வேங்......சாவண்ணா கூட சாராயங்குடிக்க வர்றான்னா சும்மாவா. மரியாதையா கேட்டதக் கொடுக்கணும். இல்லண்ணா வா நேர ஒங்க பள்ளிக்கூடத்துக் ரே போயி வாத்தியார்ட்ட சொல்லிப்பாப்பம்.'

விவகாரம் ரொம்ப நேரம் நடந்தது. ஒரு வாய்ப் பாடுன்னா வாங்கி கொடுத்துர்றோம்னாங்க. வேடிக்கை பார்க்க கூட்டம் கூடுனது. பையங்க ரெண்டுபேரும் விளக் கெண்ணையில விழுந்த எலி மாதிரி முழிச்சிக் கிட்டிருந்தாங்க. அப்ப தியேட்டர்ல முறுக்கு போடுற சண்முகநாடார் சரக்கோட சைக்கிள்ல வந்து எறங்கினார். மாணவர்கள் ரெண்டுபேரும் சாவண்ணாவிடம் மாட்டிக் கொண்டதைப் பார்த்து ஐயய்யோ படிக்கிற பயக மாதிரி தெரியுது. இவங்கிட்டெ எப்படி மாட்டுனாங்கன்னு நெனச்சி 'சாவண்ணா என்னப்பா வெவரம்'என்று கேட்டார். அதற்குள் இவர்கள் ரெண்டு பேரும் விவரத்தை சொல்ல ஆரம்பித்தார்கள்.

'கொஞ்சங்கூட நாகரீகமில்லாம பிஹேவ் பண்றாருங்க. நாங்க ஆளுக்கு ஒண்ணரை கிளாஸ் குடிச்சோம். இவரு கூப்பிட்டு போனதுக்காக ரெண்டு கிளாஸ் வாங்கி கொடுத்தோம். இப்ப இங்க வந்தவுடன் ஐநூறுரூபா கேக்குறாரு. நாங்களும் இருபதுரூபா வரைக்கு கொடுத்துப் பாத்தோம் மறுக்கிறாரு. மூணாவது ஆளுக்கு தெரியாம வந்து போகணும்னு நெனச்சோம். பையங்களை பாக்க ரொம்ப பாவமா இருந்தது. ''ஏய் சாவண்ணா அதுக பாவம் காலேஜ் பிள்ளைக ஆசைப்பட்டு வந்து, அருவமில்லாம குடிக்கவந்தா நீ என்னப்பா இந்தப்பாடு படுத்துறே. அதக்கொண் டாங்க. இந்தா இதப்பிடி இருபது ரூபாயோடு முடி. பாவமில்லையா. சாவண்ணா சண்முக நாடாரை சினந்து பார்த்தான். ''யோவ் நாடாரே'' நீர் பேசாம போகமாட்டீரு. ஒழுங்க மருவாதியா எடத்தை காலி பண்ணும். எனக்கே பஞ்சாயத்து பண்ண வந்துட் டீரா. உமக்கு நேரங்காணாதுன்னு பாக்கேன்.'நாக்கை கீழ்உதட்டில் பல்லால் கடித்து மூக்கு வெடைக்க முறைத்தான். 'நல்லதுக்கு காலமில்லைப்பா. சரி எனக்கெதுக்கு சனியன். இந்தாங்க தம்பி ரூபாய பிடிங்க பசங்ககிட்டெ ரூபாய நீட்டினார். இங்க கொண்டாங்க ரூபாய வாங்கிய ஒரு பையன் 'இப்ப நீ என்ன செய்யணுங்கிறே' சாவண்ணாவை நெருங்கி தலையை ஆட்டுனான்.

'ஐநூறுக்கு ஒத்தச்சல்லி கொறஞ்சாலும் இந்த எடத்தவிட்டு ஒரு அடி எடுத்து வக்கெமுடியாது. 'தரமுடியாது போடா'நீ வாடா மச்சி போகலாம். ரெண்டுபேரும் புறப்பட்டார்கள். 'ஏய் என் சுயரூபத்தை காட்டணுமா? கைலியை மடிச்சு கட்டினான் சாவண்ணா. ஒருவன் திரும்பி வேகமாய் வந்து 'என்னடா செய்வே'முழங்கைக்கு மேலே சட்டையை ஏத்திவிட்டு விரலை குவிச்சி சாவண்ணாவின் வாயைச் சேர்த்து ஒரு குத்துவிட்டான். இதை கொஞ்சமும் எதிர்பார்க்காத சாவண்ணா வலி தாங்க முடியாமல் பல்லில் ரத்தங்கசியுதோ என்ற சந்தேகம் வந்தாலும் வெளிக்காட்டி கொள்ளாமல்,அழிஞ்சதடா இன்னக்கி வெள்ளக்கரை ரோடு. டேய்........சுத்துமுத்தும் எதோ தன் ஆட்களை திரட்ட முயற்சி பண்ணுனமாதிரி வரிசைவிட்டான்.

ம்........உஹூம்..........அவங்களுக்கும் ஏறிக்கிடிச்சி. இன்னும் இவம் பாச்சா அவங்ககிட்டெ பலிக்காது. போதை தலைக்கேறிட்டா படிச்சவன் என்ன படிக்காதவன் என்ன,மான மரியாதையை எவன் பார்ப்பான்' பக்கத்திலிருந்த ஆள்கள்ட்ட சொல்லிக் கிட்டிருந்தார் சண்முகநாடார்.

ரொம்பதூரம் நடந்து போய்விட்ட பசங்களை அடித்து நொறுக்குகிற மாதிரி ஓடிய சாவண்ணா அவர்கள் முன்னாடி போய் நின்று மறித்தான்.

'முதலாளி ஒரு நூறு ரூபா மட்டும் கொடுத்துட்டுப் போங்க'கெஞ்சுனான். 'லே... போடாங்கறேன்' சாவண்ணா வின் இடுப்போடு ஏறி மிதித்தான் ரெண்டுபேரில் ஒருத்தன். அடுத்தவனும் அடிக்க கையை ஓங்குனான். அடிவிழா மலிருக்க கையால் தாங்கியவாறு 'சரி சரி......மொதலாளி என்னமோ வாய விட்டுட்டேன். புண்ணியத் துக்கு ஒரு அம்பது ரூபாயாச்சும் தாங்க. ஒங்க புண்ணியத்துல ரெண்டு பலகாரம் சாப்பு கிறேன். நாடியைப்பிடிச்சி மாறி மாறி கெஞ்சுனான் சாவண்ணா. 'இவன் சொன்னா கேட்க

www.padippakam.com



மாட்டான் திபுதிபுவென்று ரெண்டுபேரின் அடி சரமாரியாய் விழ கீழே கிடந்த சாவண்ணா கித்தாப்பு விடாமல் எழுந்து அவர்களை சுத்துமுத்தும் பார்த்தான். கிறக்கத்துலெ கண்ணு ரெண்டும் தண்ணிக்குள்ளெ முழிச்சிவிட்ட மாதிரி மலங்கலா தெரிஞ்சி தெளிஞ்சது. ரொம்பதூரம் நடந்து போய் விட்டவர்களை பரிதாபமாய் பார்த்து, 'முதலாளி அந்த இருபது ரூபாயாவது கொடுத்துட்டுப் போகக்கூடாதா?

அவர்கள் திரும்பியே பார்க்கவில்லை. காலு கை புழுதியை தட்டிவிட்டவாறே திரும்ப நடந்து வந்த சாவண்ணாவிற்கு எதிரே சண்முகநாடார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். 'யோவ் நாடாரே'பெரிய விவகாரதாரி மாதிரி பஞ்சாயத்து பண்ணு னீரே ஒழுங்கா அந்த இருபது ரூபாய வாங்கி கொடுமய்யா. நாடாரைப் பார்த்ததும் காலைக் கிந்திகிந்தி அவரை நோக்கி எட்டு வேகமாய் எடுத்து வைத்தான்.

''யப்பா நான்தான் அப்பதையே ஒதுங்கிக்கிட்டேனே.''

''யோவ் நா என்ன பேப்பயலா அந்த இருபது ரூபாய நீர் வாங்கிக் கொடுக்காம ஒம்ம விடவே மாட்டேன்யா.''வலிய வந்து பஞ்சாயத்து மயிரு பண்ணுனீரில்லே.

பளிச்சின்னு வடக்காம வண்டியை திருப்புன நாடார், தெருவு நடுவுல சின்னப் பிள்ளைகள் ஓடியாடி விளையாடிக்கிட்டிருக்கிறதை பாத்து சைக்கிளை விட்டு கீழே இறங்கி உருட்டிக்கிட்டே ஓட சாவண்ணா விரட்ட, சைக்கிளை தள்ளிக்கொண்டு தெருவுக்குள் நுழைந்து திரும்பி திரும்பி பார்த்துக்கிட்டே உசிரை வெறுத்து ஓடிக்கிட்டிருந் தார் நாடார்.

காலை வெய்யில் சுரீர் என்று தைத்தது. பசியில் கண்ணு பஞ்சு பூத்து தெரிஞ்சது. எழுந்து உட்கார்ந்தான். உடம்பெல்லாம் இழுத்துப் பிடித்துக்கொண்டு வலித்தது. காலு கையெல்லாம் புதுசு புதுசா சிராய்ப்புகள். இருக்கிற தினுசைப் பார்த்தால் ரெளண்டு விட்டு அடி வாங்கின மாதிரி தெரிஞ்சது. ஊர்ப்பட்ட ஈயெல்லாம் இவம் மேலதான் மொய்ச்சி இருந்தது.

சே! கேவலம் பேசாம இன்னக்கி ஊருக்கு கிளம்பிற வேண்யதுதான். பய ஒத்த வாய்ப்பாடு கேக்குறான் ஒரு மாசமா. பத்துமணி ஷோவுக்கு டிக்கட் கொடுக்க ஆரம்பி ச்சாங்க. எந்திரிச்சி கைலி சட்டையிலிருந்த புழுதியை தட்டிவிட்டான். வேம்படி நிழலை விட்டு ஊருக்குப்போற முடிவுலெ ரெண்டு எட்டு எடுத்து வச்சான்.

அந்தா..........அந்தா..........சுப்பையன் வந்துட்டான்.

## இலட்சுமிகாந்தன் கவிதைகள்

**இரந்தும்....**

என் தனிமை
சரணடையச் செய்கிறது
உன்னிடம்.

சதையின் பசி
காவு கேட்கிறது
தன்மானத்தை.

'மூச்சை நிறுத்தி விடு'
சொல்லுதல் எளிது.

வாழ்தலின் வேதனையுணர்ந்தும்
தொடரும் அறிவெனது.




காலம்
இரக்கமற்று
வாழ்வை உறிஞ்சுகிறது.

சுனைகள் வற்றிப் போக
காய்கிறது
பூமியின் மார்பு.

வர்ணம் குழைத்து
பூசிய முகமே அழகெனில்
அழகெது?

எதிர்கொள்ள விழையும்
அன்பு நமதெனில்
எங்கிருக்கிறது இடைவெளி?

www.padippakam.com



# அவன் தன்னை வரையவில்லை

- ஆதிலட்சுமி



''மரணம்
என்னைச் செதுக்கி
ஒரு கலைஞனாக
வடிவமைத்தது''

- இகான் செலீ

## 1

**உலகிலேயே மிக அதிகமானவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் ஆஸ்திரிய நாட்டில் -**

இசை மேதைகள் பீத்தோவனும் மோஸார்ட்டும் வாழ்ந்து இப்புவியையே இசைத்த அதன் தலைநகர் வியன்னாவில் -

- பிறந்து வளர்ந்த ஓவியனும் கவிஞனுமான இகான் செலீயின் முதல் காதல் அவனுக்கு 14 வயதாக இருக்கையில் அவனுடைய இளைய தங்கை கெர்ட்டியுடன் மலர்ந்தது. அது தப்பென்று யார் சொல்லியும் அவனுக்குப் புரியவில்லை. எந்நேரமும் ரெண்டு பேரும் இணை பிரியாமல் சுற்றினார்கள். வியன்னா நகருக்கு அருகே டானூப் நதிக்கரையில் இருந்த ஒரு ரயில் நிலையத் தில் ஸ்டேஷன் மாஸ்டராக வாழ்ந்த அவனுடைய பிரியமான தந்தை பொறுமையாக அவனை 'வழி'க்குக் கொண்டுவர பல யத்தனங்கள் செய்தார்.

''குரங்கிலிருந்து மனிதனாக நாம் மாறிய உடனே தொடர்ந்த அந்த கற்கால வாழ்க்கையில் எந்த ஆணும் பெண் ணும் சேர்ந்து வாழ்ந்தது பழைய கதை. அதெல்லாம் முடிந்து போன சரித்திரம். இப்போது நாம் நாகரிக மனிதர்கள். தங்கை - அக்கா - அத்தை - அண்ணன் - தந்தை - சித்தி - பெரியம்மா என்று ஆண்களையும் பெண்களையும் பிரித்து - இன்னாரிடம் இன்ன உறவுதான் என்று ஒரு வரையறை செய்து கொண்டுவிட்டோம் - அதை மீறுவது தப்பு''

அப்பா சொன்னது அவனுக்குப் புரியவும்இல்லை. பிடிக்கவும் இல்லை. ரெண்டு பேரும் சேர்ந்தே இந்த உலகைப் புரிந்து கொள்ள ஆசைப்பட்டார்கள். வெளி யிலிருந்து பார்ப்பவர்களுக்கு வித்தியாசமாக எதுவும் தெரியாது. ஆனால் இகானின் அப்பாவுக்கு இந்த இருவரின் உறவின் வித்தியாசம் புரிந்து கொள்ளும்படியாக இருந்தது. வீட்டில் ரெண்டு பேரையும் ஒரே அறையில் பார்த்தாலே ஆத்திரமடைந்து கத்தத் தொடங்குவார். ஒருமுறை இருவரும் அப்பா இல்லாத சமயம் ஒரு அறைக்குள் தனித்திருந்து பேசிக் கொண்டிருந்தபோது அப்பா வந்துவிட்டார். அடக்க முடியாத கோபத்தில் கதவை உடைத்துப் பிளந்துகொண்டு உள்ளே நுழைந்து''என்ன செய்கிறீர்கள் இங்கே ரெண்டு பேரும்''என்று காட்டுக்கத்தல் போட்டார். அப்பாவின் தொல்லை தாங்க முடியாமல் இகானும் கெர்ட்டியும் வீட்டை விட்டு ரயிலேறி ஓடிப்போனார்கள் ஒரு நாள். குடும்பமே தேடிஅலைந்தது

படிப்பகம்

www.padippakam.com



ஊர் ஊராக. இகானின் தாய்மாமன்தான் கடைசியில் பக்கத்து நகரில் கண்டுபிடித்து மீட்டுக்கொண்டு வந்தான். பிறகு அப்பா அம்மாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ''கெர்ட்டியை நேசிப்பது அவ்வளவு பெரிய பாவமா அப்பா'' என்றுதான் மீண்டும் மீண்டும் அப்பாவிடம் கேட்டுக் கொண்டே இருந்தான் இகான். மகனின் கபடமற்ற கேள்வி அப்பாவைச் சித்ரவதை செய்தது. புரியும்படி விளக்க அவரால் முடியவில்லை.

வீட்டைவிட்டு வெகுதூரத்தில் இருந்த ஒரு நகரத்தில் அவனை பள்ளியில் சேர்த்தார்கள். இகான் குடும்பத்துக்கு மிக நெருக்கமான - தனியாக வாழ்ந்த - ஒரு விதவைப் பெண்ணோடு இகான் தங்கிப் படிக்க ஏற்பாடாயிற்று. இளம் வயதிலிருந்து விதவை வாழ்வை ஒரு துறவி போல காத்துவந்த அந்தப் பெண்மணி இகானைப் பற்றி எல்லாம் கேட்டறிந்து கொண்டு ''அவனைப் பற்றிய கவலையை விடுங்க. ஒரே மாதத்தில் அவனை சரிசெய்து விடுவேன்'' என்று அப்பாவை வழி அனுப்பி வைத்தாள்.

பையனுக்கு எந்நேரமும் ஏதாவது ஒரு வேலை சொல்லிக்கொண்டே இருந்தாள். பள்ளி முடிந்து இகான் வீடு திரும்பும்போது வாசலிலேயே ஏதாவது ஒரு உத்தரவோடு அவள் நின்றுகொண்டிருப்பாள். ''எப்போதும் ஏதாவது வேலையில் ஈடுபடுத்திக்கொண்டே இருந்தால்தான் மனம் அலைபாயாது கட்டுக்குள் இருக்கும்'' என்பதை தன் வாழ்க்கையிலிருந்து பாடமாகக் கற்றுக்கொண்டிருந்த அப்பெண்மணி அந்தத் தத்துவ வெளிச்சத்தை அப்படியே இகான் மீது பாய்ச்சினாள்.

பள்ளியிலும் பாடங்களைவிட வரைவதிலேயே அதிகம் ஆர்வம் காட்டிய இகான் சீக்கிரமே சிறப்புக் கவனத்துக்கு உரிய பையன்களின் பெஞ்சில் உட்கார வைக்கப் பட்டான். வீட்டிலும் வெளியிலும் இடைவிடாத கண் காணிப்பு இருந்ததால் இகான் வெற்றிகரமாக எல்லாப் பாடங்களிலும் பெயிலாகி ''உருப்பட மாட்டான்'' என்ற முத்திரையுடன் ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டான்.

ஊருக்கு வந்ததும் மறுநாளே பக்கத்து ஊர்ப்பள்ளியில் சேர்க்கப்பட்டான் இகான். தினசரி தனியாக ட்யூஷன் வேறு ஏற்பாடாயிற்று. ஓரளவு சகிக்கத்தக்கவராக இருந்த அந்த ட்யூஷன் மாஸ்டரின் உதவியுடன் ஒரு வழியாக பள்ளிப் படிப்பு முடிந்தது.

பள்ளிப்பருவத்தில் நோட்டு நிறைய ரயில் படங்களும் தண்டவாளப்படங்களும் கல்லறைப் படங்களும் வரைந்தான் இகான். இகானுடைய





கெர்ட்டி

www.padippakam.com





தாத்தாவையும் அப்பா வையும் போல அவனும் ரயில்வேயில் பெரிய அதிகாரியாக வரப்போகிறான் என்று பெற்றவர் மகிழ்ந்தனர். ஆனால் மகிழ்ச்சி தொடர வாய்ப்பின்றி அப்பாவின் உடல்நலம் கெட்டது. சிபிலிஸ் எனப்படும் பால்வினை நோய் அவரைத் தாக்கியுள்ளதாக டாக்டர்கள் சொன்னார்கள். அதைக் கேட்டதிலிருந்து அப்பாவின் மனநிலையும் கெடத் துவங்கியது. விரைவில் அவர் ஒரு மன நோயாளி ஆனார்.

மனநோயாளியாகிவிட்ட அப்பாவிடம் போதிய அளவு அன்பு காட்டவில்லை என்று அம்மாவின் மீது தீராத மனக்குறை இகானுக்கு ஏற்பட்டது.

அன்றைய நாட்களில் மன நோயாளிகள் பெருத்த ஒரு நாடாக ஆஸ்திரியா இருந்தது. மனநோய்க் கூறுகளை ஆய்வு செய்யத்துவங்கி மனித மனதின் உள் அடுக்குகளைப் பற்றிய புதிய கண்டுபிடிப்புகளை உலகுக்கு வழங்கிய ப்ரூயர் மற்றும் ஃபிராய்டு (Breur and Sigmund Freud) இவர்களின் ஆய்வுக் களமாக ஆஸ்திரிய நாடே விளங்கியது குறிப்பிடத் தக்கது. Psychoanalysis (உளவியல் ஆய்வு) என்பதே அங்கு தான் பிறந்தது.

மனநோயாளியான ஒரு தந்தையுடன் எந்த உரையாட லும் நடத்தமுடியாத சோகத்துடன் தனிமையில் வெந்து கொண்டிருந்தது இகானின் பால்யம். இகானும் கெர்ட்டியும் ரயில் தண்டவாளத்தில் நடந்தபடி பிடி இழந்து போன அப்பாவின் மனசை மீட்பது பற்றிப் பேசிக்கொண்டனர். அப்பாவைப் பற்றிய பேச்சின் ஆழத்தில் வெடித்து வரும் அழுகையில் இருவரும் ரயில்வே மைதானத்துப் புல்வெளியில் படுத்துக் கிடப்பார்கள். ஒருமுறை மன நோயுடன் அப்பா தற்கொலை செய்துகொள்ள முயன்றதை நேரில் கண்ட இகான் முற்றிலும் உடைந்து போனான். தனது 14 ஆவது வயதில் தந்தையை இழந்து முழுக்கவும் பெண்கள் நிறைந்த குடும்பத்தின் ஒரே ஆண்மகன் என ஆனான்.

மூன்று சகோதரிகளும் அம்மாவுமான தன் குடும்பத்தில் தான் மட்டுமே ஆண் என்கிற உணர்வு இகானை வெகுவாக பாதித்தது.வெளிஉலகிற்கு ஒரு ஆம்பிளையாகத் தன்னைக் காட்டிக்கொள்ள அப்பாவின் தொப்பி அப்பாவின் காலணிகளை அணிந்து கொண்டு நடக்கத் துவங்கினான் இகான்.

உயர்பள்ளி வகுப்புகளிலும் பாடங்களிலும் பார்க்க படங்கள் வரைவதிலேயே அதிகமும் தன்னை மறந்து லயிக்கத் துவங்கினான் இகான். அடுத்தடுத்த மரணங்களால் அவன் வீடு தாக்குண்டு இருளடைந்து கிடந்தது. இறந்தே பிறந்த மூன்று பெண் குழந்தைகள் - பத்து வயதில் இறந்து போன இகானின் அக்கா, பைத்தியமாகி - தற்கொலையில் தோற்றுப் - பின் மரணத்துடன் கலந்த அப்பா என - மரணம் தொடர்ந்து இகானைச் செதுக்கிக் கொண்டிருந்தது.

அம்மாவுக்குக் கிடைத்த சொற்பமான குடும்ப பென்ஷன் தொகை எதற்குமே போதவில்லை. தாய்மாமன் வந்து கை கொடுத்தான். தாய்மாமன் குடும்பப் பொறுப் பேற்ற பிறகு சட்ட திட்டங்கள் கடுமையாகின. இகான் தொடர்ந்து சைஸ் சிறுசாகப்போன மாமனின் பேண்ட் சட்டைகளையே பாவித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. புதுச்சட்டை என்ற பேச்சே கிடையாது. விநோத மான ஆடைகளுடன் - வகுப்பறைகளில் படம் வரைவதி லேயே எல்லாவற்றையும் மறந்து கொண்டிருந்தான் இகான்.

www.padippakam.com



படம் வரைந்து முடிந்து நிமிர்ந்துபார்த்தபோதெல்லாம் வகுப்பறைத் தோழர்களாக புதியமுகங்கள் தென்பட்டன. இவனது சகாக்கள் இவனை விட மூன்று வகுப்புகள் முன்னே போய் விட்டிருந்தனர். இந்தப்படிப்பு நமக்குச் சரிப்பட்டு வராது என்று முடிவு செய்தான் இகான்.

ஒரு மோப்ப நாய்க்கு உரிய சகலகுணங்களையும் கொண்டிருந்த தாய்மாமன் இகான் மேன்மேலும் உருப்படாமல் போய்க் கொண்டிருப் பதை முன்நுகர்ந்து அம்மாவிடம் புலம்பிக் கொண்டிருந்தான்.



கஸ்டவ் கிளிம்ட்

அம்மாவின் எதிர்ப்பையும் மாமாவின் தடைகளை யும் மீறி இகான் நுழைவுத்தேர்வு எழுதி வெற்றி பெற்று வியன்னா நுண்கலை அகாடமியில் மாணவனாகச் சேர்ந்தான். அப்போது வயது பதினாறு.

ஆனால் அகாடமியின் நுழைவாயிலில் இருந்து வகுப்பறை வரை நெடுகிலும் பழம் பெருச்சாளிகளையும் தலை வரை தொங்கி முகத்தை அடைக்கும் சிலந்தி வலை களையும் ஒட்டடைகளையுமே கண்டான் இகான்.

அகாடமி ஆசிரியர்களின் கலைக்கோட்பாடுகளும் கோடுகள் வண்ணங்களைப் பயன்படுத்துவது குறித்த அவர் களது உரைகளும் கேட்டுப் புளிச்சேப்பம் எடுத்தது இகானுக்கு. வௌவால்கள் அடைகாக்கும் பாழடைந்த பாதாள அறைகளாக அவ்வகுப்பறைகள் தோற்றமளித்தன.

அச்சமயம் புகழ்பெற்ற ஓவியர் கஸ்டவ் கிளிம்ட் (Gustav Glimt) ஐ சந்திக்கும் வாய்ப்பு இகானுக்குக் கிடைத்தது. அது இகானின் கலை வாழ்வில் பெரிய திருப்புமுனையாக அமைந்தது. எப்போதும் இளம் கலைஞர்களை தட்டிக் கொடுக்கும் கிளிம்ட் இகான் வரைந்திருந்த சில ஓவியங் களைப் பார்த்துப் பெரும் மகிழ்ச்சியடைந்தார்.

## 2

ஆஸ்திரியக் கலை மறுமலர்ச்சிக்கு வித்திட்டவராக கஸ்டவ் கிளிம்ட் அன்று திகழ்ந்தார். ஓவியர் யாராக இருந்தாலும் அவர்களுடைய படங்கள் விலை போக வேண்டுமானால் வியன்னா கலை அகாடமியின் ராஜ முத்திரை தேவையாயிருந்தது. கலை அகாடமியோ இறுகிப் போன பழமைவாதிகளின் பிடியிலிருந்தது.

வியன்னாவின் வளர்ந்து கொண்டிருந்த பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆதிக்கக் கலாச்சாரமே கலைத்துறையின் மீதும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது. வெளித்தோற்றத்தில் பண்டைய பாரம்பரியத்தையும் பழைய மதிப்பீடுகளையும் உயர்த்திப் பிடிப்பதாய் முகம் காட்டிய வியன்னா உள்ளுக் குள்ளே அழுகி நாறிக் கொண்டிருந்தது.

வயதான மன்னர் ஃபிரான்ஸ் ஜோசப் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார். எங்கும் பரவிக்கிடந்த ஊழல், தெருக்களெங்கும் வீடற்ற மக்களின் பெருந்திரள், பாதாளத்தை நோக்கி பாய்ந்து கொண்டிருந்த நாட்டுப் பொருளாதாரம் என்ற பின்னணியில் ஆஸ்திரியாவில் மன நோயாளிகளும் தற்கொலைகளும் பெருகிக் கொண்டிருந்த காலமாக அது இருந்தது.



கிளிம்ட்

"மருந்துகளால் மனிதனை சுகப்படுத்த முடியாது"

படிப்பகம்

www.padippakam.com





கிளிம்ட்

ஒளியின் மீது இருளின் வெற்றி!

ஆடைகளும் ஆபரணங்களும்
குற்றங்களோடு தொடர்புடையவை.
கலைகள் இவற்றுக்கு எதிரானவை
என்பதால் அவை எல்லாமே
திறந்தமேனியாகவே இருக்கும்.

- கிளிம்ட்

1848 ல் கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியிடப்பட்டு ஐரோப்பாவை அது பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தது. இறுகிய பழையன எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்கும் தீ பரவிக்கொண்டிருந்தது.

கஸ்டவ் கிளிம்ட் தலைமையில் இளம் கலைஞர்கள் வியன்னா கலை அகாடமிக்கு எதிராக - அதிலிருந்து விலகி - Secessionists - ''விலகியவர்கள்'' என்ற புதிய முன்னணி (Avant - garde)யை உருவாக்கினர்.

**''ஒவ்வொரு காலத்துக்கும் அதன் கலையை.**

**கலைக்கு அதன் சுதந்திரத்தை''**

"To every age its arts. To art its freedom"

என்ற பதாகையை உயர்த்திப் பிடித்த இக்கலைப்படை, ''சுத்திகரிக்கப்பட்ட - சலிப்பூட்டும் - தினசரிக்கு - அன்றாடத்துக்கு - பழகிய தடத்துக்கு எதிராக நாங்கள் போர் தொடுக்க விரும்புகிறோம். அலுப்பூட்டும் கலை வடிவங் களுக்கு எதிராக-

இது பழைய கலைக்கு எதிராக நவீனத்துவ கலைஞர்கள் நடத்தும் யுத்தமல்ல. தம் வர்த்தக நலன்களை முன்னிட்டு புதிய கலைகள் முகிழ்ப்பதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் சக்திகளுக்கு எதிராக-

தம்மையும் கலைஞர்கள் - கலைவிற்பன்னர்கள் என்று கூறிக்கொண்டு நாற்காலிகளைப் பற்றிக்கொண்டு தொங்கும் இந்த வெள்ளையடிக்கிற கூட்டத்துக்கு எதிராக -

கலையின் வளர்ச்சிக்காக யுத்தம் தொடுக்கிறவர்கள் நாங்கள்'' என்ற பிரகடனத்தோடு இவர்கள் பயணம் துவக்கினார்கள்.

மூடாக்குப் போட்டுக் கொண்டு - பூசிப்பூசி மெழுகிக் கொண்டிருந்த வியன்னாவின் கலை வடிவங்களுக்கு எதிராக கிளிம்ட் தனது ஆடைகளற்ற (Nude) ஓவியங்களை உயர்த்திப் பிடித்தார். ஆடைகளும் ஆபரணங்களும் குற்றங்களோடு தொடர்புடையவை. கலைகள் இவற்றுக்கு எதிரானவை என்பதால் அவை எல்லாமே திறந்தமேனி யாகவே இருக்கும். (All art is erotic) என்ற முழக்கத்துடன் Nude ஓவியங்களை கிளிம்ட் முன் வைத்தார். ஃப்ராய்டு (Sigmund Freud) தனது உளவியல் ஆய்வுகளை அப்போதுதான் முன்வைத் திருந்தார். பிராய்டின் முன்வைப்புகள் கிளிம்ட் வரைந்த நியூட் ஓவியங்களுக்கு புது அர்த்தங்களையும் ஆழங்களையும் சேர்த்தன.

வியன்னாவின் புகழ் பெற்ற உருவப்பட (Portrait painth) ஓவியரான கிளிம்ட் மன்னர் ஃப்ரான்ஸ் ஜோசப்பிடமிருந்து தங்கப்பதக்கம் (Golden order of merit) பெற்றிருந்தவர். அவர் எழுப்பிய கலகக்குரல் இளம் படைப்பாளிகளின் படைப்பு மனங்களில் மோதி எதிரொலித்தது.

வியன்னா பல்கலைக்கழக வளாகம் முழுவதிலும் சுவர் ஓவியம் தீட்டும் பணி கிளிம்ட்டுக்கு தரப்பட்டது. இருளின் மீது ஒளி கொள்ளும் வெற்றியைச் சித்தரிப்பதான ஒரு சுவர் ஓவியம் அவர்

www.padippakam.com



வரையவேண்டியிருந்தது. ஆனால் அன்றைய நவீன முதலாளித்துவ உலகில் மனிதகுலம் மேலும் மேலும் பாதுகாப்பற்றதாகி வருவதாக உணர்ந்த கிளிம்ட் ஒளியின் மீது இருட்டு ஆதிக்கம் செலுத்துவதை சுவர் ஓவியமாக்கிவிட்டார். அதே போல மருத்துவப் பிரிவின் சுவர்களில் ''மருந்துகளால் மனிதனை சுகப்படுத்த முடியாது''என்ற கருத்து வெளிப்படும் விதமான ஓவியத்தை வரைந்தார். தெடர்ந்து காட்சிக்கு வந்த கிளிம்ட்டின் நிர்வாண ஓவியங்கள் பீடங்களில் வீற்றிருந்த (கலை அகாடமியின்) சனாதனிகளின் உள் மனங்களைக் கிழித்து ஆத்திரமூட்டியபடி இருந்தன.

மன்னர் உள்ளிட்ட மேட்டுக்குடி முழுவதும் அதிர்ச்சி -க்குள்ளாக்கியது. பேராசிரியராக கிளிம்ட் நியமிக்கப்பட இருந்ததை மன்னர் தடை செய்தார். வியன்னாவின் பாரம்பர்யம் மண்ணோடு மண்ணாகி விட்டதாக கலை நிர்வாகஸ்தர்கள் கூக்குரல் எழுப்பினர். கிளிம்ட் அறிவித்தார்.

போதும் போதும்
உங்கள் தணிக்கைகள்
விலகுகிறேன் நான்.
உங்கள் நடந்து தேய்ந்த பாதைகளிலிருந்து
அரண்மனை உதவிகள்
அங்கேயே இருக்கட்டும்.
விரிந்து செல்கிறது என் முன்னே
கலையின் சுதந்திரப்பாதை
வழி நடத்தும் என் பயணத்தை
அந்தப் பாதையே.



இகான் செலீ



## 3

கிளிம்ட் கொடுத்த உற்சாகம் இகான் செலீயின் பல கதவுகளைத் திறந்துவிட்டது. கிளிம்ட்டில் மையம் கொண்டிருந்த புயல் இகானின் தூரிகை வழியே வீசியடிக்கத் துவங்கியது.

முதல் காரியமாக படித்தது போதும் என்று அகாடமியை விட்டு வெளியேறினார். ஜப்பானிய **Nude** ஓவிய மரபையும் 14 ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய சுயரூப ஓவிய மரபையும் **(Self - Portrait)** தாண்டி சுயமான தீர்மானகரமான கோடுகள் செலீயின் விரல்களின் வழி கசியத்துவங்கின. அந்தப்பழைய மரபுகள் சுயரூப ஓவியத்தின் வழியே கலைஞன் தன் அடையாளத் தைத் தேடிச்செல்ல உதவின. அன்று கண்ணாடிக்கு மிகுந்த முக்கியத்துவம் இருந்தது.

ஆனால் செலீ தன் சுயரூப ஓவியங்களின் மூலம் சுயம் என்பது ஒன்றல்ல அது உடைபட்ட ஒன்று **(Individual is not actually individual but dividual - divisible)** என்பதை உணர்ந்தார். செலீயின் சுய ஓவியங்கள் சுயசரிதைத் தன்மையோ சுயத்தைக் கொண்டாடும் தன்மையோ **(not auto-biographical or hero-worship of self)** கொண்டிருக்கவில்லை. மாறாக சுயத்தின் உடைவையே

படிப்பகம்

www.padippakam.com







வெளிப்படுத்தின. பார்வையாளரை ஊடுருவித் தாக்கும் அழுத்தமான உணர்ச்சி வெளிப்பாடுகளாயிருந்தன.

இகானின் சில சுய ஓவியங்கள் அன்றைய முன்னோடிப் படைப்பாளியான ஆஸ்கார் ஒயில்ட் எழுதிய ''டோரியன் கிரேயின் படம்''(The picture of Dorian Gray-1890) என்ற நாவலை நினைவுபடுத்தின.

ஆஸ்கார் ஒயில்டின் அந்த நாவலில் - வரையப்பட்ட ஓவியத்தில் இருக்கும் மனிதன் வளர்ந்து பெரியவனாகி (எல்லாவித அழுக்குகளையும் வெளிக்காட்டியபடி) வயதாகிக் கொண்டிருப்பான் - உண்மையான மனிதன் அப்படியே இருப்பான். அதே ஆடை அணிகளோடு - வெளிப்பூச்சோடு - இளமையுடன்.

இகான் செலீயின் சுய ஓவியங்களில் பல - இறந்து போன அப்பாவின் பாராட்டுகள் இல்லாத வெற்றிடத்தை நிரப்புவதற்காக - வரையப்பட்டவை. நேரான - பழகிய - நிற்கும் விதத்தில் (Familiar Pose) இகானின் எந்தச் சுயநல ஓவியமும் இல்லை. நிஜத்திலிருந்து படம் விலகிச் செல்கிறது.

''என் ஓவியங்கள் கிழிந்த சுயத்தின் நவீன உணர்தலாகும்'' என்று சொன்ன இகான் செலீ அகாடமியை விட்டு வெளியேறி அவருடைய ஓவியங்களுக்கு மாடலாக வந்த வால்லி (Wally) என்ற பெண்ணுடன் சேர்ந்து ஒரு வீட்டில் தங்குகிறான். கட்டுப்பெட்டிகளான குடும்பஸ்தர்கள் வாழும் குடியிருப்புப் பகுதியில் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருந்த இகான் - வால்லிக்கு பிரச்னைகள் வரத்தான் செய்யும். ''இதெல்லாம் நல்ல குடும்பங்கள் வாழ்கிற ஏரியா'' என்ற அண்டைவீட்டாரின் புகார்த் தொல்லை தாளமுடியாமல் இந்தக் கேடுகெட்ட ஊரில் இனி ஒருச்சணமும் இருக்கலாகாது என்று முடிவு செய்து வீட்டைக் காலிசெய்துவிட்டு வியன்னாவுக்கு அருகிலிருந்த 'க்ருமாவ்' என்கிற சின்ன நகரத்துக்குப் போகிறார்கள்.

எங்கு போனாலும் 'நல்ல' குடும்பங்களின் தொல்லை இருந்தது. நல்ல குடும்பஸ்தர்களின் சகல ஒழுங்குகளையும் கட்டுப்பாடுகளையும் மதிப்பீடுகளையும் கேலி செய்வது போன்ற இகான் - வால்லியின் வாழ்க்கைமுறை அங்கும் பெரும் சர்ச்சைக்குள்ளானது.

ஆனால் அந்த ஊரின் குழந்தைகள் இகான் - வால்லி யின் வாழ்க்கை முறையால் ஈர்க்கப்பட்டு பெரும்.ரசிகர் களாகி விட்டார்கள். எந்நேரமும் ஆண் - பெண் குழந்தைகள் இங்கேயே கிடந்தார்கள். பல குழந்தைகள் இரவு இகான் வீட்டிலேயே தங்கிவிடுவது வழக்கமாயிற்று. ஒரே பாட்டும் கூத்தும் படம் வரைவதும் என குழந்தைகளின்கலா மேதமை பீறிட்டுக் கிளம்பும் இடமாக அவ்வீடு மாறிக் கொண்டிருந்தது.

தலைவாரி ஜடைபின்னி அதிகாலை எழுந்து பல் தேய்த்து தினசரி குளித்து - என்று சலிப்பூட்டும் தினசரி என்பதே இகான் வீட்டில் கிடையாது. குளிக்கணும் என்று தோன்றினால் குளிக்கலாம். மரபான எதுவும் கிடையாது. கட்டிலின் மீது அடுப்பு வைத்து சமையல். அடுப்புத்திண்டின் மீது உட்கார்ந்து அரட்டை. இந்த ஒழுங்கு கட்டுப்பாடு

www.padippakam.com



இல்லாத வாழ்க்கை ஊரின் குழந்தைகளை எல்லாம் வசீகரித்தது. குழந்தைகளின் சநதோஷத்துக்கு எதிராக ஊரே திரண்டது.

ஊரின் மிகப்பெரிய மனிதரான ஒரு கடற்கரை அதிகாரியின் மகள் வீட்டைவிட்டு ஓடிவந்து இகானுடனே தங்கிவிட்டாள். தன் 13 வயது மகளை இகான் கடத்தி வந்து விட்டதாக அந்த அதிகாரி தந்த புகாரின் பேரில் இகான் கைது செய்யப்பட்டார். விசாரணையின்போது அவர் கடத்தி வரவில்லை என்பது வெளியானாலும் ''நிர்வாண ஓவியங்களை குழந்தைகள் பார்க்கும் விதமாக வீட்டில் வைத்திருந்த'' குற்றத்துக்காக 24 நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அந்த ஓவியங்கள் கோர்ட்டுக்கு கொண்டு வரப்பட்டு நீதிபதி முன்னிலையில் அழிக்கப்பட்டன. செலீ ஊரை விட்டு வெளியேற்றப்பட்டார். ஊரின் குழந்தைகள் தவறு என்ன என்று புரியாத திகைப்பில் மௌனத்தில் வீழ்ந்து கிடந்தார்கள். விளையாட்டுகள் மறைந்தன. தெருக்களில் வெறுமை வீசியடித்தது.

சிறை வாழ்க்கை இகானை மிகவும் பாதித்தது. ஊர் கூடி ஓவியங் களை அழித்தது அதைவிட கடுமையாகப் பாதித்தது.

சிறைக்குள்ளே இருந்தபடி தனது நிர்வாண ஓவியங் களை வரைந்து கொண்டிருந்தார் இகான். ''நான் தண்டிக்கப் படவில்லை. புனிதமாகிக் கொண்டிருக்கிறேன். (Iam not Punished. Iam Purified.)

இகானின் படைப்புகளில் இந்த சுய ஓவியங்களே (Self Portrait) அதிகம். ''மனித வாழ்வின் மிக முக்கியமான முகங்கள் சுய ஓவியங்களிலும் சாவைப் பற்றிய ஓவியங்களிலும்தான் வெளிப்படுகின்றன. சுயஓவியம் ஒரு குழி ஆடியைப்போல செயல்பட்டு உலகின் அனுபவமும் சுய அனுபவமும் ஒருங்கிணைந்து ஒரே பிம்பமாகிக் குவிகின்றன.'' என்று சொல்லும் இகான் தன் எல்லா சுயரூப ஓவியங் களிலும் தன் உடம்பை சிதைத்து சில உறுப்புகளின் தொகுப்பாகக் குறுக்கி வரைகிறார்.

''நிலைக்கண்ணாடியில் தோன்றும் என் பிம்பம் போன்ற முழுஅளவிலான என் ரூபத்தைப் பார்க்கையில் நான் என்னை - என் சுயத்தை - மட்டுமே பார்க்க நேரிடுகிறது. கை கால்கள் இல்லாத ஒரு முண்டமாக என்னை வரைந்து கொள்ளும் போதுதான் எனக்குள்ளே என்ன நடக்கிறது - நான் எதனாலெல்லாம் ஆக்கப்பட்டிருக்கிறேன் - இப்பிரபஞ்சத்திலிருந்து எதையெல்லாம் நான் உள்வாங்கியிருக்கிறேன் - என் சுயம் இவ்வுலகுக்கு எதையெல்லாம் தந்து கொண்டிருக்கிறது - என்னைக் கூர்மையாக ஊடுருவிப் பார்க்கிற சக்தி எனக்கு இருக்கிறதா?- எந்த அகத்தூண்டுதல்கள் என்னை வசீகரித்து இமுக்கின்றன - எவை என்னை வழி நடத்துகின்றன - என்பது போன்ற பலவும் காட்சிப்புலனா கின்றன. சிதைக்கப்பட்ட என் சுயரூபத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதுதான் நான் என்பது இல்லாமல் ஆவியாகிக் கரைந்து போகிறேன்.''

உள்நோக்கிய பயணத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்த இகான் அதை ஒரு மாயாவாதமாக - உடம்பி லிருந்து பிரிக்கப்பட்ட ஆன்மீக வாதமாகப் பார்க்கவில்லை. மாறாக உடம்பு என்ற ஊடகத்தின் வழியாக வெளிப்படும் ஆன்மசக்தியின் பிறப்பிடங்களையும் உலக வாழ்வோடு அது கொள்ளும் உறவின் வெளிப்பாடுகளையும் தேடுகிற பயணமாகவே சுயரூப ஓவியங்களைக் கண்டார்.






படிப்பகம்

சிறையிலிருந்து விடுபட்டதும் அந்தக் காயத்தை ஆற்று வதற்காகவும் -'அப்படி ஒன்று தன் வாழ்வில் நிகழ வில்லை என்று மறுப்பதற்காகவும் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பயணம் செய்து வேறு வேறு நிலப்பரப்புகளில் தன்னை முற்றிலுமாகத் தொலைத்துவிட்டு புதுசாகி மீண்டும் வியன்னாவுக்கு வந்து சேர்ந்தார்.

தோழி வால்லியுடன் தங்கியிருந்த வீட்டின் எதிர்ச் சாரியில் இருந்த சகோதரிகளான இரண்டு பெண்களின் மீது (எடித் மற்றும் அடீல்) ஈடுபாடு கொள்கிறார் இகான். ஒரு விடலைப் பையனைப்போல எல்லாவித அசட்டுக் காரியங்களும் செய்து அப்பெண்களின் மனதில் இடம்பிடிக்க முயற்சிக்கிறார். இணைபிரியாத சகியாக இகானின் கலை மேதமையைப் புரிந்துகொண்ட தோழி வால்லிக்கு இது அதிர்ச்சி தருகிறது. இச்சமயத்தில் இகானின் இளைய தங்கை கெர்ட்டியின் திருமணமும் நடந்தது. கெர்ட்டியின் திருமணத்தை ஒரு பேரிழப்பாக தனக்குள் இகான் உணர்ந்தார். மிகுந்த மனக்குழப்பத்திலிருந்த இகான் எடித் - அடீல் சகோதரிகளுடன் கொண்ட நேசத்தையே அன்றைய நெருக்கடி மனநிலையிலிருந்து விடுபடும் வழியாகக் கண்டார். இருவரையும் தனக்குத் திருமணம் செய்து தருமாறு அவர்களின் குடும்பத்தாரிடம் சென்று பேசினார். அவர்களுக்கு இகானின் கோரிக்கை புரியவில்லை. திகைத்தார்கள்.

**'என் ஓவியங்கள் கிழிந்த சுயத்தின் நவீன உணர்தலாகும்''**



எப்போதும் ஒன்றாகவே இருந்து ஒன்றாகவே நடந்து - ஒன்றாகவே பேசி - ஒன்றாகவே இகானுடன் பழகி - என்று இருவரையும் 'ஒன்றாக'த்தான் இகான் பார்த்தார். பிரித்துப் பார்க்கவில்லை. இரு பெண்களும் சேர்ந்த 'ஒன்றை'த்தான் இகான் நேசித்ததாகக் கூறினார். தனித்தனியாக அவர்களில் யாரையும் தான் காதலிக்கவில்லை. இருவரும் சேர்ந்திருக்கும்போதுதான் ஒரு ஜீவத் துடிப்பும் ஒளிவட்டமும் தோன்றுவதாக இகான் நம்பினார். இகானின் விளக்கம் யாருக்கும் புரியவில்லை. ஆனால் இருசகோதரிகளில் ஒருவரைத்தான் மணம் செய்து கொள்ளமுடியும் என்ற 'கசப்பான'சமூக நியதிக்கு கட்டுப்பட்டு இளையவரான 'எடித்'தை திருமணம் செய்துகொள்ள முடிவு செய்கிறார்.

வெறும் மாடலாக மட்டுமின்றி இணைபிரியாத காதலி போல தோழியாக இகானுடன் இதுவரை வாழ்ந்து வந்தும் கூட தன்னை ஒரு பொருட்டாகவே இகான் கருதாதது கண்டு உடைந்து நொறுங்கிப்போன வால்லியிடம் கல்யாணம் ஒன்றும் பிரச்னையில்லை. நாம் எப்பவும் போல சேர்ந்து வாழலாமே என்கிறார் இகான். வால்லி மறுக்கிறார். அப்படி யானால் கோடை மாதங்களில் மட்டுமாவது நாம் சேர்ந்து வாழ்ந்து கொள்ளலாம் என்கிறார். அந்தஸ்து குறைவான தன்னைப் புறக்கணித்து எடித்தை மணக்க முடிவு செய்து விட்ட இகானின் மறுபுறத்திலிருந்து வெளிப்பட்ட 'ஆண்' முகத்தைக் கண்டு விரக்தியடைந்த வால்லி இகானிடமிருந்து தப்பிஓடி வியன்னாவை விட்டே வெளியேறினாள். அது 1915. முதல் உலகப்போர் ஐரோப்பாவை சிதைக்கத் துவங்கியிருந்தது. போரின் அழிவுகளுக்கு ஊடாகத் தன் மனதின் அழிவைச் சுமந்து கொண்டு வால்லி அலைந்து திரிந்தாள். உயிரை

www.padippakam.com



வெறுத்துப் போர்முனை ஒன்றில் செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்ந்து சேவைசெய்யப் போய்விட்டாள். சில மாதங்களில் நோய்வாய்ப்பட்டு அங்கேயே இறந்தும் போகிறாள் - ஓவியங்களில் மட்டும் புதுக்கருக்கு அழியாத செலீயின் வால்லியாக தொடர்ந்தபடி.

வால்லிக்குத் தான் துரோகம் செய்துவிட்டதாக சுயநினைவுக்கு வந்த பின்னர் வருத்தப்பட்டு இகான் தன் நண்பருக்கு கடிதம் எழுதுகிறார்.

ஆனால் வருத்தப்பட அதிக கால அவகாசம் இருக்க வில்லை. முதல்உலகப்போர் எனும் இருள் ஐரோப்பாவை கவ்விக்கொண்டு வீட்டுக்கு ஒருவரை போர்க்களத்துக்குத் தள்ளியது. எடித் - இகான் திருமணம் நடந்த மூன்றாவது நாள் போர்க்களம் இகானை இழுத்துக் கொண்டது. தூரிகை தொட்ட கைகள் பதுங்கு குழிகள் தோண்டிக்கொண்டிருந்தன. 1915 ஜுன் 17-ல் திருமணம். ஜுன் 21 ல் பதுங்கு குழி.

1916 ல் போர்க்கைதிகளை அடைத்து வைக்கும் முகாம் ஒன்றுக்கு மாற்றப்பட்ட இகான் - அம்முகாம் சண்டைக்கோட்டில் இல்லாமல் ஒதுங்கிய குக்கிராமம் ஒன்றில் அமைந்திருந்ததால் மனைவியுடன் வாழ அனுமதிக்கப்பட்டார்.

போர் இயல்பு வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் பாதித்தது போல ஓவியக் கண்காட்சிகளையும் விற்பனையையும் முற்றிலுமாக தடுத்துவிட்டது.

இச்சமயம் இகான் செலீயின் ஓவியங்களில் ஒரு எதிர் கலாச்சார-கலகக்குரல் - பீறிடுவதை உணர்ந்த ''டை ஆக்ஷன்''(Die Aktion) என்ற (பெர்லின் நகரிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த) இடதுசாரி பத்திரிகை இகானின் ஓவியங்களுடன் - இகானுக்காக சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டது. தொடர்ந்து இகானின் ஓவியக் காட்சி ஒன்றுக்கும் ஏற்பாடாகியது.

இப்போது இகான் கிரிமினல் குற்றவாளிகளையும் மன நோயாளிகளையும் மாடல்களாகக் கொண்டு படம் வரைவதில் தீவிரமாகிறார். 19-ம் நூற்றாண்டின் ஆஸ்திரியாவில் கலைகளின் எழுச்சியோடு கூடவே புதிய புதிய விஞ்ஞானக் கருத்துக்களும் மலர்ந்து கொண்டிருந்தன.

இன்ன உணர்ச்சியை வெளிப்படுத்த இன்ன ராகம் என்று இசையில் இருப்பதுபோல - இன்ன உணர்ச்சிக்கு இன்ன முகபாவம் என்பதும் இன்ன உணர்ச்சிக்கு முகத்தின் குறிப்பிட்ட இந்த தசை இப்படி அசையும் என்பதும் ஓவியத்திற்கு முக்கியமாயிருக்கிறது. இந்தத் தசைகளின் அசைவின் மின்சாரத்தைத் துல்லியமாகக் கணக்கிட விஞ்ஞானிகள் சிலர் அன்று முயன்று கொண்டிருந்தனர். ''மனிதர் மற்றும் மிருகங்களில் உணர்ச்சி வெளிப்பாட்டுவிதம்''(The Expression of the Emotions in man and Animals) என்று ஒரு புத்தகத்தை டார்வின் 1872 லேயே வெளியிட்டிருந்தார்.

முகபாவனையை - பாவத்தை - வைத்தே மனிதர்களின் குணாதிசயத்தை கணிக்க முயலும் விஞ்ஞானத்துக்கு ரூப (Portraits) ஓவியங்கள் பெரிதும் உதவின.

சிதைக்கப்பட்ட என் சுயரூபத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதுதான் நான் என்பது இல்லாமல் ஆவியாகிக் கரைந்து போகிறேன்.''




www.padippakam.com



இந்தப்பின்னணி ஒருபுறம் இருக்க - தன் சுயரூப ஓவியங்களின் வழியாகவே இந்த உலகையும் பிரபஞ்சத்தையும் காணவும் காட்டவும் முயன்ற இகான்செலீ நோயுற்ற மனிதர்கள் அதிலும் குறிப்பாக மனநோய்க்கு ஆளான (தன் அப்பாவைப் போன்று) மனிதர்கள் மற்றும் கிரிமினல் மனிதர் களையும் தன்னுள்ளே இருப்பதாகவே அடையாளம் கண்டு இந்நோய்க்கூறுகள் பிரதிபலிக்கும் தன் சுயமுகத்தை வரையத் துவங்கினார்.

ஒவ்வொரு கலைஞனும் மனநோய்க் கூறுகளுடன் தான் வாழ்கிறான். இச்சமூக ஒழுக்க நியதிகளுக்குள் அடங்க மறுத்து அதே சமயம் ரெட்டைத் தன்மையுடன் இயங்கும் இச்சமூக மனதைக் கிழித்து உள்முகம் காட்டி - தானே சமூகமும் சமூகமே தானுமாகி எல்லா குணாதிசயங்களுக்குள்ளும் தானே கூடுவிட்டுக் கூடு பாய்கிறவனாக - எல்லா குணாதிசயங்களின் துக்கங்களையும் உளைச்சல்களையும் தானே அனுபவிப்பவனாகவும் இருப்பதால் சதா காலமும் கொந்தளிப்புடன் திரிகிற மனநோயாளி போல் ஆக நேரிடுகிறது. மற்றவர்கள் சக மனிதர்களின் வாழ்வை - ஒரு பார்வையாளனாக நின்று பார்க்கும்போது கலைஞன் அந்த வாழ்வைத் தானே முழுதாக வாழ்ந்து அனுபவித்து மீண்டுதான் தன் படைப்புக்குள் நுழைகிறான்.



ரெட்டைத் தன்மையுடன் இயங்கும் இச்சமூக மனதைக் கிழித்து உள்முகம் காட்டி – தானே சமூகமும் சமூகமே தானுமாகி எல்லா குணாதிசயங்களுக்குள்ளும் தானே கூடுவிட்டுக் கூடு பாய்கிறவனாக – எல்லா குணாதிசயங்களின் துக்கங்களையும் உளைச்சல்களையும் தானே அனுபவிப்பவனாகவும் இருப்பதால் சதா காலமும் கொந்தளிப்புடன் திரிகிற மனநோயாளி போல் ஆக நேரிடுகிறது.

இகானைப் பொறுத்தவரை (பால்ய காலத்தில் இறந்து போன) தன் தந்தையின் பரிவும் அன்பும் அரவணைப்பும் பாராட்டும் மனநோய்க்கூறுகளால் சிதைவுற்றதால் மரணத்தைப் போலவே மனநோயும் அவருடைய கோடுகளிலும் வண்ணங்களிலும் சேர்ந்தே வந்து கொண்டிருந்தது. தவிரவும் நோயாளியின் முகபாவம் - மனநோயாளியின் முகபாவம் - எவ்விதப்பூச்சும் மறைப்பும் இன்றி அசலாக அப்படியே வெளிப்படுவது அல்லவா?

''என்னைப்போல என் அப்பாவை நேசித்தவர்கள் இந்த உலகில் யாரும் இருக்கிறார்களா என்ற சந்தேகம் எனக்கு அடிக்கடி வரும். அடிக்கடி நான் ரயில் தண்டவாளங்களை நோக்கி ஈர்க்கப்படுவதும் கல்லறைகளுக்கு சென்று சுற்றிச் சுற்றி வருவதும் ஏன்? அங்கெல்லாம் நான் என் அப்பாவை - அந்த வலியை - அந்த நோயை - அந்த அன்பை - தீவிரமாக உணர்கிறேன். அப்பா நடந்து பழகிய அந்தப்பாதையில் அப்பாவின் கால்தடத்தின் மீது என் கால் வைத்து நடப்பதான பாவனையே நான் இப்போதும் அப்பா வுடன் தொடர்ந்து கொண்டிருக்கிற உரையாடலாக இருக்கிறது.''

அப்பாவின் மனநோய் ரேகைகள் படிந்த முகத்தைத் தன முகமாகவே தன் சுயரூபஓவியங்களில் தரிசித்தார் இகான்.

அப்பாவைப்போல இகானை அதிகம் பாதித்தவர் கிளிம்ட். 1918 பிப்ரவரி 6 ஆம்நாள் இறந்து போனார். (1862-1918). ஒரு வெற்றிடம் வியன்னாவிலும் இகான் மனதிலும் ஏற்பட்டது.

கிளிம்ட் போட்ட பாதையில் நடந்துசெல்லும் அவரது உண்மையான வாரிசு இகான்செலீதான் எனறு வியன்னா அங்கீகரித்தது.

படிப்பகம்

www.padippakam.com

முதல் உலகப்போரின் அழிவுகள் இகானின் கலை மனதின் போக்கில் மாற்றங்களைக் கொண்டுவந்தன. அரசுகள் அமைச்சர்கள் அதிகாரிகள் தேசங்கள் எல்லைகள் எல்லாவற்றின் மீதும் நம்பிக்கை இழந்த இகான் சர்வதேச அளவில் புதிய மதம் ஒன்று உருவாக வேண்டுமென விரும்பினார். அந்த மதத்தின் கடவுளாக கலைஞன் இருப்பான். கலைஞன் மட்டுமே இந்த உலகுக்கு ஏதாவது 'சொல்லும்'தகுதி படைத்தவன் என்ற முடிவுக்கு வந்தார். இந்தப்பார்வை - கலைஞனை ஒரு தீர்க்கதரிசியாக பார்க்கும் பார்வை - ஏற்கனவே இகானிடம் இருந்து வந்ததுதான் என்றாலும் இப்போது அது மிகவும் வலுப்பட்டது.



மரணம்/ செலீ

''போர்க்கால ஓவியங்கள்'' எனும் தலைப்பில் ஒரு ஓவியக் கண்காட்சியைத் தயாரித்து ஐரோப்பா முழுவதும் அனுப்பி வைத்தார். ''நன்றாக வாழ்ந்த ஒரு நாகரிகத்தின் மிச்ச சொச்சங்கள் இவை'' என்று அப்படங்கள் பற்றிக் குறிப்பு எழுதினார். ருஷ்யப் போர்க் கைதிகளுடன் சிறை முகாமில் நன்கு பழகிய இகான் ''நம் ஆஸ்திரியாவைவிட மிக வலுவான ஆன்ம பலம் உள்ளதாக அவர்களின் தேசம் இருப்பதை நான் உணர்கிறேன்'' என்று 1917 ல் தன் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார்.

உலகப்போரின் படுகொலைகளால் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் வீசியடித்தது பிணவாடை. புதிய புதிய நோய்க்கிருமிகள் புறப்பட்டு மக்களைக் கூட்டம் கூட்டமாக அழித்தன.

வியன்னா கலைக்குழுமத்தின் தலைவராக இகான் 1918 ல் தேர்வு செய்யப்பட்டார். ஆனால் பால்யகாலம் முதல் இகானை துரத்திவந்த மரணம் 1918 அக்டோபர் 28 அன்று இகானின் மனைவி 'எடித்'தை அடித்துச் சாய்த்தது. போர் கிளப்பிய விஷக்காய்ச்சலால் எடித் மடிந்த மூன்றாவது நாள் 31 அக்டோபர் 1918 அன்று இகானை மரணம் இழுத்துச்சென்றது.

செபாஸ்டினாக செலீ....




''எல்லாவற்றுக்கும் மேலாக
அவன் ஒரு கலைஞன்
மகத்தான ஆன்ம பலம் உடையவன்
வெளிப்படுத்துகிறவன்.
உடன் உணர்கிறவன்
நடுங்கும் ஒளி.
கதகதப்பு.
மனிதரில் எல்லாம் கூடுதலான
கருணை மிக்கவன்
தேடிக்கொண்டே இருப்பவன்.
அவனது எதிர்துருவத்தில்
இருப்பவன்
பழகிய தடத்திலேயே நடந்து தேயும்
இந்தத் தினசரி மனிதன்.

(இகான் செலீ எழுதிய கவிதை)

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்